# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 08
குவிப்பு - 11
பக்கங்கள் - 16

விலை ரூபா 20.00

நவம்பர் 2005

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


### அதிகரித்துவரும் தேவைகளைக் கருத்தில்கொண்டு

# தனி அலகாக இணைந்து இயங்குவதற்கு

# தமிழ் மறைமாவட்டங்கள் முஸ்தீபு!

## 25 ஆண்டுகளுக்கு முன்னர் தியோகுப்பிள்ளை ஆண்டகை எடுத்த முயற்சி மீள முன்னெடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், திருமலை-மட்டுநகர், மன்னார் ஆகிய மூன்று தமிழ் மறைமாவட்டங்களும் தமக்குள் இணைந்து ஒரு தனி அலகாக இயங்குவது பற்றி ஆலோசனை செய்துவருகின்றன. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்றைச் சந்திப்பதற்காக வத்திக்கான் நகர் சென்றிருந்தபோது யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவ்வேண்டுகோளை திருத்தந்தையிடம் சமர்ப்பித்தார். இவ்வேண்டுகோள் பின்னர் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியிடமும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. யாழ் ஆயரின் மேற்படி விண்ணப்பத்தில் திருமலை-மட்டுநகர் மற்றும் மன்னார் ஆயர்களும் ஒப்பமிட்டு இவ்வேண்டுகோளை வலியுறுத்தியிருந்தனர். பின்னர் இலங்கை ஆயர் பேரவையில் இவ்விடயம் கலந்தாலோசிக்கப்பட்டது. உடனடியாக இப்புதிய கட்டமைப்பை அங்கீகரிக்காவிடினும்' இம்மூன்று மறைமாவட்டங்களும் தனி அலகாக இணைந்து இயங்கலாம் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஆலோசனை வழங்கியுள்ளது.

### மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு

## 25 வருடங்கள் நிறைவு

### ஜனவரியில் யூபிலி விழா இறுதி நிகழ்வுகள்

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 25 வருடங்கள் (1981 - 2006) நிறைவுபெறுவதை முன்னிட்டு 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆ[illegible] வளாகத்தில் யூபிலி விழா இறுதி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணிக்கு யூ[illegible]லி விழாத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

### மன்னார் மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்த

## உத்தியோகபூர்வ ஆய்வு முயற்சிகள் ஆரம்பம்

மன்னார் மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான பூர்வாங்க ஆய்வு முயற்சிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. 2006ம் ஆண்டு ஜனவரி 29ம் திகதி தோட்டவெளியில் நடைபெறவுள்ள மன்னார் மறைமாவட்ட யூபிலி விழாத் திருப்பலியின்போது மன்னார் மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான உத்தியோகபூர்வ ஆய்வு முயற்சிகள் ஆரம்பிக்கப்படும் பிரகடனத்தை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் வெளியிடுவார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

### கொழும்பு பேராயரும் யாழ் ஆயரும்

## வத்திக்கான் ஆயர் பேரவையில் பங்கேற்பு



கொழும்புப் பேராயர் யாழ் ஆயர்

கொழும்புப் பேராயரும் ஆசிய ஆயர்கள் பேரவையின் செயலாளருமாகிய மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் வத்திக்கானில் நடைபெற்று முடிந்த 11வது ஆயர் பேரவையில் பங்கேற்றனர்.

ஒக்ரோபர் மாதம் 01ந் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை நடைபெற்ற இந்த ஆயர் பேரவையில் "நற்கருணை திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் ஆதாரமும் மையமுமாக விளங்குகிறது" என்ற கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டது. திருத்தந்தையின் விசேட அழைப்பின்பேரில் பேரவைத் தந்தையர்களில் ஒருவராக கொழும்பு பேராயர் அவர்களும், இலங்கை ஆயர் மன்றத்தின் பிரதிநிதியாக யாழ் ஆயர் அவர்களும் இதில் பங்கேற்றனர். மேற்படி ஆயர் பேரவையின் கூட்டத்துடன் நற்கருணை ஆண்டும் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### துறவற வாழ்வின் வெள்ளிவிழாக் காணும்

## அருட்சகோதரர் ச. கிறேசியன்பிள்ளை



மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள முருங்கன் இசைமாலைத்தாழ்வு கிராமத்தைச் சேர்ந்தவரும் அன்புச் சகோதரர் துறவற சபையைச் சார்ந்தவருமான அருட்சகோதரர் ச. கிறேசியன்பிள்ளை (F.C) அவர்கள் தமது துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை 25.5.2005 நிறைவு செய்தார். வெள்ளி விழா வைபவம் 13.10.2005ல் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் திருப்பலியுடன் நடைபெற்றது. மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

தற்போது ஹற்றனில் பங்குப் பணிபுரியும் அருட்சகோதரர் கிறேசியன்பிள்ளை அவர்கள் கிழக்குப் பகுதியிலேயே தனது பெரும்பாலான பணிக்காலங்களைச் செலவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 12 பக்கம்)

### மாற்றாற்றல் உள்ளோரின் புனர்வாழ்வுக்காக

## புதிய கட்டடம் 'பமிலியன் வசந்தகம்'



மாற்றாற்றல் உள்ளோரின் (மூளை வளர்ச்சி குறைந்த சிறுவர்களின்) புனர்வாழ்வை சிறப்பாக செயற்படுத்துவற்காக புதிய நிலையம் ஒன்று மன்னார் பெற்றாவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை மன்னார் ஆயர் அவர்கள் கடந்த 04. 09. 2005 அன்று திறந்துவைத்தார். இயேசு சபை அகதிப் பணியினரும் (ஜே. ஆர். எஸ்) திருக்குடும்ப சகோதரிகள் சபையினரும் இந்நிலையத்தை அமைக்க நிதி உதவி வழங்கினர். மன்னார் ஆயர் அவர்கள் இதற்கான காணியை வழங்கியிருந்தார். அருட்சகோதரி ஜோசப்பின் மேரி அவர்கள் இந்நிலையத்திற்கு பொறுப்பாக இருந்து நடாத்தி வருகின்றார். தற்போது ஏறக்குறைய 15 மாற்றாற்றல் உள்ள சிறுவர்கள் இந்நிலையத்திற்கு வந்து தமது ஆளுமையை விருத்தி செய்கின்றனர்.

### மன்னாரில் அன்புக் கன்னியர்களின்

## உருவாக்கற் பயிற்சி இல்லம் 'நிவேதனம்'



மன்னார் தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள அன்புக் கன்னியர்களின் *நிவேதனம்* என்ற உருவாக்கற் பயிற்சி நிலையக் கட்டடத்தின் தோற்றம் இது. கடந்த செப்ரம்பர் மாதம் 24ந் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை இதை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

## கல்விப் பணியில் கௌரவிக்கப்பட்டவர்கள்

வடகிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட கல்வி வலயங்களில் சிறப்பாகக் கல்விப் பணிபுரிந்தோருக்கு விருது வழங்கும் வைபவம் கடந்த ஒக்ரோபர் 6ந் திகதி திருகோணமலையில் இடம்பெற்றது. இதில் மன்னார் கல்வி வலயத்தில் இருந்து ஏழு பேர் இவ்விருதைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

சிறந்த ஆசிரிய ஆலோசகராக வங்காலையைச் சேர்ந்த திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும், சிறந்த அதிபராக உயிலங்குளம் றோ.க.த. பாடசாலை அதிபர் திருமதி எஸ். அமலதாசன் அவர்களும், சிறந்த ஆசிரியர்களாக திருமதி அன்னமலர் இம்மானுவேல் (மன். தோட்டவெளி அ.த.க.பாடசாலை), செல்வி எஸ். மெற்றில்டா (மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), திருமதி. அசம்ரா திபூர்சியஸ் (மன். உயிலங்குளம் றோ.க.த. பாடசாலை), திருமதி சகிலா (மன்.பொன்தீவுகண்டல் றோ.க.த. பாடசாலை) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தங்கப்பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கல்விப் பணியில் கௌரவிக்கப்பட்ட இந்த ஆசிரியப் பெருமக்களை மன்னா மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றது.

# மன்னா

## சிறப்பு ஆசிரிய தலையங்கம்

## தமிழ் மறைமாவட்டங்கள் தனி அலகாக வேண்டும்

யாழ் மறைமாவட்டம் இலங்கையின் ஒரு பழம் பெரும் மறைமாவட்டம். யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரையிலான பிரதேசப் பகுதிகளை தன் மறைமாவட்ட அலகினுள் வைத்து இயக்கிய மறைமாவட்டம். காலத்தின் தேவை கருதியும் செயல்பாடுகளின் வசதி கருதியும் இம்மறைமாவட்டம் காலத்துக்குக் காலம் பல மறைமாவட்டங்களை தன்னிடம் இருந்து பிரித்து புதிய மறைமாவட்டங்களை உருவாக்கிக் கொண்டே வந்திருக்கின்றது.


மிக நீண்ட காலமாக தமிழ் மக்களின் நன்மை கருதி பெரும் பான்மையாக தமிழ் பேசும் மறைமாவட்டங்களை ஓர் அலகாக இணைத்து இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின்கீழ் இன்னுமொரு அலகை உருவாக்க வேண்டும் என்ற தேவை உணரப்பட்டே வந்திருக்கிறது. ஆனால் இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பது துரதிஸ்டவசமான ஒன்றாகும். அண்மையில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வத்திக்கான் நகருக்கு புதிய பாப்பரசரை சந்திக்கச் சென்றபோது விடுத்த வேண்டுகோள் இந்த நீண்டகாலத் தேவையை நிறைவு செய்வதற்கான ஒரு வேண்டுகோளாகவே இருந்தது. யாழ், திருமலை - மட்டுநகர், மன்னார் மறைமாவட்டங்களை இணைத்து அதனை ஒரு தனி அலகாக்கி செயற்பட அனுமதிக்க வேண்டுமென யாழ் ஆயர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.


1979ஆம் ஆண்டு ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய யாழ் ஆயராகிய மறைந்த மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தூரநோக்குடனும், செயல்பாட்டுத் திறனுடனும் சமர்ப்பித்த இந்த வேண்டுகோளுக்கு கொடுக்கப்பட்ட அதே பதிலே இப்போதும் வழங்கப்பட்டிருப்பது தமிழ் தலத்திருச்சபைகளின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கருதிய நிலையில் கூறப்பட்ட பதில் அல்ல என்றே எண்ணத் தோன்றுகின்றது. இது பொருத்தமான காலம் அல்ல என்று 25 ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்ட அதே பதில் இப்போதும் வேறு வார்த்தைகளில் சொல்லப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது.

யாழ், திருமலை - மட்டுநகர், மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் கூட்டாகத் தெரிவித்த இந்த வேண்டுகோளை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் வத்திக்கான் செயல்ப்பீடமும் ஒருவகையில் நிராகரித்து இருக்கின்றன என்றே எண்ணவேண்டியுள்ளது. இதனாலேயே தனி அலகாக இயங்கும் முடிவை இவர்கள் எடுத்திருக்கின்றார்கள். காலப்போக்கில் இந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கிகரிக்கப்படும் என்றாலும் அதுவரை பல முன்னேற்ற செயற்பாடுகளை முழுமையாக செயல்முறைப்படுத்த முடியாது போகலாம். இம் மறைமாவட்டங்களை இணைத்து தனி அலகாக்கி இலங்கைவாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தேவைகளை முறைப்படியாக கவனிக்க வேண்டிய வழிவகைகளை செய்யவேண்டிய காலம் கடந்துவிட்டது என நாம் இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம். மறைமாவட்டங்களைப் பிரிப்பதும் அவற்றை பிரதேச வாரியாகவும், பின்னணி வாரியாகவும் சிறு குழுக்களாக இணைப்பதும் திருச்சபையின் செயற்பாட்டிற்கு பெரிதும் துணைபுரியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இவ்வேண்டுகோள் நோக்கப்பட்டு ஆவன செய்யப்படவேண்டும். 1993ம் ஆண்டு நடாத்தப்பட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டிலும் இக்கருத்து மீண்டும் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது. 1995ம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வின் பின்னர் இவ்வெண்ணத்திற்கு உரிய செயல்வடிவம் கொடுக்ககூடிய சூழ்நிலை உருவாகவில்லை. 20 ஆண்டு கால கொடிய போரின் பின்னர் நிகழ்ந்த சுனாமி பேரழிவால் கத்தோலிக்க கரையோரப் பிரதேசங்கள் பாரிய அழிவுக்குள்ளாகியுள்ளன. இந்நிலையில் மேய்ப்புப்பணி திட்டமிடலுக்காகவும் ஒருங்கிணைப்பிற்காகவும், இணைச் செயற்பாட்டிற்காகவும் பல்வேறுபட்ட அப்போஸ்தலிக்க செயற்பாடுகளின் பகிர்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கடந்த மூன்றரை வருட காலமாக யுத்தமற்ற சூழ்நிலை போக்குவரத்திற்கும் பல முன்னேற்ற செயற்பாட்டிற்கும் வழிவகுத்துள்ள நிலையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். எனவே இம்மூன்று மறைமாவட்டங்கள் இணைந்த ஒரு தனி அலகினை உருவாக்க அனுமதிக்க வேண்டும் என்ற யாழ் ஆயர் வேண்டுகோளை வலியுறுத்த விரும்புகின்றோம்.

யாழ் ஆயரின் மேற்படி விண்ணப்பத்தில் திருமலை - மட்டுநகர், மன்னார் மறைமாவட்ட ஆயர்களும் ஒப்புதலிட்டு வலியுறுத்தியிருந்தனர். இதன் பின்னர் நடைபெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் இவ்விடயம் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன் பயனாக உடனடியாக இப்புதிய கட்டமைப்பை அங்கிகரிக்காவிடினும் மூன்று மறைமாவட்டங்களும் இணைந்து செயற்படுவதென ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இது ஒரு தனி அலகாக அமைக்கப்படும் சாத்தியங்கள் உண்டு.

அருட்பணியாளர் ரூபன் மரியாம்பிள்ளை
ஆசிரியர் - பாதுகாவலன்





## வாசகர் எண்ணங்கள்

### சூடு சுவை சுவாரசியம் குறையவில்லை!

அன்பின் மன்னா! நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. சூடு, சுவை, சுவாரசியம் குறையாமல் உள்ளன. குறிப்பாக விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி, மறையறிவுப் பகுதி, நீலநாடாவில் ஒரு பூ என்பன விறுவிறுப்பை ஏற்படுத்துவதுடன் விழிப்புணர்வையும் தந்துள்ளது. சபாஷ் மன்னா! நீ இனிவரும் காலங்களிலும் பல்சுவை கதம்பமாக உலகிற்கு ஒளி வீச வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

*க. ஜீவா சுந்தரபுரம், வவுனியா.*

### உள்ளங்களை கொள்ளை கொள்ளும் மன்னா!

எங்கள் இதயங்களை கொள்ளை கொள்ளும் மன்னாவே! நீ அனைவர் மனதையும் கொள்ளைகொண்டு வாசகர்களை கவர்கின்றாய். ஒவ்வொரு மாதமும் உன் வரவை பார்த்துக்கொண்டு இருக்கும் அளவுக்கு நீ உயர்ந்துள்ளாய். இன்றுபோல என்றும் சிறப்புடன் நீடுழி காலம் வாழ வாழ்த்துகிறேன். விசேடமாக மன்னா பத்திரிகை ஆசிரியருக்கு என் இனிய அன்பு வாழ்த்துக்கள்.

*எஸ். மேரி பொலின், ஆலங்குளம், வட்டக்கண்டல்.*

### அனைத்து அம்சங்களும் அருமை

மாத மலரென வலம் வரும் வாசமலர் மன்னாவிற்கு!
எனது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்கள். மேலும் உனது வருகை கண்டு, பெருமிதம் அடைகின்றேன். அனைத்து ஆக்கங்களும் அருமையிலும் அருமை. குறிப்பாக விவிலிய வினாவிடைப் போட்டி, மறையறிவை வளர்க்க மிகவும் துணைநிற்கின்றது. அத்தோடு, கவிதைப்பூக்கள், கொஞ்சம் சிரிங்க, பெரியப்பாவின் பதில், சிறுகதை, மொத்தத்தில் நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. மீண்டும் உன் பணி தொடர வாழ்த்துகின்றேன். *- சாள்ஸ் மேரி குயின்சிலி மொறாய்ஸ், ஆண்டு 10,மன். அரிப்பு றோ.க.த.க. பாடசாலை.*

### அடுத்த மாதம் எப்போ மலரும்?

என் மனதைத் தொட்ட மன்னாவே, உன் இனிய ஆக்கங்களான அன்னை திரேசாவின் விறுவிறுப்புத் தொடர், மருத்துவப் பொழிவு, புனித அந்தோனியார் தொடர்கதை, வேதசாட்சிகளின் வரலாற்றைக் கவிதையால் கூறும் நாவண்ணன் எழுதும் வித்தான காவியத் தொடர், குடும்பக் குவலயம் தரும் கருத்துக்கள் ஆகிய அனைத்துமே என் மனதை கவர்ந்துள்ளன. அடுத்த மாதம் எப்போ மலரும் என காத்திருக்கும் என்போன்ற நெஞ்சங்களை மகிழ்விக்க உன் சேவை தொடர்ந்தும் வளர்க.

*அ. கிறிஸ்ரீன், 7ம் வட்டாரம், விடத்தல்தீவு.*

## கருத்துக் களம்..... கருத்துக் களம்.....கருத்துக் களம்

### 16ம் பெனடிக்ரா? அல்லது 16ம் ஆசீர்வாதப்பரா?

## ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்பு செய்யப்படலாகாது!

அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன்;
தலைவர், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத் துறைகள், யாழ் பல்கலைக்கழகம்.

கத்தோலிக்க திருச்சபையின் தற்போதைய திருத்தந்தையை தமிழில் எவ்வாறு அழைக்க வேண்டும் என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் சில கத்தோலிக்கர் மத்தியில் நிலவுகின்றது என்பதை கடந்த இரண்டு மாதங்களில் வெளிவந்த "மன்னா" பத்திரிகை வாயிலாக அறியக்கூடியதாயுள்ளது. இத்தகைய கருத்து வேறுபாட்டிற்கான காரணத்தை திருவிவிலிய மொழிபெயர்ப்பு வரலாற்றின் பின்னணியிலும், கிறிஸ்தவத்தின் தமிழ் இலக்கியப் பண்பாட்டு மயமாக்கல் பின்னணியிலும் நோக்கலாம்.

திருவிவிலியம் உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ள நூல் என்ற சிறப்புப் பெற்றுள்ளது. எனினும், திருவிவிலிய மொழி பெயர்ப்பின் போது, தமிழ் மொழி தவிர்ந்த வேறு எந்த மொழியிலும், திருவிவிலியத்தில் தோன்றும் ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை என்னும் விடயம் முக்கியமாக இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டும். மேலும், மொழிபெயர்ப்பின்போது, ஆட்களின் பெயர்கள் ஒலிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமே ஒழிய மொழிபெயர்ப்பு செய்யப்படக் கூடாது என்பது மொழிபெயர்ப்பு விதியாகும். எனினும், சில வரலாற்று நிகழ்வுகள் காரணமாக கத்தோலிக்கரால் மேற்கொள்ளப்பட்ட தமிழ்த் திருவிவிலிய மொழி பெயர்ப்பில் மட்டும் சில ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

கத்தோலிக்க இலக்கிய மொழிபெயர்ப்பு வரலாற்றை நோக்கும் போது, முதன் முதலில் தோன்றிய நூல் காற்றில்லா (Cartilha1 554) ஆகும். இது, Transliteration முறையில் அதாவது, உரோமைய எழுத்துக்களைக் கொண்டு, தமிழ் பதங்கள் ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டு ஆக்கப்பட்ட நூலாகும். இதுவே தமிழில் வெளிவந்த முதல் செபப் புத்தகமாகும். இதில் திருவிவிலியத்தில் தோன்றும் ஆட்களின் பெயர்களெல்லாம் எபிரேய மொழியில் உள்ளபடி, ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக பேதுரு, பாவிலு, யோவான் எனவே இடம்பெற்றுள்ளது.

தமிழ் எழுத்துக்களில் அச்சேறிய முதல் தமிழ் நூலும், அதே வேளையில் கிறிஸ்தவ நூலும் "தம்பிரான் வணக்கம்"(1578) என்னும் நூலாகும். இதனைத் தொடர்ந்து, "கிரீசித்தியானி வணக்கம்"(1579), "அடியார் வரலாறு" (Flos Sanctorum (1586) என்னும் நூல்களும் தமிழில் வெளியாகின. இம்மூன்று நூல்களையும் எழுதியவர் இயேசு சபையைச் சேர்ந்த வண. கென்றிக் கென்றிக்ஸ் (1520 - 1600) அடிகளாகும். இந்த நூல்களிலும் திருவிவிலியத்தில் தோன்றும் ஆட்களின் பெயர்கள் ஒலிபெயர்ப்பு வடிவத்திலேயே இடம்பெற்றுள்ளது. அதன்படி எடுத்துக்காட்டாக பேதுரு, பாவிலு, யோவான் என்னும் பெயர்களே இடம்பெற்றுள்ளன.

இவ்வாறாயின், திருவிவிலியத்தில் இடம்பெறும் ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட மரபு எவ்வாறு தோன்றியது என்னும் வினா எழுவது முறையானதே. றொபேட் டீ நொபிலி (தத்துவப் போதகர் 1557 - 1656) யோசப் கொன்ஸ்ரன்ரயின் பெஸ்கி (வீரமாமுனிவர் 1680 - 1747) ஆகிய இருவரும் கிறிஸ்தவம் தமிழில் பண்பாட்டு மயமாக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்டார்கள். இவர்கள் தங்கள் பெயர்களையே தமிழ் பெயர்களாக மாற்றிக்கொள்ளுமளவிற்கு பண்பாட்டு மயமாக்கலில் ஆர்வம் கொண்டவர்களாக கத்தோலிக்க மறையைப் பரப்பியவர்களாவர். இவர்கள் கிறிஸ்தவத்தின் தமிழ் இலக்கியப் பண்பாட்டு மயமாக்கலின் ஒரு பகுதியாகவே திருவிவிலியத்தில் தோன்றும், சில ஆட்களின் பெயர்களையும் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார்கள். (தொடர்ச்சி 12ம் பக்கம்)

## சிரிக்க சிந்திக்க

### நல்ல மறையுரையா?



ஒரு இளம் குருவானவர் அடுக்கு மொழியில், மிடுக்கு நடையில், புதுக்கவிதைப் பாணியில் மறையுரையாற்றினார். மேடைப் பேச்சும் தோல்வியடைந்துவிடும் அளவுக்கு அவரது மறையுரையில் தமிழ் மணம் வீசியதால், மக்கள் மெய்மறந்து ஆலயத்திற்குள்ளேயே கரவொலி எழுப்பி அவரைப் பாராட்டினார்கள்.

மக்களின் புகழ்ச்சி மழையில் நனைந்துபோன இளம் குருவானவர் தனது பெரிய குருவானவரைப் பார்த்து, "இன்று எப்படி இருந்தது எனது மறையுரை?" என்று கேட்டார். அதற்குப் பெரிய குருவானவர், "ரொம்ப நன்றாகத்தான் தமிழ் பேசுறீங்க ... வாழ்த்துக்கள்.... மக்களெல்லாம் கரவொலி எழுப்பினாங்க. நானும் உங்கட மறையுரையை கேட்டுக்கொண்டுதானிருந்தேன். ஆனா... உங்க மறையுரையில 3 தவறுகள் இருந்தன" என்று சொன்னார். "என்ன? எனது மறையுரையிலே தவறுகளா? எவையென்று சொல்லுங்கள் பார்ப்போம்" என்றார் இளம் குருவானவர்.

பெரிய குருவானவர் ஒவ்வொன்றாகச் சொல்ல ஆரம்பித்தார். "முதல் தவறு: இயேசு நமது பாவங்களுக்காக சுட்டுக் கொல்லப்படவில்லை, சிலுவையில் அறைந்துதான் கொல்லப்பட்டார்.....இரண்டாவது தவறு: இயேசு இமய மலையிலல்ல கல்வாரி மலையில்தான் கொல்லப்பட்டார்... மூன்றாவது தவறு: மறையுரையை "ஆமென்" என்று சொல்லித்தான் முடிக்க வேண்டும் வாழ்க தமிழ் என்று சொல்லி முடிக்கக் கூடாது."

## ஈழத்துக் கிறிஸ்தவ இலக்கியங்கள் பற்றிய தகவல் சேகரித்தல்

ஈழத்தில் எழுந்த கிறிஸ்தவ இலக்கியங்கள் தொடர்பான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட இருப்பதால் இவை தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னர் வெளியிடப்பட்ட - கிறிஸ்தவம் தொடர்பான கவிதை, கதை, நாடகம், இன்னும் வேறு இலக்கியங்கள் சார்ந்த நூல்களை வெளியிட்டவர்கள் அவை தொடர்பான தகவல்களை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவாக வேண்டப்படுகின்றீர்கள்.

அருட்பணியாளர். பா. நேசன்,
மறைக்கல்வி நிலையம், மன்னார்.
தொலை பேசி இல. 023 - 2232377

## விபரங்கள் திரட்டப்படுகின்றன!

எமது நாட்டில் வாழும் கத்தோலிக்க எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்களைத் திரட்டும் பணி தொடர்கின்றது. தமது விபரங்களை அனுப்பிவைக்க விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் கத்தோலிக்க சஞ்சிகைகள், பத்திரிகைகளின் விபரங்களையும் திரட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே மறைமாவட்ட ரீதியில், பங்கு மட்டத்தில் அல்லது தனிப்பட்ட முறையில் வெளியிடப்படும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் சம்பந்தமான விபரங்களை எமக்கு அனுப்பி வைக்கவும். முகவரி :

S. Gnanapragasam, Secrtary "Thai" Magazine Committee,
Colombo Josep Vaz Mandram, 48, Bandaranayake Mawatha,
Colombo 12. Tel: 2864167

தமிழ் மக்கள் விடிவை நோக்கி நீண்ட காலம் காத்திருக்கின்றார்கள்

# பொறுத்தது போதும் என பொங்கி எழும் காலம் வந்துவிட்டது!

## பொங்கு தமிழ் நிகழ்வு அறிக்கையில் யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை

தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகத் தெளிவாகக் காட்ட வேண்டிய ஒரு காலம் வந்து விட்டது. பொறுத்தது போதும் என அவர்கள் பொங்கி எழும் நேரம் வந்துவிட்டது என யாழ் பொங்கு தமிழ் நிகழ்வை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கடந்தகாலப் போரும் அதன் விளைவுகளும் தமிழ் மக்களை மிக மோசமாகத் தாக்கியுள்ளது. இருப்பினும் யுத்த நிறுத்தத்திலும், பேச்சு வார்த்தையிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் நம்பிக்கை கொண்டவர்களாக தமிழ் மக்கள் ஒரு விடிவை நோக்கி நீண்டகாலம் காத்திருந்தார்கள்.

அவர்கள் நம்பி எதிர்பார்த்தது எதுவும் நடைபெறாமல் காலம் வேகமாக நகர்ந்துகொண்டு சென்றது. சுனாமி இயற்கைப் பேரழிவு பொதுக்கட்டமைப்பில்கூட நீதியான இணக்கம் ஒன்றைக் காணமுடியாத அரசு, எப்படி தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போகின்றது என்பது ஒரு கேள்வியாகவே எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் தன்னாட்சி அதிகாரத்தோடு வாழும் உரிமையையும் பெற்றுத்தர சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ் மக்கள் பேரால் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'மன்னார் மாவட்டத்தின் காற்பந்தாட்டம்' நூல் வெளியீட்டு விழா








அகில இலங்கை ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் மன்னார் மாவட்டத்தின் காற்பந்தாட்டத்துறை தனக்கென தனியானதொரு இடத்தினைப் பெற்றுள்ளமை யாவரும் அறிந்த விடயம்.
இவ்வாறான சிறப்பு மிக்க இத்துறையின் கடந்தகால நிகழ்வுகளையும், நிகழ்கால நிகழ்வுகளையும் இயன்றவரை சேகரித்து, மன்னார் மாவட்டக் காற்பந்தாட்ட லீக், "மன்னார் மாவட்டத்தின் காற்பந்தாட்டம்" எனும் நூலினை வெளியீடு செய்துள்ளது. இந்நூலை எழுதியவர் மன். சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. தர்மராஜா ராஜு அவர்கள். மேற்படி நூல் வெளியீட்டு விழா 17.08.2005 அன்று மன்னார் Y.M.C.A மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

## பங்கு தள சங்கதிகள்



### பங்குகளில் நற்கருணைப் பேரணி

நற்கருணை ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் நற்கருணைப் பேரணிகள் கடந்த மாதத்தில் இடம்பெற்றன. முருங்கன், உயிலங்குளம், பம்பைமடு, அடம்பன், தலைமன்னார், பண்டிவிரிச்சான், அரிப்பு போன்ற இடங்களில் இந்த நற்கருணைப் பேரணிகள் நடாத்தப்பட்டன.

### சாந்திபுரத்தில் புதிய ஆலயம்

மன்னார் புகையிரத வீதியில் உள்ள சாந்திபுரம் என்ற புதிய குடியேற்றத்திட்டக் கிராமத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கிறிஸ்து அரசர் ஆலயம் கடந்த 22.10.2005 மன்னார் ஆயர் மேதகு யோசவ் ஆண்டகை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து ஆயரின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

### *இளைஞருக்கான ஒன்றுகூடல்*

வவுனியா மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான ஒன்றுகூடல் முதல் முறையாக கோமரசன்குளம் பங்கில் 08.10.2005 அன்று இடம்பெற்றது. பங்குத்தந்தை சகாயநாதன் அடிகளார் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்விற்கு மன்னார் மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்தந்தை ஞானாதிக்கம் அடிகளார் கலந்துகொண்டு இளைஞர் யுவதிகளுக்கான பல நல்ல கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். இந்நிகழ்வில் 80ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டார்கள். மதிய உணவின்பின் கல்வாரியில் சிரமதானம் நடைபெற்றது. *செயலாளர் வின்சலா.*

### சிறுவர்களுக்கான நற்கருணைப் பாசறை

முருங்கன் மறைக்கோட்டத்தைச் சேர்ந்த அனைத்து திருப்பாலத்துவ சபை சிறார்களுக்குமான நற்கருணைப் பாசறை ஒன்றுகூடல் கடந்த 17.10.2005 அன்று நானாட்டான் பங்கில் நடைபெற்றது.
இதில் 250க்கும் மேற்பட்ட சிறுவர்களும் 15 ஊக்குவிப்பாளர்களும் பங்கேற்றனர். இந்நிகழ்வை முருங்கன் மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை இணைப்பாளர் வசந்தகுமார் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.
- எவியுறிதா, நானாட்டான்

### தேவன்பிட்டியில் புதிய பங்குமனை

தேவன்பிட்டியில் புதிதாகக் கட்டப்பட்ட பங்குமனைத் திறப்புவிழா கடந்த 20.10.2005 அன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. மன்னார் ஆயர் யோசவ் ஆண்டகை அவர்களினால் புதிய பங்குமனை திறந்துவைக்கப்பட்டு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தேவன்பிட்டி பங்கில் அடிப்படை வசதிகள் கொண்ட பங்குமனை இல்லாத குறை வெகுகாலமாக உணரப்பட்டு வந்தது. அதன் அடிப்படையில் மன்னார் ஆயர் அவர்களின் வழிநடத்தலில் பங்குத் தந்தை நீ. பாக்கிய றஞ்சித் அடிகளாரின் பெருமுயற்சியில் மக்களின் ஒத்துழைப்போடு இப்புதிய பங்குமனை கட்டப்பட்டுள்ளது.

### யாழ் திருமறைக்கலாமன்றத்தின் கூத்துருவ நாடக நிகழ்வு


மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் யாழ் திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கிய '*கொல் ஈனுங் கொற்றம்*' என்னும் கூத்துருவ நாடகம் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த 18.10.2005 அன்று நடைபெற்ற இந்நாடக நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் கச்சேரி திட்டப்பணிப்பாளர் திரு A. பத்திநாதன் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் திரு. யோன்சன் ராஜ்குமார் அவர்களும் மன்னா பதிப்பாசிரியர் அருட்பணியாளர் நேசன் அடிகளாரும் கலந்துகொண்டனர். ஈழத்தின் பல்வேறு இடங்களில் உள்ள கூத்து மரபுகள் அனைத்தையும் (ஆட்டம், ராகம்) ஒன்றிணைத்து ஒரு புதிய பாணியில் பரீட்சார்த்த நாடகப் படைப்பாக இக்கூத்து நாடகம் அமைந்திருந்தது. இது பலரது பாராட்டையும் பெற்றது.

### குருக்களுக்கான புதிய நியமனங்கள்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய நியமனங்கள் சில அண்மையில் மன்னார் ஆயரினால் மேற்கொள்ளப்பட்டன. அவை வருமாறு,

அருட்பணியாளர் ஏ. சகாய நாதன் - பங்குத்தந்தை - கோமரசன்குளம்
அருட்பணியாளர் எஸ். அன்ரன் - பங்குத்தந்தை - முருங்கன் (தற்காலிகம்)
அருட்பணியாளர் எஸ். சத்தியராஜ் - உதவிப் பங்குத்தந்தை - பேசாலை
அருட்பணியாளர் எவ். எக்ஸ். றெஜினோல்ட் - உயர்கல்வி - அமெரிக்கா

### புதுப்பொலிவுடன் விளங்கும் நானாட்டான் புனித அடைக்கல அன்னை ஆலயம்



புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நானாட்டான் புனித அடைக்கல அன்னை ஆலயம் கடந்த செப்ரம்பர் மாதம் 8ந் திகதி மன்னார் ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு திருவிழாத் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. பங்கு மக்களின் அயராத உழைப்பினாலும் ஆயரின் நிதி உதவியினாலும் பங்குத் தந்தை செபஸ்ரியான் குருஸ் அடிகளாரின் வழிநடத்தலிலும் இவ்வாலயம் இனிதே கட்டி முடிக்கப்பட்டது.

### குருக்களுக்கான வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்தத் தியானம் இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் ஒக்டோபர் மாதம் 16ம் திகதி முதல் 22ம் திகதி வரையும், நவம்பர் மாதம் 6ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரையும் இரண்டு கட்டங்களாக பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாகாண அமலமரித் தியாகிகளுக்கான வருடாந்தத் தியானம் கடந்த ஒக்டோபர் மாதம் 17ம் திகதி தொடக்கம் 22ம் திகதிவரை மன்னார் ஞானோதய இல்லத்தில் நடைபெற்றது.

### கண்டிக் கருத்தமர்வில் மன்னார் ஆசிரியர்கள்

கடந்த ஓகஸ்ட் மாதம் 26 - 28ந் திகதிகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான மறைப்பணி சார்ந்த கருத்தமர்வு கண்டி தேசிய குருமடத்தில் நடைபெற்றது. இதில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 14 கத்தோலிக்க ஆசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### குடிநோயில் இருந்து விடுபட்டோரின் கலை நிகழ்வுகள்

குடிநோயில் இருந்து விடுபட்டு புதுவாழ்வு வாழ்ந்துகொண்டிருப்போரின் கலைநிகழ்வுகள் கடந்த 25.09.2005 அன்று மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார். இந்நிகழ்வை மன்னார் சர்வமத அமைப்பும், சேவா லங்காவும் இணைந்து ஒழுங்குசெய்திருந்தன.

### கரோல் பாடல் போட்டி

மன்னார் கல்வி வலயத்தினால் இவ்வாண்டு ஆங்கில கரோல் பாடல் போட்டி பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படுகின்றது. பிரபலமான ஆங்கில கிறிஸ்மஸ் பாடல்களை மாணவர்கள் அனைவரும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இப்போட்டி நடாத்தப்படுகின்றது. பாடசாலை மட்டத்தில் இப்போட்டிகள் நவம்பர் 2ம் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு பின்னர் வலயமட்டப் இப்போட்டிகள் டிசம்பர் 7ம் திகதி நடைபெறும். மூன்று குழுக்களாக நடாத்தப்படும் இப்போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

### பைபிள் டிப்ளோமா *சான்றிதழ் விழா*

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 2005ம் ஆண்டு நடாத்தப்பட்ட புதிய ஏற்பாடு 6 மாத விவிலிய கற்கை நெறியில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் மாதம் 22ந் திகதி மன்னார் பொதுநிலையினர் பணியகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் இக்கற்கை நெறியை நெறிப்படுத்தியிருந்தார்.

### கருக்கலைப்பு தொடர்பான கருத்தமர்வு

திருமணம், கருக்கலைப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றை நடாத்தவென சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று மன்னாருக்கு வருகை தந்தது. கடந்த 23.10.2005 அன்று புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கை குடும்ப ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளார் ஒழுங்குசெய்திருந்தார்.

### அருட்பிரகாசம் அடிகளாரின் தந்தையார் இறைபதம்

வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பிரகாசம் அடிகளாரின் அன்புத் தந்தையும் மாந்தை பெரிய நாவற்குளத்தைச் சேர்ந்தவருமான திரு. கபிரியேல் அவர்கள் கடந்த 18.10.2005 அன்று மன்னாரில் காலமானார். இவருக்கு வயது 83. இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 22.10.2005 அன்று மன்னாரில் நடைபெற்றது.
தந்தையின் பிரிவால் துயருறும் அருட்பிரகாசம் அடிகளாருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மன்னா தனது அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

# சிறுவர் பொழிவு



## உயர்ந்த அன்பு
### - சிறுவர் கதை -

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் கொலரா நோய் பரவியது. மருத்துவமனைகள் அனைத்திலும் கொலராவினால் பாதிக்கப்பட்டவர்கள் நிறைந்திருந்தார்கள்.

மருத்துவமனையில் பணிபுரியும் அருட்சகோதரி மேரி ஒரு நாள் மருத்துவ மனைக்குச் சென்றுகொண்டிருந்தார்.

யாரோ ஒரு மனிதன்! அருட்சகோதரி மேரியை எவ்வளவு தீயவார்த்தைகளால் திட்ட முடியுமோ, அவ்வளவு வார்த்தைகளையும் பயன்படுத்தி அருட்சகோதரியைப் புண்படுத்தினான். சில நாட்களின்பின், அதே மனிதன் கொலராவினால் பாதிக்கப்பட்டு, சகோதரி மேரி பணிபுரிந்த அதே மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டான். அனைவரும் "இடமில்லை" என்றார்கள். ஆனால் அருட்சகோதரிக்கு அந்த முகம் பழக்கப்பட்ட முகம். அன்று நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. ஆனாலும் அவனுக்காக பரிந்து பேசி, இடத்தை ஆயத்தப்படுத்தி, அந்த மனிதன் அருகில் இருந்து அந்த அருட்சகோதரி பணியாற்றினார். எட்டாவது நாள் அந்த மனிதன் கண் விழித்தபோது, அந்த நாள்வரை பணிபுரிந்த அருட்சகோதரி அங்கே இல்லை. அந்த மனிதன் "இதுவரை பணிபுரிந்து, என்னை பராமரித்த அந்த அருட்சகோதரி எங்கே?" என்று சுற்றியிருந்தவர்களைக் கேட்டான். அவர்கள், "நீங்கள் சபித்துத் திட்டிய அந்த அருட்சகோதரி மேரி, உங்களைக் கவனித்து, உங்களைப் பராமரித்தது உண்மையே. ஆனாலும், அவருக்கும் கொலரா நோய் தொற்றி, அந்நோயினால் பீடிக்கப்பட்டு, நேற்று இறந்துவிட்டார்" என்றனர்.



நண்பர்களுக்காக மட்டுமல்ல. பகைவருக்காக உயிரைக் கொடுக்க முன்வருவதுதான் உண்மையான அன்பு. "நானோ உங்களுக்குச் சொல்கின்றேன். உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக செபியுங்கள். அப்போது, வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள்".

*இ. மேரி டிலூசியா, தரம் 5A,*
*மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார்.*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-13

49. அந்தோனியாரின் எண்ணற்ற நற்செயல்களைக் கண்ட சாத்தான் அவரை அமைதியாக இருக்க விடவில்லை. ஒரு நாள் அவர் மரத்தால் ஆன ஒரு மேடை மீது ஏறி, மறையுரை ஆற்ற படிகளில் ஏறுமுன் மக்களைப் பார்த்து, "சாத்தான் இன்று ஓர் ஆபத்தை விளைவிக்க விரும்புகிறான். யாரும் பயப்பட வேண்டாம். ஏனெனில் ஒருவருக்கும் தீங்கு விளையாது" என்றார். அவர் மேடையில் ஏறிய உடனேயே அது உடைந்து கீழே விழுந்தது.

50. ஆனால் எவரும் அதில் காயப்படவில்லை. அந்தோனியார் தன் மறையுரையை நிகழ்த்த, சூழ நின்றோர் கேட்டுப் பயனுற்றனர். அந்தோனியார் பிரைவில் (Brive) என்ற இடத்தில் ஒரு மடத்தைத் துவங்கியிருந்தார். ஒவ்வொரு நாளும் அவர் மக்களுக்குப் போதித்தபின், இரவில் மலையில் மறைவான ஒரு குகைக்குச் சென்று, வெகுநேரம் செபிப்பார்.

51. ஓர் இரவு அவர் சாத்தானின் கொடிய சோதனைக்குள்ளானார். உடனே தேவ அன்னையின் உதவியை நாடிச் செபித்தார். குகை



ஒளியால் நிரம்பியது. தேவதாய் வானவர் புடைசூழ, குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தியவாறு காட்சி தந்தார். அரசிபோல் கையில் செங்கோல் ஏந்தி, சிரசில் கிரீடம் அணிந்தவாறு சாத்தானை விரட்டி அடித்தார்.

52. 1227 ஆம் ஆண்டு, பிரான்சிஸ்கன் சபையைத் துவக்கிய புனித பிரான்சீஸ் அசிசியார் காலமாகவே, அந்தோனியார் பொதுக் கூட்டத்திற்காக, அசிசிக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அக் கூட்டத்தில் அந்தோனியாரைப் பொலாஞாவின் மாநில அதிபராகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது அந்தோனியார் வியாதியால் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். இருப்பினும் தன் போதனைகளைத் தொடர்ந்து செய்தார். பாப்பானவர்கூட அவரது மறையுரைகளில் ஒன்றைக் கேட்டு, "இவர் இறைவாக்கின் ஒளியில் வாழ்பவர்" என்றார்.

(தொடரும்)

# கவிதைப் பூக்கள்

## அன்னையைப் போற்றிடுவேன்

எந்தன் அன்னை என் தெய்வம்
அவளே என்றும் என் ஆசான்
கண்போல் என்னைப் பேணியே
கருத்தாய்க் காப்பாள் அவள் வாழி.

பசியில் நோயில் வீழாமல்
பஞ்சம் எதுவும் நேராமல்
பாசத்தோடு எனை வளர்த்து
பரிவாய்க் காப்பாள் என் அன்னை.

பள்ளி சென்று படித்திடவும்
பலபேர் என்னைப் புகழ்ந்திடவும்
பாரில் என்னைப் பேணுமவள்
பாதம் போற்றி வாழ்ந்திடுவேன்.

*ம. கீத்நிரோசன், தரம் 7, மன். உயிலங்குளம்*
*றோ. க. த. க. பாடசாலை, உயிலங்குளம்.*

## தந்தையின் கனவு

மகனே, மகளே, உன் உயர்வுக்காய்
நான் சுமப்பது மண் கூடையை மட்டுமல்ல
மன உறுதியையும்தான்.
உன் கனவுகளுக்காய் நான் உடைப்பது
கற்களை மட்டுமல்ல
வியர்வைத் துளிகளையும்தான்.
உன் இலட்சியத்துக்காக நான் தூக்குவது
செங்கற்களல்ல. உன் வெற்றிக்கான அத்திவாரக் கற்கள்.
சித்தானாய் சீமெந்து கலக்கையிலும்
சிந்தனையோ உன் கல்வியிலே - இந்த
ஏழைத் தந்தையின் இமைகளிலும்
இலட்சியக் கனவொன்று உண்டு.

போரினால் இடம்பெயர்ந்து,
அகதிகளாய் நாம் நிற்கின்றோம்.
சேர்க்க எதுவும் இல்லை
சேமிப்பது கல்வி ஒன்றே!
கல்வி என்பது கரைகாண முடியாதது.
கல்லாதவன் கண்ணிருந்தும் குருடன் ஆவான்.
உனது வாழ்வில் எந்நிலை வந்திடினும்
கல்வியால் உயர்ந்திடு.
நாளை ஈழநாயகன் நீ தேடும்
ஈடு இணையற்ற செல்வம் - கல்வி!
கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை.

*சு. மரியநாயகி (அமுதினி), தரம் 11,*
*மன். பரிகாரிகண்டல் ம.வி, முருங்கன்.*

## தரணியிலே உங்கள் புகழ் ..

ஆசிரியர் .......!
நற்சமுதாயத்தின் நாயகர்கள்
நலமிக்க போதனையின் காவலர்கள்
கற்றதைக் கொடுப்பதில் ஆர்வலர்கள்
கடவுளின் நேரடிச் சேவகர்கள்.
குற்றம் நீக்கிடும் குணசீலர்கள்
குறைகள் மன்னிக்கும் குருக்கள்
எழுத்தறிவிக்க இறைவரம் பெற்றவர்கள்
கற்றதினாலேயே இத்தனை மாண்புகள்
தன்னலங் கருதாத தகையோர்கள்
தம்மைத் தியாகம் செய்கின்ற செம்மல்கள்
குன்றின்மீது ஒளிர்கின்ற தீபங்கள்
குன்றாத கலங்கரை விளக்குகள்.
குருவாலே உயர்ந்தோர் உலகில் பல கோடி
நன்றியோடு அவர் செயல் நினைந்து - எந்
நாளும் அவர் பணி சிறக்க சேவை மிளிர
இறையாசீர் வேண்டி நலமுற வாழ்த்துகின்றோம்.

*G.k. குயின், மன்.உயிலங்குளம், றோ.க.த.க பாடசாலை, உயிலங்குளம்.*



## கொஞ்சமாச் சிரிங்க...!



### பஸ் நிலையம்



ஒருவன் விமான ரிக்கெற் வாங்கிவிட்டு, ரயில்வே ஸ்ரேசனுக்கு வந்தான். அதுக்குப் பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. தவறுதலாக இங்கே வந்துவிட்டோம் என்று. உடனே அவசர அவசரமாக விமான நிலையத்தை நோக்கி ஓடினான்.

அங்கே கவுண்டரிடம் கேட்டான். "மேடம் தவறுதலாக ரயில்வே ஸ்ரேசனுக்கு போய்விட்டேன். இப்போ விமானத்தையும் தவற விட்டுட்டன். அடுத்த பிளைட்டிலே எனக்கு இதை மாத்தித் தர முடியுமா?" என்று கேட்டான்.

"முடியாது!" என்றாள் அந்த மேடம். "ஏன் இப்படிச் சொல்லுறீங்க?" என்று கேட்டான். "ஏனென்றால் இப்ப நீங்க வந்திருக்கிறது பஸ் ராண்ட்" என்றாள் அந்த மேடம்!

*- ப. ஷோபனா, குருவில், வட்டக்கண்டல்.*

பாடகர் :- நான் பாட்டுக் கச்சேரியில் அசத்திற்றன் என்றா மாலையோட வாறீங்க.
மற்றவர் :- அதில்லங்க, எட்டு மாசமா காணாம போன, என் கழுதை உங்க பாட்டுக் கேட்டு, கச்சேரிக்கு வந்தது. அதனால் தான் இந்த பூ மாலை.

*- பி. வெனில்டஸ், தோட்டவெளி, மன்னார்.*

தாய் :- செருப்புப் போட்டுக்கொண்டு போனாயே எங்கே செருப்பு?
மகன் :- வெளியே செல்லும்போது,செருப்புப் போட்டுக்கொண்டு செல்லச் சொன்னீர்களே, வரும்போது கொண்டுவரும்படி சொல்லவில்லையே......!

**********

பேரன் :- நான் ஓட்டப் போட்டியில் ஓடப் போகிறேன். ஆசீர்வாதம் பண்ணுங்க பாட்டி.
பாட்டி :- பாத்து மெதுவாக ஓடடா. வேகமாக ஓடி காலை கையை உடைச்சுக் கொள்ளாதே.

**********

ஆசிரியர் :- ஏன் பையனை போட்டு அடிக்கிறீங்க?
தந்தை :- 99 புள்ளி எடுத்துள்ளான். 1 புள்ளி எடுக்கத் தெரியாதா? என்றுதான்!

*ஜெ. டிறோன், புதுக்கமம்.*


கஸ்டமர் :- யோவ்! சர்வர்! இட்லி மல்லிகை பூ மாதிரி இருக்கும்னு சொன்னீயே ..
சர்வர் :- ஆமா சார்.
கஸ்டமர் :- எங்கேய்யா வாசனையையே காணோம்.

**********

நோயாளி :- டாக்டர், என்னை ஏமாத்தின காதலியை மறக்க குடிக்க ஆரம்பிச்சேன். காதலியை மறந்தேன். குடியை மறக்க உங்ககிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்தேன். குடியை மறந்தேன்.
டாக்டர் :- அப்புறம் ......... ?
நோயாளி :- உங்க நர்ஸை மறக்க வேணும் என்றா பழைய படி குடிக்க ஆரம்பிக்கணும்........!

*கி. பிரதீப் துரம், 4ம் வட்டாரம், பேசாலை.*

### பொய்ச்சாட்சி சொல்லணும் ......



கிறிசாந்தன் :- என்ன சோகமா, பீச்சையே பார்த்துக்கொண்டு நிக்கிறீங்க......!
ஜோசப் :- ஆமா.. சோகந்தான். உங்களுக்கு என்ன வேணும்.
கிறிசாந்தன் :- ஒண்ணுமில்ல. ஒரு பொய்ச்சாட்சி சொல்லணும்
ஜோசப் :- என்ன சொல்லணும்..
கிறிசாந்தன் :- போன மாதம் அந்த ரோட்டுல உள்ள 8ம் நம்பர் வீட்டில் ஒரு முகமூடிக் கொள்ளை நடந்துதில்லையா.. அந்த கொள்ளையை நான்தான் செய்திருப்பேன் என்று பொலிஸ் சந்தேகப்படுது. அந்த நேரம் நான் உங்க வீட்டுல இருந்ததாக கோர்ட்டுல பொய்ச்சாட்சி சொல்லணும்.
யோசப் :- அது எப்படி பொய்ச்சாட்சியாகும்!.
கிறிசாந்தன் :- என்ன சொல்றீங்க?
ஜோசப் :- அந்த 8ம் நம்பர் வீட்டுக்காரனே நான்தானே.

*ம. செல்வி ஆன் எவறெஸ்ரா, புதுக்கமம்.*

பாபு :- நான் வேலை செய்கிறபோது, கட்டாயம் தண்ணீர் அடிக்க வேணும் என்று சொல்லிட்டார்கள்
சேகர் :- அப்படி என்ன வேலை செய்கிறாய்?
பாபு :- தீயணைப்பு வேலை.

**********

குமரன் :- நான் பிறநாட்டு பயணம் போக இருந்தேன். எனக்குப் பதிலாக அப்பா போகிறார்..
சோமு :- அப்ப உனக்கு கேள்வியாக யார் போகிறார்கள்?

ஒருவன் :- எனக்கு கண் சரியாகத் தெரியவில்லை!
மற்றவர் :- நான் சொன்ன வைத்தியரைப் பார்த்தியா?
ஒருவன் :- பார்த்தேன். அவரும் மங்கலாகத் தெரிகின்றார்.

**********

மகள்:- அம்மா விளையாட போகிறேன்.
தாய் :- என்ன? கிழிஞ்ச சட்டையோடயா?
மகள் :- இல்லையம்மா ....... பிறண்டோட ......!

**********

ஒருவர் :- நீங்க கட்டியிருக்கிற கடிகாரம் சரியான நேரம் காட்டுமா?
மற்றவர் :- இல்லை. அது காட்டாது. நாமதான் நேரம் பார்க்க வேணும்.

**********

வாடிக்கையாளன் :- நீங்க 6 மணிக்கு கடை பூட்டி விடுவீர்கள் என்று மூச்சு வாங்க ஓடி வந்தேன்.
கடைக்காரன் :- அப்படியா... இங்க மூச்சு விற்பதில்லை.

*- ஏ.றி. இம்மானுவேல், ஜேர்மனி.*

வகுப்பிலே வம்பு செய்யும் மாணவர்கள் அனேகமாக "லாஸ்ட் பெஞ்ச்" சிலேயே அடைக்கலம் புகுவார்கள்.
மாணவர்கள் பெஞ்சைத் தூக்கிக்கொண்டு வெளியே போனார்கள்.
ஆசிரியர்: ஏண்டா பெஞ்சைத் தூக்கிக் கொண்டு வெளியே போகிறீர்கள்.
மாணவர்கள்: நீங்கள்தானே சார் "லாஸ்ட் பெஞ்ச் கெட் அவுட்" என்று சொன்னீர்கள்.......!

*எஸ். எம். ம*

தமிழ் மையத்தின் திருவாசக பேரிகை முழக்கம்

# தமிழிசை மூலம் உலக அளவில் தமிழ் பண்பாடுமீது ஒரு கவனத்தை ஏற்படுத்த விரும்பினோம்

## திருவாசகத்தை சிம்பொனி இசையில் தயாரித்து வெளியிட்ட கஸ்பார் அடிகளார் கூறுகிறார்

அருட்பணியாளர் ஜெகத் கஸ்பார் அவர்கள் அண்மையில் தான் சார்ந்துள்ள தமிழ் மையம் என்ற அமைப்பின் மூலம் இசைஞானி இளையராஜா ஆக்கத்தில் திருவாசகத்தின் சில பகுதிகளை மேலைத்தேய சிம்பொனி இசையில் மிக பிரமாண்டமான முறையில் தயாரித்து வெளியிட்டிருக்கிறார். இது பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இதோ.

அடிப்படையில் நமது தமிழ் மரபு, பண்பாடு சார்ந்த கலை இலக்கிய அருஞ்செல்வங்களை உலகளவிற்குக் கொண்டு சேர்ப்பதற்காகவும், நமது இளைய தலைமுறையினருக்கு இதை எடுத்துச் செல்வதற்காகவும் தமிழ் மக்களிடையே ஆராட்சி மனப்பான்மை மேலோங்கவும் - (ஏனென்றால் நாம் உணர்ச்சி வசப்பட்டுத்தான் நம்முடைய சமூக முடிவுகளை எடுக்கின்றோமேயன்றி அறிவு பூர்வமான உள்ளீடுகளை அடிப்படையாக வைத்து நாம் அதிகம் செயற்படுவதில்லை என்ற எண்ணம் பரவலாக இருப்பதால்) - ஆய்வு மனப்பான்மை மற்றும் ஆய்வு முயற்சிகளை தமிழ் சமூகத்தில் ஊக்குவிக்கவும் குறிப்பாக வசதியான குழந்தைகளுக்கு கிடைத்திருக்கும் அறிவு வாய்ப்புக்கள் கிராமப்புறங்களிலே படிக்கின்ற ஏழை மாணவ மாணவியருக்குப் போய்ச்சேருவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே தமிழகத்தில் இயங்கும் தமிழ் மையம் எனும் அமைப்பு.

குறிப்பாக உண்மையை தேடுவதென்பது எல்லோரும் இணைந்து தேடவேண்டிய ஒன்றாக இருக்கின்றது. தமிழ் மையம் என்பது கிறிஸ்தவ சபையில் இருந்து வருகின்ற ஒரு ஆலோசனை இல்லம். ஆனால் எல்லா மறையினரையும் உள்ளடக்கி இருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இதைத் தொடங்கினோம்.

திருவாசகம் சிம்பொனியைப் பொறுத்தவரை இத்திட்டத்திற்கு ஊன்றுகோலாக இருந்தது இளையராஜா போன்ற ஒரு மிகப்பெரிய இசைமேதை. திரை இசையோடு மட்டும் முடிந்து விடாமல் இவர்கள் போன்றவர்களின் இசை ஞானத்தை உயர்ந்த இசையைப் படிப்பதற்கும் உலகளவில் நமது தமிழ் இசையினுடைய அதிர்வுகளை கொண்டுபோய் சேர்ப்பதற்கும் விரும்பினோம்.

எப்படித் தகவல் தொழில் நுட்பம் உலகளவில் குறிப்பாக தென்னிந்தியர்களுக்கு நல்ல பெயரை தேடித்தந்துள்ளதோ அதேபோல் தமிழ் இசை மூலம் உலகளவில் தமிழ் பண்பாடுமீது ஒரு கவனத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் எண்ணத்திலேயே இதை ஆரம்பித்தோம். அதேவேளை இப்படிப்பட்ட ஒரு கலையம்சத்தை நம் மக்களும் புரிந்துகொண்டு ரசிக்க வேண்டுமேயாகில் வெறும் சிம்பொனியாக இருந்தால் புரியாது. அதை குழு இசை சிம்பொனியாக அமைக்க விரும்பினோம். உண்மையில் குழு இசை சிம்பொனியில் முதன்மையடைந்திருப்பவர் திரு. கண்டல் என்பவர். அவருடைய மெசெயா எனும் இயேசுவின் சரிதம் பற்றிய சிம்பொனியே உலகில் முதலாவது தரமுடையது. அதை கன்டெல் மெசெயா என்று அழைப்பர்.

நானும்கூட இளம் வயதில் கன்டல் மெசாயா சிம்பொனியை கேட்கும்போது இதைப்போல் தமிழில் செய்யமுடியுமா? முடியவே முடியாது என்றே எண்ணியிருந்தேன். ஆனால் இளையராஜாவால் அதை செய்ய முடிந்திருக்கின்றது. அதை நான் இப்போது உணருகின்றேன்.

முதலில் நாம் செய்ய நினைத்தது திருக்குறலைத்தான். ஆனால் திருக்குறல் ஈரடி கவிகளாக வருவதால் அதை சிம்பொனி இசைக்குள் கொண்டுவருவது மிகவும் சவால் நிறைந்த விடயமாக இருந்ததுடன் இளையராஜா சிம்பொனி செய்யும்போது அது உருக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பியதால் திருவாசகத்தை தெரிவுசெய்தோம்.

எனக்கு திருவாசகத்தின்மீது வந்த ஈர்ப்பு தமிழ் மொழியால் வந்த ஈர்ப்பு.

கிறிஸ்தவ திருச்சபைக்கும் குறிப்பாக கிறிஸ்தவ மறைபணியாளர்களுக்கும் தமிழ் மொழிக்கும் ஒரு உள்ளார்ந்த ஈடுபாடு கலந்த உறவு ஏறக்குறைய 350 ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது.

அன்று வீரமாமுனிவர் வரவில்லையென்றால் நமது உரைநடை இலக்கணம் கிடைத்திருக்காது. இன்று நாம் பேசுகின்ற எழுதுகின்ற உரைநடைக்கான இலக்கணத்தை வகுத்துத் தந்தவரே வீரமாமுனிவரேதான்.

கால் வெல்ட் ஐயர் அவர்கள் திருநெல்வேலியில் இருந்து மதுரை, மதுரையில் இருந்து காஞ்சிபுரம் என தமிழகம் எங்கும் கால்கடுக்க நடந்து சென்று தமிழ் வளர்த்த பெரியவர்கள். திரு. போப் அவர்கள்தான் திருவாசகத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து உலகளவிற்கு கொண்டுவந்தார்.

உண்மையில் தமிழ் சமூகத்தில் இன்று கிறிஸ்தவ மக்களுக்கு ஒரு உயர்ந்த மரியாதை இருக்கின்றது என்றால் நம்முடைய விசுவாசத்தினால் அந்த மரியாதை மற்றவர்களிடம் இருந்து வரவில்லை. விசுவாசம் நம் ஆன்ம விடுதலைக்கான சொத்து. ஆனால் பரந்து பட்ட சமூகம் கிறிஸ்தவர்களை மதிக்கின்றது என்றால் அதற்கு மிக முக்கியமாக இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

1. நம்முடைய சமூக ஈடுபாடு, கல்வியிலும், மருத்துவத்தில் ஏழை எளிய மக்களுக்கான கருணை - இரக்கப் பணிகளிலும் ஒரு தீர்க்கமான தெளிவான ஒரு ஈடுபாட்டை நீண்ட காலமாக நமது மண்ணுக்கு கிறிஸ்தவம் வந்த காலத்தில் இருந்து வைத்துக்கொண்டிருக்கின்றது. இது நாம் மதிக்கப்படுவதற்கு ஓர் முதன்மையான காரணம்.

2. இரண்டாவது முக்கிய காரணம் மொழி, பண்பாடு, தளங்களில் நமது ஈடுபாடும் பங்களிப்பும்.

குறிப்பாக கத்தோலிக்க மக்கள் ஒருபோதும் தமிழ் பண்பாட்டை ஒரு பிற இனத்தாரின் பண்பாடாக கருதியதில்லை. தமிழ் மொழியை நாம் பழித்ததில்லை. அதிலும் குறிப்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்பின் திருப்பலி வழிபாடுகள் இசை அனைத்துமே பண்பாட்டு மயமாக்கலுக்கு உட்பட்டபின் நம்மீது மற்றவர்களின் மதிப்பு குறிப்பாக அதிகாரத்தில் இருப்பவர்கள் அறிஞர் பெருமக்கள் விடயமறிந்தவர்கள் இவர்களெல்லாம் நம்மைப் போற்றுகின்றார்கள். கிறிஸ்தவர்களால்தான் ஒரு காலத்தில் தமிழ் மொழி மீட்கப்பட்டது, தமிழ் இன்றும் வாழ்கிறது என்று பாராட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளோம். அந்த மரபினை நாம் தொடர வேண்டும் என்ற அவாவும் நாம் இப்பணியைச் செய்ய உற்சாகம் தந்தது.

திருவாசகத்தில் ஈடுபடுவதன் மூலமாக நல்ல மரபினை அதாவது போற்றத்தகும் மரபினை நாம் தொடருகிறோம். திரும்பிப் பார்க்கும்போது உண்மையில் தமிழகத்தில் குறிப்பாக மிகுந்த ஒரு பாராட்டுக் கிடைத்திருக்கிறது. அடடா நாம் இத்தனை கோடி




இந்துக்கள் இங்கிருந்தும் எங்களுக்கு வராத ஒரு எண்ணம், எங்களுக்கு வராத ஒரு நோக்கு இந்த கிறிஸ்தவர்களுக்கு வந்திருக்கிறதே, என்னே இவர்களின் மொழிப்பற்று, என்னே இவர்களின் பரந்த மனப்பான்மை என்று வியக்கின்றனர்.

சிலர் கேட்டார்கள் எப்படி ஒரு கிறிஸ்தவ துறவி இதைச் செய்யலாம் என. நான் சொன்னேன் என்னுடைய விசுவாசம் ஆழமானதாக இருக்கும்பொழுது இன்னொருவருடைய விசுவாசத்தைக் கண்டு நான் பயப்படத் தேவையில்லை. அதைநான் பரந்த மனத்துடன் பார்க்கலாம். கிறிஸ்தவம்கூட பாலத்தீனத்திலிருந்து உரோமாபுரிக்குச் சென்றபோது அங்கிருந்த நல்லவற்றை அது உள்வாங்கிக் கொண்டது. கிரேக்க கலாச்சாரத்திற்குச் சென்றபோது அங்கிருந்த நல்லவற்றையெல்லாம் அது உள்வாங்கிக் கொண்டு தன்னைச் செழுமைப்படுத்திக்கொண்டது.

அதேபோல்தான் தமிழ் சமூகத்துக்கு வந்தபோது நல்லதை எடுப்பதில் தவறில்லை. ஆனால் சிலவேளைகளில் நாம் சாதி, தீய பழக்க வழக்கங்கள் போன்ற மோசமானவை-களைத்தான் உள்வாங்குகின்றோம்.

ஆக, நாம் இதைச் செய்ததை தூய ஆவியின் ஒரு செயற்பாடாகவே பார்க்கிறேன். என்னுடைய விசுவாசத்தில் ஆழமாக நின்றுகொண்டு பிறருடைய விசுவாசத்தை அறிய முயன்று அதில் நல்லவற்றைப் பெற்று இன்னும் செழுமைப்பட எண்ணுகின்றேன்.

வத்திக்கான் சங்கம் தெளிவாகச் சொல்கின்றது எங்கெல்லாம் நல்லது இருக்கின்றதோ அதெல்லாம் தூய ஆவியினுடைய கொடை என்கிறது. ஆகவே இதனூடாக திருச்சபைக்கு நல்ல பாராட்டும் நற்பெயரும் கிடைத்துள்ளது. இதைவிட தமிழிசையும் உலகளவிற்குப் போகின்றது.

உலகில் எங்கு சென்றாலும் ஏழு சுரங்கள்தான். அவற்றில் சில வர்ணங்கள் குழைவுகள் எமக்குத் தனித்துவமாக இருக்கின்றன. அதை ஓரளவுக்கு மேற்கு உலகமும் புரிந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்றால் இப்படியான சிம்பொனி இசை மூலமே கைகூடும். அந்த நிகழ்வும் இதன் மூலம் நடந்திருக்கிறது. இந்தியாவில் நடந்த வெளியீட்டுவிழாவும் எமக்கு நற்பெயரைத் தேடித்தந்தது. ஆனால் பெரும் தொகைச் செலவோடு இதை முடிக்க வேண்டியதாயிற்று. உண்மையைச் சொல்லப்போனால் பெரும் தொகைக் கடனிலேயே இதை முடித்திருக்கிறோம். மிகவும் கவலைக்குரிய விடயமென்னவென்றால் இதை ஒரு வியாபாரத் திட்டமாக அல்லாமல் சமூகத்திட்டமாக செய்கிறோம் என்பதை மறந்துவிட்டு உலகம் முழுவதும் ஒரு விற்பனைத் திட்டத்தை சிலர் நடத்தியிருக்கிறார்கள். சிசுக்கொலை செய்வதுபோல் இனிமேல் எவரும் இப்படியொரு முயற்சியை செய்யவிடாத முயற்சியாகவே இதைப்பார்க்கின்றேன். திருவாசகத்தைப்போல் விவிலியத்தை தமிழில் சிம்பொனியாக செய்யவேண்டும் என்ற ஆசையும் உண்டு. திருப்பாக்களைத் தெரிவுசெய்து அழகாகச் செய்யலாம். அதற்கு பெரிய வரவேற்பும் தமிழ் உலகம் முழுவதும் கிடைக்கும்.

# திருப்பாலத்துவ சபை மறையறிவுப் போட்டி முடிவுகள்

## வவுனியா மறைக் கோட்டம்

### கவிதைப் போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 1 | | |
| 1ம் இடம் | ந.அஜந்தன் | - செட்டிகுளம் |
| குழு - 2 | | |
| 1ம் இடம் | தி. மேரிறோஸ் | - செட்டிகுளம் |
| 2ம் இடம் | க. மெடோனா | - வவுனியா |
| 3ம் இடம் | றெர். றொபின்சலா | - செட்டிகுளம் |
| குழு - 3 | | |
| 1ம் இடம் | அ.அலன்ராஜ் | - செட்டிகுளம் |
| 2ம் இடம் | ச. ஆன் பிரியாந்தி | - வவுனியா |
| 3ம் இடம் | அ.கொன்சி | - செட்டிகுளம் |

### பேச்சுப்போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 1 | | |
| 1ம் இடம் | க. பவிந்திரன் | - செட்டிகுளம் |
| குழு - 3 | | |
| 1ம் இடம் | இ.சர்மிளா | - செட்டிகுளம் |
| 2ம் இடம் | ஜெ. சோபியா | - செட்டிகுளம் |
| 3ம் இடம் | பா. லியோனிசா | - வவுனியா |

### பாடல் போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 1 | | |
| 1ம் இடம் | ச.றொக்சினி | - பம்பைமடு |
| 2ம் இடம் | க. பவீந்திரன் | - செட்டிகுளம் |
| 3ம் இடம் | த. அஜந்தன் | - செட்டிகுளம் |
| குழு - 2 | | |
| 1ம் இடம் | அ.மே.டிலக்சினி | - வவுனியா |
| 2ம் இடம் | வே.அனுஜா நிரோஜினி | - செட்டிகுளம் |
| 3ம் இடம் | ச. கிசாலினி | - பம்பை மடு. |
| குழு - 3 | | |
| 1ம் இடம் | தி. அருன்பிரசாந் | - பம்பைமடு |
| 2ம் இடம் | தே. நிசாந்தினி | - வவுனியா |
| 3ம் இடம் | ஜெ. சோபியா லெனின் | - செட்டிகுளம் |
| 3ம் இடம் | யோ. றாஜ்தீபன் | - பம்பைமடு |

## மடு மறைக்கோட்டம்

### பேச்சுப் போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 1 | | |
| 1ம் இடம் | எ. டேமிதன் | - அடம்பன் |
| 2ம் இடம் | ய. ஜெயறொகான் | - தேவன்பிட்டி |
| 3ம் இடம் | அ. நேர்த்திறாஜ் | - ஆட்காட்டிவெளி |
| குழு - 2 | | |
| 1ம் இடம் | ப. மேரி ஜெனற் | - அடம்பன் |
| 2ம் இடம் | நெ. நிஷானா | - அடம்பன் |
| 3ம் இடம் | ம. மரிய பிறின்சலா | - தேவன்பிட்டி |
| குழு - 3 | | |
| 1ம் இடம் | ப. சர்மிலா | - அடம்பன் |
| 2ம் இடம் | க. ஜெராட் | - அடம்பன் |
| குழு - 4 | | |
| 1ம் இடம் | சு.ஜோ.வோலடிசொய்சா | - பெ.பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | செ. மரிய தர்ஷினி | - அடம்பன் |
| 3ம் இடம் | சி. இருதய நாயகி | - தேவன்பிட்டி |

### பாடல் போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 1 | | |
| 1ம் இடம் | தே. அனற் யான்சியா | - தேவன்பிட்டி |
| 2ம் இடம் | அ. எமறன்சியா | - அடம்பன் |
| 3ம் இடம் | தே. அனுசியா | - தேவன்பிட்டி |
| குழு - 2 | | |
| 1ம் இடம் | பெ. டெலாணி | - விடத்தல் தீவு |
| 2ம் இடம் | அ. அலோஜினி | - தேவன்பிட்டி |
| 3ம் இடம் | வி. அனோமியா | - அடம்பன் |
| குழு - 3 | | |
| 1ம் இடம் | பெ. மெலாணி | - விடத்தல்தீவு |
| 2ம் இடம் | ப. அனன்சியா | - அடம்பன் |
| 3ம் இடம் | தே. அலிமா பௌசியா | - தேவன்பிட்டி |
| குழு - 4 | | |
| 1ம் இடம் | ய. ஜெய றொணிஸ் | - தேவன்பிட்டி |
| 2ம் இடம் | பி. நிவேதா | - விடத்தல் திவு |
| 3ம் இடம் | தே. அ. பௌஸ்ரீனா | - தேவன்பிட்டி |

### கவிதைப் போட்டி

| குழு | பெயர் | பங்கு |
|---|---|---|
| குழு - 3 | | |
| 1ம் இடம் | ப. அனன்சியா | - அடம்பன் |
| 2ம் இடம் | ப. சர்மிலா | - அடம்பன் |
| குழு – 4 | | |
| 1ம் இடம் | செ. மேரித்திரேசா | - அடம்பன் |
| 2ம் இடம் | கி. யாழினி சில்வா | - பெ. பண்டிவிரிச்சான் |
| 3ம் இடம் | தொ. தர்ஷினி | - அடம்பன் |

# தமிழ்த் தொண்டாற்றிய தனிநாயகம் மற்றும் தாவீது அடிகளாருக்கு முத்திரை வெளியிடப்பட வேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை





தமிழ்த் தொண்டாற்றிய சேவியர் தனிநாயகம் அடிகளார் எச். எஸ். டேவிற் அடிகளார் ஆகியோருக்கு அவர்களின் தமிழ்ப் பணியை கௌரவிக்கும் முகமாக முத்திரை வெளியிடப்பட வேண்டும் என விடுக்கப்பட்ட வேண்டுகோளை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை வரவேற்றுள்ளார். அத்தோடு கிறிஸ்தவ விவகார அமைச்சு மூலமாக வெளியீட்டுச் செயலகத்துக்கு, தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அது மிகவும் அவசியமானதென சிபார்சும் செய்துள்ளார். இவர்களுடைய அபரீமிதமான இந்தப் பங்களிப்பை கௌரவிப்பது அவர்களை தமது நெஞ்சிற்கு நெருக்கமாக வைத்திருப்பவர்களிற்கு ஒரு நற்செய்தியைக் கொடுப்பதாக அமையும்.

மொழி இன ரீதியான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்ற இவ்வேளையில் முத்திரை வெளியீட்டுச் செயலகம் இந்தக் குருக்களை கௌரவப்படுத்துவதன் வழியாக மொழி இன ரீதியான புரிந்துணர்வை மக்களிடையே இன்னும் ஆழப்படுத்த முடியும் என்றும் ஆயர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### மனம்

எண்ணத்தின் இருப்பிடம்
அறிவுரையின் பொதுவிடம்
அறிஞர்களின் ஆய்விடம்
மனக்கவலையின் பதிவிடம்
எதிர்பார்ப்பை அடக்குமிடம்
ஆசைகளின் புகலிடம்
நினைவுகளின் சேமிப்பிடம்
மனிதர்களின் சிறு இடம்.

*எஸ். வினோதினி, மன்.*
*பரிகாரி கண்டல்.அ.த.க. பாடசாலை.*

### நாடு செழிக்க வாழ்வோம்!

சேர்ந்து வாழ்தல் சுகமே
செல்வம் கொழிக்கும் இகமே
ஊர்ந்து செல்லும் எறும்பு
ஒற்றுமையின் பலமே!
மதத்தால் சண்டை போட்டால்
மடையர் கூட்டம் ஆவோம்
எதற்கும் பொறுமை கொண்டால்
எங்கும் அமைதி காண்போம்
இனத்தால் பிரிவு கொண்டால்
இரத்தம் ஆறாய் ஓடும்
மனத்தில் அன்பைப் பண்பை
மதித்தால் செழிக்கும் நாடு!

*அ. டெறின் லெம்பேட்,*
*தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*

### நட்பு

வானை விட்டு அதன் மேகம் பிரியலாம்
மரத்தை விட்டு அதன் கனிகள் பிரியலாம்
என்னை விட்டு உன் நட்பு பிரியாது!
கடலை விட்டு அதன் அலைகள் பிரியலாம்
இதயத்தை விட்டு அதன்
துடிப்புக்கள் பிரியலாம் - ஆனால்
என்றும் பழகிய நாட்கள் மறவாது!
உடலை விட்டு உயிர் பிரியலாம் - ஆனால்
உன்னை விட்டு என்றும் பிரியாது என் நட்பு!
காத்திருப்பேன் உன் வரவிற்காய்
சினேகிதியே காத்திருப்பேன்!

*ஏ. றொக்சி, பள்ளிமுனை, மன்னார்.*





### அலையோடு கதை பேசி

அன்றாட வாழ்வுக்காய்
ஆழ்கடல் சென்று மீன் அள்ளி வந்தார்.
அலை உருண்டு வந்து – என்
அடிப்பாதத்தை முத்தமிட்ட அந்த நாள்
அப்பாவின் அரவணைப்பில்.....!
அன்றாடம் நாம்
அன்பு கொண்டு வாழ்ந்த நாள்.
கடற்கரையில் பள்ளி கொண்டு
கடைசிவரை அவ்வாழ்வுக்காய்
கடவுளை வேண்டிய நாள்.

கடைசிவரை இவ்வாழ்க்கை கேட்டதால்
கடைசிப் பொழுதாக
கரைந்து போன அந்த நாள்.
அத்தனையும் அசையா நினைவுகளாய்
அடிமனதில் அடங்கிக் கிடக்கிறது ....!
அனறைய நிகழ்வுகளை - இன்று
அசைபோட்டுப் பார்க்கின்றேன்.

பாதங்களை முத்தமிட்ட அலை
இன்று பரிதவிக்க விட்டு விட்டு
என்னைப் பாராமல் இருப்பதேனோ...?

அன்னைக்கு அன்னையாய் இருந்து
அரவணைத்த அப்பா எங்கே?
அயராது பாடுபடுகின்றான் - என்று
ஆழ்கடல் இளைப்பாற வைத்ததுவோ?
ஆயிரம் உறவெனக்கு அன்று!
அனுதாபம் கூறக்கூட யாருமில்லை இன்று!
அத்தனை சொந்தங்களையும்
அடியோடு அழித்தவன் - அவனியில்
என்னைமட்டும் அனுபவிக்க விட்டானோ?
இல்லை... இலங்கைக் கரையோடு
அத்தனை உறவுகளுக்கும்
இவர்கள் இன்னல்களை
எழுதிவிட முடியுமோ இப்படி ஓர் ஏட்டில்?

*மி. ஜான்சி, ஆட்காட்டிவெளி, அடம்பன்.*


---

மன்னா

## சிறுகதை

# இப்படியும் மனிதர்களா?

இ. டக்ஷினி,
உப்புக்குளம், மன்னார்.



அரைநாள் விடுப்பு எடுத்துக்கொண்டு சங்கர் வந்ததும் வராததுமாய் வீட்டையே இரண்டாக்கித் தேடினான். அலுமாரி, மேசை, இழுப்பு என்று ஒன்றுவிடாமல் தேடியும் கிடைக்கவில்லை.

சங்கர் அவ்வூர்ப் பிரபல ஆடைத் தொழிற்சாலையில் மேலதிகாரியாகவும், அவன் மனைவி சுந்தரி தனியார் மருத்துவமனையில் நேஸ் ஆகவும் வேலை பார்க்கின்றனர். சங்கரின் கோபம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரிக்கத் தொடங்கியது. "வச்சது வச்ச இடத்தில இல்ல. எங்க எடுத்து வச்சிட்டுப் போனாளோ சனியன்!" என்றவாறு, மருத்துவமனைக்கு ஃபோன் எடுத்து சுந்தரியைக் கூப்பிட்டான். மறுமுனையில் யாரோ கையாள் போலிருக்கிறது, "நேஸ் அம்மா, இப்பதாங்க டாக்டர் கூப்பிட்டதாக டாக்டரின் அறைக்குப் போனாங்க. அரை மணி நேரம் கழிச்சு போன் பண்ணுங்க" என்று அவன் கூற, இவனின் மனம் ருத்திரதாண்டவம் ஆடியது.

"அவ்வளவு நேரம் டொக்டரின் அறையில் அப்படி என்ன வெட்டி முறிக்கிற வேலை" பசியோடு இருந்த அவனுக்கு எரிச்சல் போதாது என்று இப்போ இது வேற கடுப்பு. சாப்பிடப் பிடிக்காமல், பொக்கற்றிலிருந்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தவாறே நாற்காலியில் சாய்ந்தான்.

அரை மணித்தியாலத்திற்கு மேலேயே ஆகியிருந்த நிலையில், மறுபடியும் ஃபோன் பண்ணினான். "இப்பதான் சார்! அம்மாவும் டொக்டரும் சாப்பிடப் போனாங்க." அதே கையாளின் குரல்.

"இரண்டு பேரும் ஒன்றாக உட்கார்ந்து கொட்டிக்கிட்டா தான் தொண்டையில் இறங்குமா?" சங்கரின் மனம் பேயாட்டம் ஆடியது. இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். மாலை 4 மணிக்கு மீண்டும் சுந்தரியை ஃபோனில் அழைத்தான். அதே கையாள் "இப்பதாங்க இருவரும் காரில் ஏறிப் போனாங்க" வந்த ஆத்திரத்தையெல்லாம் ரிசிவரில் காட்டினான் படாரென்று. அதே கணம் வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு ஜன்னலின் திரைச் சீலையை விலக்கிப் பார்வையை வெளியே செலுத்தினான். சுந்தரி ஒரு பெண்ணுடன் காரில் இருந்து இறங்கி வீட்டினுள் நுழைந்தாள். சங்கருக்கு அப்பெண்ணை அறிமுகப்படுத்தினாள். "இவதான் எங்க மருத்துவமனை ஐ ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் சீதா" என்று தொடங்கி இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திய கையோடு இருவரும் ஹோலில் அமர்ந்து கதைக்கத் தொடங்கினார்கள்.

சங்கரின் மனம் கூனிக் குறுகியது. 12 வருடமாகத் தன்னுடன் வாழ்ந்த அவளைப் புரிந்துகொள்ள முடியாமல் போனதற்கு மனதளவில், நொந்து நூலானான். அதே கணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு டாக்டருக்கும், சுந்தரிக்குமாக இரண்டு கப் தேனீருடன் ஹோலில் அவர்களுடன் கலந்தான். சிறிது நேரத்தின்பின் தான் வீட்டை இரண்டாக்கித் தேடிய அடகு நோட்டீஸ் பற்றித் தாழ்ந்த குரலில் கேட்டான். அவளும் "அதற்கு அவசியமே இல்லீங்க. டொக்டர் சீதா அதை மீட்டுத் தந்து விட்டார்கள்" என்று தன் கையைக் காட்டினாள். அவன் அம்மாவின் ஞாபகமாக வைத்திருந்த வளையல் எங்கே ஏலத்தில் போய்விடுமோ? என்று பயந்த அவனின் மனதில் சீதா தெய்வமாகக் காட்சி தந்தாள்.

மீண்டும் அவளை மனதாரக் கை கூப்பி, நன்றி கூறினான். சுமார் பத்து நிமிடங்களின் பின் டொக்டர் சீதா இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, வாசலை நோக்கி நடந்தாள். அவள் போன திக்கை வெறித்துப் பார்த்தவாறே நின்றிருந்தான் சங்கர்.

---

## தொடர் கட்டுரை - அங்கம் 32



## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

பகுதி II வியாகுல பிரசங்கம் அளிக்கப்படுகின்ற பன்முக வடிவங்கள்

### 14. தவக்கால நோன்பின் தளர்வு:

#### ஜெருசலேம் தரிசிப்பு :-

கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புபட்ட முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த இடங்கள் பூசிக்கப் பெற்று, பக்திக்குரிய இடங்களாகப் பேணப்பட்டதுடன் கொன்ஸ்ரன்ரயின் மன்னன் காலத்திலிருந்து மக்கள் இவ்விடங்களைத் திருயாத்திரைக்குரிய இடங்களாகத் தரிசித்தனர். கிறிஸ்துவின் தாய் தூய கன்னிமரியா தனது வாழ்நாட்களில் தினந்தோறும் இப்புனித இடங்களைத் தரிசித்தார் எனப் பாரம்பரியம் கூறுகிறது. புனித ஜெறோம் தமது வாழ்நாட்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இப்புனித இடங்களுக்குத் திருயாத்திரை மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். எனினும், கி.பி. 380களில் நடைமுறையிலிருந்த பல பக்தி முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடப்படாமைக்கான காரணங்கள் அறியப்படுவது கடினமாயுள்ளது.

#### முக்கிய நிகழ்வு, இடங்கள், பிரதி அமைப்பு.

புனித பூமிக்குத் திருயாத்திரை மேற்கொள்ள வசதியற்ற மக்களின் நலன் கருதியும், அவர்களின் ஆவலையும், எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்யும் நோக்குடனும் புனித பூமியின் முக்கிய தலங்களின் பிரதியமைப்பு வேறு இடங்களில் அமைக்கும் செயற்திட்டம் ஆரம்ப காலங்களில் இருந்தே மேற்கொள்ளப்பட்டது.

Bolonga என்னுமிடத்தில், ஆயரால் San Stefano என்னும் துறவற மடத்தில் 5ம் நூற்றாண்டிலேயே கிறிஸ்துவின் பாடுகளின் முக்கிய நிகழ்வுகள் சம்பவித்த புனித தலங்களைக் குறிக்கும் பல தொடர்ச்சியான சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த இடமே ஜெருசலேம் என அழைக்கப்படும் அளவிற்கு மக்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் பெற்றது. இதுவும் பிற்பட்ட காலத்தில், சிலுவைப் பாதைக் காட்சியமைப்பின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எனினும் 5ம் நூற்றாண்டிற்கு முன்பு இன்று நாம் சிலுவைப்பாதை எனக் கொள்ளும் நிலைக்கு இப்பக்தி முயற்சி மக்கள் மத்தியில் அறியப்பட்டிருக்கவில்லை.

12ம், 13ம் நூற்றாண்டுகளில் புனித பூமியைத் தரிசித்த பலரின் குறிப்பின்படி, திருப்பயணம் மேற்கொண்டோர் (யாத்திரீகர்கள்) ஒரு குறிப்பிட்ட பாதையின் வழியே வழிநடத்தப்பட்டார்கள். அதாவது, கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புபட்ட இடங்களை இணைக்கும் பாதை எனக் கொள்ளப்பட்டது. எனினும் இப்புனித பாதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளே பின்பு சிலுவைப்பாதையின் காட்சி அமைப்புக்களாக மாற்றம் பெற்றன எனக் கொள்வதற்குத் தெளிவான குறிப்புக்கள் எவையும் கிடைத்தில.

#### பாவமன்னிப்புச் சலுகை

கிறிஸ்துவின் பாடுகளின் முக்கிய நிகழ்வுகள் சம்பவித்த இடங்களைத் தரிசிப்போருக்கு பாவமன்னிப்பு சிறப்பு சலுகை (Indulgence) எந்த ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ளது. எனினும் 1342 ஆம் ஆண்டு புனித பூமியைக் கண்காணிக்கும் பொறுப்பு பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளிடம் அளிக்கப்பட்டது. பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளே பாவமன்னிப்புச் சலுகை அளிக்கப்பட்டமைக்கு வழிசமைத்தவர்களாக இருந்திருக்கலாம்.

கீழே குறிப்பிடப்படும் கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புள்ள இடங்களைத் தரிசிப்போருக்கு பாவமன்னிப்புச் சலுகை வழங்கப்பட்டதாக Fwrraris என்பவர் குறிப்பிடுகின்றார். கிறிஸ்து சிலுவை சுமந்து செல்லும்போது, தமது தாயாரை எதிர்கொண்ட இடம், ஜெருசலேம் நகரப் பெண்களுக்கு ஆறுதல் கூறிய இடம், சீரேன் ஊர் சீமோன் இயேசுவை எதிர்கொண்ட இடம், கிறிஸ்துவின் ஆடையை படைவீரர் குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்ட இடம், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடம், பிலாத்துவின் இல்லம், இயேசுவின் கல்லறை என்பனவாகும்.

1520இல் திருத்தந்தை 10ஆம் லியோ அவர்கள் பிரான்சிஸ்கன் சபைத் துறவிகளின் Antwerp என்னும் இடத்திலுள்ள சேமக்காலையில் அமைந்துள்ள வியாகுல மாதாவின் திருச்சுரூபம் அமைந்துள்ள இடத்தைத் தரிசித்து, செபிப்போருக்கு 100 நாள் பாவமன்னிப்புச் சலுகை உண்டு என அறிவித்தார்.

கிறிஸ்துவின் பாடுகளின் முக்கிய நிகழ்வுகளின் காட்சியமைப்புக்களை, நிலைகள் (Station) அல்லது, ஸ்தலம் என முதன் முதலில் குறிப்பிட்டவர் William Wey என்ற ஆங்கிலேயத் திருப்பயணி ஆவார். இவர் 1458 இலும், 1462 இலும் ஜெருசலேமைத் தரிசித்தார். இக்காலம் வரையும் சிலுவைப்பாதைப் பயணம் கல்வாரியிலிருந்து ஆரம்பமாகி, எதிர்மாறான ஒழுங்கில் இடம்பெற்று, பிலாத்துவின் இல்லத்தை அடைவதுடன் முடிவு பெற்றது. எனினும் 16ம் நூற்றாண்டின் முற்கூறில் இருந்து பிலாத்துவின் இல்லத்திலிருந்து ஆரம்பமாகி, கல்வாரியுடன் முடிவுறும் முறை வழக்கிற்கு வந்தது. இம்முறையே ஏற்ற முறை எனவும், இது தன்னிலே நிறைவான பக்தி முயற்சி எனவும் கொள்ளப்படலாயிற்று.

ஜெருசலேமில் புனித நிகழ்வுகள் சம்பவித்த இடங்களைப் 15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் பிரதிநிதித்துவம் செய்யும் இடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1420 இல் புனித அல்வாறிஸ் என்பவர் புனித பூமியைத் தரிசித்து திரும்பிய பின்பு டோமினிக்கன் சபையினரின் துறவற மடத்தில், கிறிஸ்துவின் பாடுகளின் நிகழ்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிற்றாலயங்களை நிறுவினார். இதன் பின்பே தனித்தனி நிலைகள் (ஸ்தலங்கள்) காட்சியமைப்பு ஓவியங்களாக வரையப் பெற்றன. இதே காலப் பகுதியில் 1468 இல் Nuremberg என்னும் இடத்திலும், 1507 இல் Bamberg என்னும் இடத்திலும் திருப்பாடுகளின் நிலைகள் அமைக்கப்பட்டன. Nuremberg என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த நிலைகள் கல்லில் செதுக்கப்பட்டவையாகவே காணப்பட்டன. மேலும், இவை ஏழு நிலைகளை மட்டுமே கொண்டிருந்தன. இவை ஏழும் கிறிஸ்து சிலுவையின்கீழ் விழும் காட்சிகளையே பிரதிபலித்தன.

கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புபட்ட ஜெருசலேமிலுள்ள பல இடங்களை வேறு இடங்களிலும் பிரதி செய்யும் முயற்சி ஆரம்ப காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், இச்சம்பவங்களை ஜெருசலேமில் நிகழ்ந்த இடங்களுக்கிடையிலான சரியான இடைவெளியில் அமைக்க முற்பட்டனர். இதனால் புனித பூமிக்குத் திருயாத்திரை மேற்கொண்ட மக்கள் இரண்டு நிலைகளுக்கிடையில் எந்த அளவிலான தூரத்தைக் கடந்தார்களோ அதே இடைவெளியை இங்கும் கடக்கும்போது, தாமும் ஜெருசலேமிலுள்ள புனித பூமியின் முக்கிய இடங்களைத் தரிசிக்கின்ற உணர்வைப் பெறுகின்றனர். இவ்வாறு வெவ்வேறு இடங்களில் நிலைகளை அமைத்தோர், ஜெருசலேம் சென்று, ஒவ்வொரு நிலைகளுக்கும் இடையிலுள்ள சரியான தூரங்களை அளந்து, அதற்கொப்ப நிலைகளை அமைத்திருந்தாலும் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு நிலைகளுக்கும் இடையிலுள்ள தூரங்களில் வேறுபாடுகள் காணப்பட்டதாக அறியப்படுகின்றது. *(தொடரும்)*

### வாழ்வதற்காக இறக்கிறோம். இறப்பதற்காக வாழ்கிறோம்

# மரித்தோரை மனங்கொள்ளும் மாதம்


## இறந்த ஆன்மாக்களை நினைக்கும் நவம்பர் மாதச் சிந்தனைகள்

## இறந்தவர்களுக்காக கல்லறை கட்டுவதைவிட வாழ்வோருக்காக உள்ளங்களைத் திறப்போம்!

**தி. மதி, பெரிய கல்லாறு**

பிறப்பும், இறப்பும் இயற்கையென்று செயற்கையாய் சொல்வார்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனுடைய இறப்பையும், பிறப்பையும் தீர்மானிப்பது இறைவன் ஒருவரே. பிறப்பிற்காக சந்தோஷப்படுவதும், இறப்பிற்காகத் துக்கப்படுவதும் மனிதனின் உணர்ச்சிகளே. ஆனால் வேதாகமம் சொல்கிறது.

*"உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்" (யோவான். 11:25)* என்று



இன்று உலகில் வாழ்கின்ற மனிதன் "பெறுதல்" என்பதை உயர்வாகவும், "இழப்பு" என்பதைக் கடினமாகவும் சிந்திக்கிறான். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் நிச்சயம் என உறுதி செய்யப்பட்டதுதான் "மரணம்". இந்த மரணம் பாவத்தின் கூலி என்று இறைவார்த்தை சொல்கிறது. மனித வாழ்வின் வரவு செலவுக் கணக்கிலே, பாவத்தின் வரவே அதிகமாய் காணப்படுகிறது. மனிதன் பாவத்துக்குள்ளே வாழ்ந்து, அதற்குள்ளே இறந்து போகின்றான். வேதாகமம் சொல்கிறது.

*"பாவத்தைப் பொறுத்த மட்டிலே நீங்கள் இறந்தவர்கள்" (உரோமையர் 6:11).*

ஆம். எனது குடும்பம் வசதியாக வாழ வேண்டும், எனது பிள்ளைகள் நன்றாக வளர்க்கப்பட வேண்டும், எல்லோரும் என்னை மதிக்க வேண்டும், எனது சொல்லை எல்லோரும் கேட்க வேண்டும், என்னைப் பெருமையாக பேச வேண்டும், எனக்கு மட்டும் எல்லாவற்றிலும் முதலிடம் வேண்டும் என்று ஒரு தனிமனிதன் வாழ நினைக்கின்றபோது, அது அவனுடைய வாழ்வின் வளர்ச்சியென நினைக்கின்றான். இல்லை, அதுதான் அவன் ஆன்மாவின் வீழ்ச்சி.

புனித ஜோன்வொஸ்கோ சொல்லுகிறார். *"ஆண்டவரே ஆன்மாவை மட்டும் எனக்குத் தாரும். ஏனைய அனைத்தையும் நீர் எடுத்துக் கொள்ளும்"* என்று. ஆம் இவ்வுலகிலே நாம் வாழுகிறபோதே, இறக்கிறோம். ஆனால் எமது ஆன்மா என்றுமே இறவாதது. இந்த ஆன்மா என்றுமே இறவாது. இந்த ஆன்மா இறவாது இருக்க எமக்கு ஆவிக்குரிய வாழ்வு வேண்டும்.

வாழ்வதற்காகப் பிறக்கிறோம், பிறப்பதற்காக வாழ்கிறோம்,
வாழ்வதற்காக இறக்கிறோம், இறப்பதற்காக வாழ்கிறோம்.

வேதாகமம் சொல்கிறது, *"ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு, வருவது சாவே. ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியுமே" (உரோமையர் 8:6)* என்று.

ஆகவே இவ்வுலகிலே நாம் வாழுகிறபோதே, நிலைவாழ்வையும், அமைதியையும் பெறவேண்டும் என்றால், நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் ஆண்டவருக்கு உரியவர்கள் என்கின்ற மனநிலையோடு வாழுகிற வாழ்க்கை எமக்குத் தேவை. இன்று எம்மில் எத்தனை பேர், பிறரை துன்புறுத்தி, அவர்கள் கண்ணீரில் இன்பம் காண்கிறோம். ஆறுதல் தேடி வருபவனை கொடூரமான வார்த்தைகளால் வதைத்து அவனை கழுமரத்தில் ஏற்றுகிறோம். இதுதான் சந்தர்ப்பம் என்று, அவனை வீழ்த்தி எமது தேவைகளை சாதித்துக்கொள்கிறோம்.

இது மனித வாழ்க்கை அல்ல. மிக்கோஸ் என்பவர் சொல்கிறார். *"பிறருக்காக வாழும் தருணங்களில் மட்டுமே, மனிதன் உயிர் வாழ்கின்றான். தனக்காக வாழும்போது இறக்கிறான்"* என்று. ஆகவே எப்போது நாம் பிறருக்காக வாழுகிறோமோ அப்போது தான் வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது.

வேதாகமம் சொல்கிறது *"தனக்கென வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர்."* (யோவான் 12:25) என்று. ஆகவே ஒருவருக்காக ஒருவர் வாழும்போதுதான் மனிதன் வாழப் பிறக்கின்றான்.

இறந்த ஆன்மாக்களுக்காக செபிக்கும் இந்த நாட்களிலே, இறந்து கொண்டிருக்கும் நாங்கள் சிந்திப்போம். ஒரு மனிதனுக்கு வாழும் போது செய்யாத காரியங்களை அவன் இறந்தபோது செய்வதில் பலன் இல்லை.

இறந்தவர்களுக்காக கல்லறை கட்டுவதைவிட வாழ்வோருக்காக உள்ளங்களைத் திறப்போம். செல்வம் சேர்ப்பதில் அல்ல. அதை பகிர்வதே அதன் நிறைவு. அன்பை சொல்வதில் அல்ல, அதை வெளிப்படுத்துவதிலேதான் உயர்வு. பல மனிதர்கள் வாழ்ந்துகொண்டே இறக்கிறார்கள். சில மனிதர்கள் இறந்தும் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

பேரளவில் இல்லை வாழ்க்கை. நாளை பெயர் சொல்லும் சான்றுதான் வாழ்க்கை. அதை உணர்ந்து வாழ்ந்திடுவோம்.

மனிதனே நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய், மறவாதே ....... மறவாதே ........

## இறந்த உடலை நினைத்து இறவாத ஆத்துமாக்களாய் வாழ ....!

*அருட்பணியாளர் எஸ். மதுராங்கன் குரூஸ்.*

மானிட வாழ்வின் மகத்துவமெல்லாம் ஜனனம் மரணத்தை சந்திக்கும் வரையே. வாழ்க்கை என்பது மனிதர்கள் சத்தம். மரணம் என்பது மறைவது மொத்தம். வாழ்க்கையே ஒரு வரவு செலவு. வந்தது ஒரு வரவு, போவது ஒரு செலவு. யாரோடு யார் வந்தது, நாம் போகும் போது யாரோடு யார் செல்வது மரணமென்பது உடம்பு எனும் இயந்திரத்திற்கு நிகழவேண்டிய கடைசி விஞ்ஞான நிகழ்வு.

Hellow! என்ன பயப்பிடுகிறீர்களா? ஏன் பயம்? எதற்குப் பயம்? ஆபிரகாம் லிங்கன் பிறந்தார். இறந்தார். அன்னை திரேசாவும் பிறந்தார் இறந்தார். அப்படியென்றால் எனக்கு என்ன நிலைமையென்றா யோசிக்கிறீர்கள்! Do not Worry! கவலை வேண்டாம். ஒன்று மட்டும் உண்மை. அடுத்த பிறப்பு, ஏழு பிறப்பு இப்படியெல்லாம் நமக்கு இல்லை. ஏனெனில் அவர் பிறந்தார். இறந்தார். உயிர்த்தார். இன்றும் வாழ்கிறார். "ஏனெனில் துஞ்சினோரின் முதற்கனி அவரே" அவர்தான் நம் இயேசு ஆண்டவர். மரணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர். மறுவாழ்வு உண்டென்று காட்டியவர். எல்லோரும் பிறந்தார்கள். இறந்தார்கள். ஆனால் கிறிஸ்து மாத்திரமே உயிர்த்தார். எனவே எமது எல்லாப் பிறப்புமே கிறிஸ்துவிலேதான். அவர் உயிர்த்தெழுந்ததுபோல, நாமும் உயிர்த்தெழுந்து தீர்வையிடப்படுவோம். (மத்.25:31-46)

### இறைவார்த்தை தரும் ஆறுதல்

"ஏனெனில் என் மீட்பர் வாழ்கிறார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார். நான் சதையோடு இருக்கும் போதே; கடவுளைக் காண்பேன்" (யோபு 19:25)

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன" (சால ஞானம் 3:1)

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வுதருபவனும் நானே ... என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பிலும் வாழ்வார்" (யோவான் 11:25)

"சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (2 கொரி.4:16-5:1)

"நம் தேடல்கள் எங்கே ஆரம்பித்தாலும், அவை கிறிஸ்துவிலேதான் முடிய வேண்டும்". தினமும் இறப்பவர்கள் உள்ளார்கள். இறப்பை எதிர்கொள்வோரும் உள்ளார்கள். நாமோ கிறிஸ்துவை எதிர்கொள்ளத் தயாராவோம். கார்த்திகை என்பது இறந்தோரை நினைக்கும் மாதம் மட்டுமல்ல. நமது இறப்பையும் நினைவுபடுத்தும் மாதம். இறந்தோருக்காகச் செபிக்கும் மாதம். அவர்கள் விட்டுச்சென்ற விசுவாச மரத்தை வளர்க்கும் மாதம். அங்கே வைக்கப்படும் மெழுகுதிரிகள் எமது விசுவாச ஒளியையும், பூக்கள் ஆண்டவரிடத்தில் வாசம் வீசுவதையும், வெள்ளையாடை வேந்தன் இயேசுவைப்போல் தூய்மையாகவும் வாழ அழைக்கிறது. *"கல்லறைக்குச் செல்வோம். கருத்தாய் ஜெபிப்போம். கடைசிநாளை நினைப்போம். கர்த்தருக்காய் வாழ்வோம். பயணிப்போம்."*

# தமிழர் விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியில் நீதிகோரி நிற்கின்றது

**புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்கள் மத்தியில் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார்**



நீண்ட காலமாகியும் இன்னும விடுதலை பெறாமல் எமது மண்ணும் மக்களும் அடிமைத்தனத்தில் தத்தளித்து அபயக்குரல் விடுக்கின்றனர். பல படிகள் ஏறி தமிழர் விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியில் நீதிகோரி நிற்கின்றது. இந்த நேரத்தில்தான் உங்கள் பங்கு இந்த நாட்டு மக்கள் மத்தியிலும் அரச மட்டத்திலும் எங்கள் தாயகம் சார்பாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கடந்த ஆகஸ்ட் மாதம் ஜேர்மன் கேவலார் திருநாள் முன்தினமான 05.08.2005ல் இடம்பெற்ற பாதயாத்திரை வழிபாட்டின் நிறைவில் இளையோருக்கான ஒன்றுகூடல் நிகழ்வில் அருட்பணியாளர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் குறிப்பிட்டார். கேவலார் பீற்றர் - கனிசியஸ் யாத்திரிகர் மண்டபத்தில் பெருந்திரளான இளையோர் குழுமியிருக்க பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்த அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள் இளையோரை விழித்து மிக அர்த்தமுள்ளதும் சிந்திக்கத் தூண்டியதுமான உரையொன்றை நிகழ்த்தினார். அவ்வுரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

அன்பின் பிள்ளைகளே, உலக இளைஞர் தின விழாவின் ஆரம்பத்தில் கேவலார் அன்னையின் ஆலய மண்டபத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் இளையவர்கள் முன் உரையாற்ற வந்திருப்பதை ஒரு பேறாகக் கருதுகின்றேன். உலக இளைஞர்களோடு ஒப்பிடுகையில் எமது தமிழ் இளைஞர்கள் வித்தியாசமான அனுபவத்தைப் பெற்றவர்கள். ஏறக்குறைய 25 வருடங்களுக்கு முன்பாக உங்கள் பெற்றோர்கள் தமது உயிரைப் பாதுகாப்பதற்காக இந்நாட்டிற்குப் புலம்பெயர்ந்து அந்நிய நாட்டில் அரசியல் தஞ்சம், மொழி படித்தல், தொழில் தேடுதல் போன்ற பல பிரச்சினைகளைச் சந்தித்து அவற்றை எதிர்நீச்சல் போட்டுக் கடந்தவர்கள். இங்கு குடிபெயர்ந்த முதற் சந்ததி வயதில் இளையவர்களாயிருந்தாலும், வாழ்க்கையை நீந்திக் கடக்க வேண்டும் என்ற எண்ணமும், தாய் நாட்டையும் உறவுகளையும் விட்டுப்பிரிந்த ஏக்கமும், கவலையும் கொண்டிருந்தனர். அவர்களே இன்றைய உங்கள் பெற்றோர்கள். அவர்கள் பல துன்பங்களை அனுபவித்தும் பல கடுமையான உழைப்புக்கு மத்தியிலும் உங்களை வளர்த்து உருவாக்கியுள்ளார்கள். மற்ற இளையோர்களுக்கு நீங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் பறைசாற்ற உங்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள், கல்வியறிவு, விளையாட்டுப் போன்ற பலவிதமான செல்வங்களையும் உங்களுக்கு வழங்கியுள்ளனர்.

இன்று 25 வருடங்கள் கடந்த பின்பும் இந்த நாட்டுக்கு வந்தபோது தாம் கொண்டிருந்த தாய்நாடு பற்றிய ஏக்கங்கள், அபிலாசைகள், அமைதிக்கான பற்று விடுதலை விருப்பம் போன்ற விழுமியங்களைக் கொண்டுள்ளனர். இளையோரான நீங்கள் இங்கு கல்வி கற்று உருவாக்கப்பட்டு எதிர்காலப் பொறுப்புக்களை பெற்றோர்களிடமிருந்து கையேற்க இருக்கின்றீர்கள்.

உங்கள் பெற்றோர் தங்கள் உள்ளத்தில் இருந்த ஏக்கங்கள், கவலைகளை முழுமையாக உங்களிடம் எடுத்துச் சொல்லவுமில்லை, சொல்ல விரும்பவுமில்லை. பிள்ளைகளுக்கு எமது கவலைகளைச் சொல்வதால் அவர்களின் மனநிலை பாதிக்கப்படும் என்ற எண்ணத்தில் தமது கவலைகள் ஏக்கங்களை தம்முடனும் தமது நண்பர்களுடனுமே பகிர்ந்துகொண்டனர். தாய் மண்ணின் விடுதலைக்குப் பங்களிப்புச் செய்து வந்திருப்பினும் எமது நீதிக்கான போராட்டம் பற்றி உங்களுடன் அதிகமாகப் பகிர்ந்துகொள்ளவில்லை. நீங்களும் உங்கள் கடமையான கல்வி, புதிய மொழி, ஐரோப்பிய கலாச்சாரம் போன்றவைகளை அறிந்தவர்களாக விரிந்த மனப்பான்மை, திறமைகள், புதிய மொழியறிவுகளுடன் உருவாக்கப்பட்டிருக்கிறீர்கள். இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் இளையோரான நீங்கள் இந்த நாட்டிலே தமிழ் மக்களின் எதிர்காலப் பொறுப்பை ஏற்கும்போது உங்கள் பெற்றோரும் தாய்நாட்டு மக்களும் ஓர் பெரிய வேண்டுகோளை விடுக்கின்றனர். நீண்ட காலமாகியும் இன்னும் விடுதலை பெறாமல் எமது மண்ணும் மக்களும் அடிமைத்தனத்தில் தத்தளித்து அபயக்குரல் விடுக்கின்றனர். பல படிகள் ஏறி தமிழர் விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியில் நீதிகோரி நிற்கின்றது. இந்த நேரத்தில்தான் உங்கள் பங்கு இந்த நாட்டு மக்கள் மத்தியிலும் அரச மட்டத்திலும் எங்கள் தாயகம் சார்பாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய அறிவுத்திறனும், செயற்பாடும் உங்களிடம் வளர வேண்டும்.


அண்மையில் சுனாமியின் பாதிப்பு இடம்பெற்றபோது எம் மக்களின் துன்பங்களை நீக்க நீங்கள் எவ்விதமாக ஜேர்மன் இளையோருடன் இணைந்து உதவிகளை சேகரித்ததைப் பாராட்டும் அதேவேளை தொடரும் தாயக விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை தெளிவாக அறிந்து உங்கள் பெற்றோர் செய்திருக்காத பணியை நீங்கள் செய்ய முன்வர வேண்டும். அவர்கள் மொழி தெரியாத, நிரந்தர வதிவிட அனுமதியற்ற, பொருளாதார வளமற்ற நிலையில் இருந்தார்கள். ஆனால் நீங்கள் இவைகளைக் கடந்துள்ளீர்கள். உங்களில் பெரும்பான்மையானோர் இந்நாட்டின் குடியுரிமைபெற்று அரசியலிலே உரிமையுடன் ஈடுபடக்கூடியவர்களாக இருப்பதால் நீங்கள் உங்கள் சூழலிலே வாழும் மக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் எம் மக்களுக்காக நீதி கோரிக் குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

# இளைஞர் பொழிவு

## ஆன்மீகம்

**சிந்தனைத் தொடர் – 13**

**Fr. வின்னி யோசப் எழுதுகிறார்**



ஒரு பேராசிரியர் ஒரு குருவிடம் சென்று, "எனக்கு இறைவனைப் பற்றி கற்றுத் தாருங்கள்" என்று வேண்டினார். குரு அவரை தேநீர் விருந்துக்கு அழைத்தார். விருந்தின்போது, குரு தேநீரை எடுத்து, பேராசிரியரின் குவளைக்குள் ஊற்றினார். தேநீர் நிறைந்து வழிந்தது. "குருவே தேநீர் நிறைந்து வழிகிறது" என்று பேராசிரியர் கத்தினார். குரு பேராசிரியரிடம், "நீரும் இதேபோலதான், கடவுள் பற்றிய எண்ணத்தால், அறிவால் உமது உள்ளம் நிறைந்து வழிகிறது. இந்நிலையில் நான் உமக்குக் கற்றுத்தர இயலாது. உமது உள்ளத்தை வெறுமையாக்கிவிட்டு வாரும். கடவுளை உமக்குக் காண்பிக்கின்றேன்" என்றாராம்.

நாமும் இன்று இதே நிலையில்தான் இருக்கிறோம். நமக்குள் இருக்கும் கடவுளை நாம் உணர முடியாத அளவுக்கு நம் உள்ளம் கடவுளைப் பற்றிய எண்ணங்களாலும், அறிவாலும், மயக்கத்தாலும் நிரம்பி வழிகிறது.

ஒரு குடிகாரன் முன்சென்று கைவிரல்களைக் காட்டி, இது இரண்டு விரலா? மூன்று விரலா? என்று கேட்டால், அவனால் சொல்ல இயலாது. ஏனென்றால் அவன் மது மயக்கத்தில் இருக்கிறான். அதேபோலதான் நம்முள் இருக்கும் கடவுளை நாம் உணர முடியவில்லையென்றால் காரணம் நாமும் மயக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் அர்த்தம். பணம், பதவி, அதிகாரம், நான் என்ற அகங்காரம், ஆணவம், சிற்றின்பம், நேர்மையின்மை, வன்மம், துரோகம், பொறாமை, பொன், பொருள் இவற்றின்மேல் நாம் கொள்கின்ற அளவற்ற ஆசை (மயக்கம்) இவையெல்லாம் கடவுளை நாம் உணரவிடாமல் செய்துவிடுகிறது. சீடன் ஒருவன் தன் குருவிடம் "இந்த மயக்க நிலையிலிருந்து விடுபட்டு, விழிப்புணர்வு அடைவது எப்படி?" என்று கேட்டான். "அது நம்மை இறைமையால் நிறைத்துக்கொள்ளும்போது நிகழ்கிறது." "புரியவில்லை" என்றான் சீடன். "சல்லடையில் தண்ணீரை நிரப்புவது போன்ற முயற்சி" என்றார் குரு. சீடர்கள் அனைவரும் சல்லடைகளைக் கையிலேந்தி தண்ணீரை நிரப்ப முயற்சி செய்தார்கள். ஊற்ற ஊற்றத் தண்ணீர் கீழே வழிந்தோடியது. "சரி, இது முடியாத காரியம் என்றுதான் குரு மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்" என நினைத்தார்கள். குருவிடம் சென்று சல்லடையை நீரால் நிரப்பவே முடியாதே என்று கவலையுடன் கூறினார்கள். குரு சல்லடையைத் தூக்கி அருகிலிருந்த ஆற்றில் எறிந்தார். சல்லடை நீரில் மூழ்கியது. "இப்போது, பாருங்கள் சல்லடை நீரால் நிரம்பிவிட்டது. உங்களைத் தூக்கி இறைமைக்குள் எறியுங்கள். இறைமை உங்களுக்குள் துளிர்க்கும். நீங்கள் மயக்கம் நீங்கி விழிப்புணர்வு அடைவீர்கள்." இறைமையை அடைவதற்கு யோகிகள் கூறும் வழி, காந்தத்திற்கும், ஊசிக்கும் இருக்கும் தொடர்பைப் போன்றது. காந்தத்திலும் இரும்புக்கான ஈர்ப்பு இருக்கிறது. இரும்பிலும் காந்தத்திற்கான ஈர்ப்பு இருக்கிறது.

நம்மிடம் அன்பு ஊறுமேயானால் இறைவனிடம் இருக்கின்ற அன்பை உணரமுடியும். நம்மிடம் இருக்கின்ற அன்பு அதிகம் அதிகமாக இறைமையோடு சென்று ஒட்டிக்கொள்கின்ற முடிவு எளிதாகிவிடுகிறது. "கண்ணில் காணும் உன் சகோதரனை, சகோதரியை அன்பு செய்யாமல், நான் கடவுளை அன்பு செய்கிறேன் என்றால் அவன் பொய் சொல்கிறான்" என்கிறது விவிலியம். கடவுள் நம்முள் இருப்பதைப்போல், நம் அயலானிடத்திலும் இருக்கிறார். "நம்மை நாம் அன்பு செய்வதைப்போல நம் அயலானையும் அன்பு செய்வது, கடவுளையே அன்பு செய்வதாகும்" என்கிறது விவிலியம்.

காந்திஜி இதைத்தான் "கடவுளே அன்பு" என்று கூறினார். பிற்காலத்தில் மாற்றி 'அன்பே கடவுள்' என்றனர். இந்த அன்பின் வெளிப்பாடு - செயற்பாடுதான் வாழ்க்கையும் வழிபாடும். ஆனால் இன்று வாழ்க்கையையும், வழிபாட்டையும் இரு வேறு கூறுகளாகப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனிடம் குரு கேட்டார், "உன் ஆடுகள் எவ்வளவு புல் தின்னுகிறது? அதற்கு அந்தச் சிறுவன், "வெள்ளை ஆடுகள் 20 கிலோ புல் தின்னும், கறுப்பு ஆடுகள் 20 கிலோ புல் தின்னும்" என்றான். "உன் ஆடுகள் எவ்வளவு தண்ணீர் குடிக்கும்?" "வெள்ளை ஆடுகள் 10 லீட்டர் தண்ணீர் குடிக்கும் கறுப்பு ஆடுகள் 10 லீட்டர் தண்ணீர் குடிக்கும்" என்றான். " உன் ஆடுகள் எவ்வளவு கம்பளி தரும்? "வெள்ளை ஆடுகள் 5 கிலோ, கறுப்பு ஆடுகள் 5 கிலோ" என்றான். இப்படி ஒவ்வொரு முறையும் வெள்ளை ஆடுகளா? கறுப்பு ஆடுகளா? என்று கேட்டு, இரண்டிற்கும் ஒரே பதிலை அவன் சொல்லிக் கொண்டிருந்தான். குரு கோபமடைந்து, "ஒரே பதிலைச் சொல்கிறாயே, ஏன் ஆடுகளைப் பிரித்து பேசுகிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "வெள்ளை ஆடுகள் என்னுடையவை". என்றான். "அப்படியென்றால், கறுப்பு ஆடுகள் யாருடையது?" என்று கேட்டார். "அவையும் என்னுடையவைதான்." என்று பதில் சொன்னான். நாமும் அந்த சிறுவனைப் போலதான் விடை ஒன்றாக இருந்தாலும் பிரித்துப் பிரித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். வாழ்க்கை வேறு, வழிபாடு வேறு, உலகியல் வாழ்க்கை வேறு, ஆன்மீக வாழ்க்கை வேறு என்று கூறுகிறோம்.

பிடிப்புக்கள் இல்லாமல், விருப்பு, வெறுப்பு இல்லாமல் அன்பின் அடிப்படையில் பாராபட்சம் இல்லாமல் செய்கின்றபோது, உழைப்புக் கூட வழிபாடாக மாறும். மாறாக, விருப்பு வெறுப்புக்களோடு செய்தால் பிரார்த்தனைகூட நீர்த்துப் போய்விடும்.

➢ மனிதனை மனிதனாக ஏற்று அன்பு செய்யாமல் பாதயாத்திரையாக சென்று உண்டியலில் காசு போடுவது ஆன்மீகமா?

➢ சாப்பிட சோறு இல்லாமல், உடுக்க உடை இல்லாமல், படிக்க பள்ளிக்கூடம் இல்லாத நிலையில் கோவில் கட்டுவது ஆன்மீகமா?

➢ மனிதனை ஜாதியின் பெயரால் பிரித்து ஒதுக்கி வைக்கின்ற விழாக்களும், வழிபாடுகளும் ஆன்மீகமா?

➢ இறைவனை சுட்டிக் காட்டுகின்ற சிலைகள், சிற்பங்கள், கோவில்கள்தான் கடவுளென்று வழிபடுவது ஆன்மீகமா?

➢ வாரத்தின் 6 நாட்கள் எப்படியும் வாழ்ந்துவிட்டு, ஒரு நாள் 1 மணி நேரம் கோவிலுக்கு சென்று சாமி கும்பிடுவது ஆன்மீகமா?

*என்னைப் பொறுத்த வரையில் ஆன்மீகம் என்பது நிகழ்காலத்தில். இந்தக் கணப்பொழுதில் முழுமையான விழிப்புணர்வுடன் வாழ்க்கையையும் வழிபாட்டையும் வேறுபடுத்தாமல் அன்பின் வெளிப்பாடாக நம்மை மாற்றி மகிழ்ச்சியாக வாழ்வதே ஆகும். (தொடர்ந்து எழுதுவேன்)*



# திருச்சபையின் நோக்கும் போக்கும்



ஓர் விமர்சனக் கண்ணோட்டம்

**தொடர் 16**

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அமதி)

இன்றைய திருச்சபையில் பிளவுகளுக்கும் பிரிவினைகளுக்கும பஞ்சமில்லை. "கொஞ்சமோ பிரிவினைகள் அது கோடி என்றால் பெரிதாமோ" என்று பாட்டுக்கொரு புதல்வன் பாரதி மொழிந்த சொற்கள் நமது தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமல்லாது நமது தலத்திருச்சபைக்கும் பொருந்தும். திருச்சபை வெளிப்புறத்தில் ஒரு சமூகம் என்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும் அதன் உட்புறத்தில், அகத்தில் சாதி, இனம், மொழி, நிற அடிப்படையில் பிளவுகளும், ஏற்றத்தாழ்வுகளும், அடக்குமுறைகளும் மலிந்து கிடக்கின்றன.

### *பரிசேய வாழ்விற்கு எப்போது முற்றுப்புள்ளி!*

சடங்குகளாலும், சம்பிரதாயங்களாலும் வெளிப்புறத்தை தூய்மைப்படுத்தும் திருச்சபை அதன் உட்புறத்தில் தன்னல விருப்புகளும் (மத் 23:25) எல்லா வகையான அழுக்குகளும் (மத் 23:27) போலித்தனமும் நெறிகேடும் (மத்23:28) புரையோடிக் கிடப்பதை மறந்துவிட்டது.

குறிப்பாக திருச்சபைத் தலைமைகள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என எல்லா நிலைகளிலும் சாதி - பிளவுபட்ட உணர்வுகள் ஆழமாக ஊடுருவியிருப்பது திருச்சபை இயேசுவின் இலட்சியத்தை விட்டு விலகிச் சென்றுகொண்டிருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது.

பரிசேயத்தனமான மனநிலைகள் கிறிஸ்தவ வாழ்வில் வேரூன்றிவிட்டதால் இயேசுவின் இறையரசிற்கு தொலைவிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். கிறிஸ்தவக் கடமைகளை, அருட்சாதனங்களை பெறுவதால் மட்டும் இறையரசை மலரச் செய்ய முடியாது.

இறைவார்த்தை ஆழமாக இதயத்தை ஊடுருவ அனுமதிப்பதன் மூலமே அகத்தில் புதைந்து கிடக்கும் நற்செய்திக்கும் இறையரசு மதிப்பீடுகளுக்கும் ஒவ்வாத மனநிலைகளிலிருந்து விடுபட முடியும். சடங்குகளையும், சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் இறுகப்பற்றிக்கொண்டு, சகட்டு மேனிக்கு கிறிஸ்தவத்தை வாழ்வதன் மூலம் கிறிஸ்துவின் சீடர்களாக மாறிவிடமுடியாது.

இன்று நாம் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து சாதித்தது என்ன? என்ற வினா எம் இதயத்தை நெருடச் செய்கின்றது. குறிப்பாக கிறிஸ்தவத்தை ஒரு வாழ்க்கை முறையாக மாற்றாது, சடங்குகளோடும், திருவிழாக்களோடும் முடிந்த கதையாகவே காணுகின்றோம்.

அடுத்தவர் எப்படி வாழ்கிறார் என்பதை பார்த்து நேரத்தை விரயமாக்கி வாழ்வதை விடுத்து, நான் எப்படி வாழ்கின்றேன் என்ற அகநிலைப்பார்வை இன்று இன்றியமையாதது. எனவே அடுத்தவரை தீர்ப்பிட்டு, விமர்சித்து வாழும் பரிசேயத்தனமான பார்வை நீங்கி அகக்கண்கள் திறக்கப்படும்போதே நாம் கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கேற்ற வாழ்க்கை வாழ முடியும். இயேசுவின் இறையாட்சிக் கனவுகளை எமது விழிகள் சுமக்கும் போதுதான் அடுத்தவரை இயேசுவின் மனநிலையில் குறைகளோடு ஏற்று அரவணைத்து அன்பு செய்ய முடியும்.

அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் இன்று 'உண்மைத் தன்மை' (genuiness) இல்லாத நிலையே காணப்படுகின்றது. உண்மைத்தனமான ஒன்றிப்பு கிறிஸ்தவ மக்கள் மத்தியில் இல்லாத நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது. அத்துடன் மிகப்பெரிய கவலைதரும் விடயம் என்னவெனில் கிறிஸ்தவ மக்களிடையே ஒற்றுமையின்மை, பகைமை, பிளவுகள் பற்றி யாரும் அலட்டிக்கொண்டதாகவும் தெரியவில்லை. இயல்பாக பிளவுகளோடு, பகைமைகளோடு கிறிஸ்தவத்தை வாழ பழகிவிட்டார்கள்.

### *அன்புறவில்தான் புத்துலகு படைக்க முடியும்*

கிறிஸ்தவம் சாரம் உள்ள மதமாக மாற்றப்பட வேண்டுமெனில் கிறிஸ்தவ சமூகத்தில் பிளவுகளும் பிரிவினைகளும் நீங்கி அநீதிகளும் அக்கிரமங்களும் அழிந்து, அன்புறவிலும் தோழமையிலும் சமத்துவத்திலும் கிறிஸ்தவ சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இயேசு உறவு வாழ்வின் அடிப்படையில்தான் தனது இறையரசு இயக்கத்தை தொடக்கி வைத்தார். இந்த இயக்கத்தில் "யூதர் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை, ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை" (கலா 3:28).

ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற ஒருமைப்பாடு வெறும் விசுவாச அறிக்கையாக அமைந்துவிடும்போதே திருச்சபையில் பிளவுகளை அனுமதிக்கின்ற இயல்பு நிலைக்கு பழக்கப்படுத்தி விடுகின்ற மனநிலை ஏற்படும். குறிப்பாக இயேசுவின் பணி வாழ்வில் மனிதத்தை சிதைக்கும் அநீதிகளை வேரறுத்து மனித குலத்திற்கு முழு விடுதலை அளிப்பதிலேயே அவர் குறியாக இருந்தார்.

ஆனால் இன்று இயேசுவின் பெயரைச் சொல்லி வாழுகின்ற கிறிஸ்தவ சமூகம் சகோதரத்துவ வாழ்வுக்கும், சமத்துவத்துக்கும் முதன்மை அளிக்காது, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஒரு இலகுவான கிறிஸ்தவ வாழ்க்கை முறையை அமைத்து அதில் திருப்தி காண்கிறது. இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றும் திருச்சபை தான் எங்கெல்லாம் பிரசன்னமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் சமத்துவமான சமூகத்தை கட்டியெழுப்பும் பணிக்கு முதன்மை அளிக்க வேண்டும். திருச்சபையின் அகவாழ்வு இத்தகையதொரு பின்புலத்தில் நோக்கப்படுகின்றபோதே இன்றைய உலகிற்கு, பிளவுபட்ட மானிட வாழ்விலே நம்பிக்கையின் குறியீடாக திருச்சபை திகழ முடியும். திருச்சபை அடிப்படையில் சமத்துவத்தை சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தும் செயல்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட முன்வர வேண்டும். அன்புறவின் ஊற்றில் பிறக்கின்ற ஒரு கிறிஸ்தவ சமூகமே நம் இயேசுவின் இறையரசு சமூகம் என்பதை இந்த உலகிற்கு இனங்காட்ட முடியும்.

திருச்சபை இன்று பாரிய புதுப்பித்தலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டிய நிலையில் உள்ளது. இன்றைய சூழல திருச்சபைக்கு சவாலாக உள்ளது. எனவே ஆழமான மனமாற்றத்துக்கும் புது வாழ்விற்கும் தன்னை உட்படுத்த வேண்டுமெனில் உண்மைத்தனமான சுய ஆய்வு இன்றியமையாதது. திருச்சபை ஒரு பாரிய அமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் அதன் கூறுகளான அக வாழ்வை புதுப்பித்து ஆழப்படுத்தும்போதே இன்றைய உலகில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக அது மாறும்.

### *புதுப்பித்தல் செயலில் வெளிப்பட வேண்டும்*

இன்று நடைபெறும் புதுப்பித்தல்கள் மேலோட்டமாக அமையாமல் வேரோட்டமாக அமைய வேண்டியது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் மனமாற்றங்கள், புதுப்பித்தல்கள் வாழ்க்கையில் தொடரும் நிகழ்வுகள் ஆகும். கிறிஸ்துவின் மனநிலையை உள்வாங்கி அதற்கு உருக்கொடுத்து வாழும் வாழ்க்கை முறைக்கு இறைமக்கள் தூண்டப்படும் நிகழ்வுகளாக புதுப்பித்தல்கள் அமைய வேண்டும். அடிப்படையில் இன்றைய சூழலில் இறையுணர்வும் இறை நம்பிக்கையும் அருகிப் போவதற்கு முதன்மையான காரணியாக விளங்குவது ஆன்மீகத்தைப் பற்றிய தெளிவான பார்வை இல்லாமையும் நவீனத்துவம் விடுக்கும் சவால்களும் என்று சொன்னால் மிகையாகாது.

அத்துடன் இறைமக்களின் நம்பிக்கை வாழ்வு சடங்கு என்ற மேற்பரப்பில் நிலைப்பதினால் அது ஆழமாக அவர்களை ஊடுருவிச் செல்வதில்லை. இதன் விளைவாகவே புதுப்பித்தல்கள், மனமாற்ற நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற்றாலும் மக்களின் இதயங்களில் ஒரு ஆழமான மனமாற்றம் தென்படுவதாக தெரியவில்லை. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதுபோல தொடர்ச்சியாக இறைவார்த்தையின் அடித்தளத்தில் புதுப்பித்தல்களை மேற்கொள்ளும்போது நிச்சயமாக அது ஒரு வித தாக்கத்தை மக்களின் மனங்களில் ஏற்படுத்தலாம். ஆனால் இப்புதுப்பித்தல் நிகழ்வுகள் வெறும் உணர்வு பூர்வமானவையாக அல்லது குணமாக்கும் வழிபாடுகளாக மட்டும் அமைந்து விட்டால் உண்மையான மனமாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

எனவே திருச்சபையில் உள்ள அனைத்து நிலையினருக்கும் ஒரு ஆழமான மனமாற்றம் ஏற்படாவிடத்து முழுத்திருச்சபையும் உலகிற்கு நம்பிக்கை கொடுக்கும் கருவியாக, ஒன்றிப்பின் அடையாளமாக மாறமுடியாது.

இன்றைய சூழலில் திருச்சபையானது அன்புறவையும், சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பும் பணிகளுக்கே முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். வெறுமனே அருட்சாதன திருச்சபையாக அல்லது அமைப்பை நிலைநிறுத்தும் திருச்சபையாக தன்னை இனங்காட்டிக் கொள்ளுமிடத்து காலத்துக்கு ஒவ்வாத திருச்சபையாக மாறிவிடும். வன்முறையும், பிரிவினையும், தீவிரவாதமும் மலிந்து காணப்படும் இன்றைய உலகில் புதுப்பித்தல்கள் மூலம் மக்கள் மனிதத்தை அமைதியை கட்டியெழுப்பும் கருவிகளாக செயற்பட அவர்களை தூண்ட வேண்டியது புதுப்பித்தல்களின் இலக்காக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆன்மீகப் புதுப்பித்தல்கள் மனித சமூகத்தில் நற்செய்திக்கு ஒவ்வாத வாழ்க்கை முறைகளை, மனநிலைகளை புதுப்பிப்பதற்கு உதவ முடியும். எனவே ஆன்மீக மனமாற்ற நிகழ்வுகள் வெறும் கோசங்களாக அமையாது மனித இதயங்கள் ஆழமான மனமாற்றத்துக்கு இட்டுச் செல்வதாக அமைதல் அவசியம்.

*(விமர்சனம் தொடரும்)*



### இன்றைய அறிவியல் யுகத்தில்கூட

# புதுமைகள் இன்னும் நடக்கின்றன

அருட்சகோதரர் கலாநிதி
பப்ரிஸ்ற் குருஸ்

**கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இம்மலையை நோக்கி "இவ்விடம் விட்டு அவ்விடம் செல்" என்றால் அது பெயர்ந்து செல்லும்**



1939 ம் ஆண்டு தொடக்கம் 1945 ம் ஆண்டு வரை, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் காரிருள் உலகெல்லாம் பரவியிருந்தது. ஐரோப்பாவின் சில நாடுகள் அடொல்வ் ஹிட்லரின் (ADOLF HITLER) கொடூர ஆட்சியின்கீழ் வீழ்ந்தன. பிரான்சிலும் இந்த ஜேர்மன் சர்வதிகாரியின் இரக்கமற்ற ஆட்சி அந்நாட்டு வாசிகளை, குறிப்பாக, யூத வம்சத்தினரை பெரும் வேதனைக்கு உட்படுத்தியது. பிரான்ஸ் நாட்டிலே, சுவிற்சலாந்தைச் சேர்ந்த பிராங் வேர்வல் (FRANK WERFEL) என்ற யூதனும் அவனுடைய பாரியாரும் வாழ்ந்து வந்தார்கள்.

சிறந்த கலைஞனும், எழுத்தாளனும், தத்துவஞானியுமாகிய பிராங் வேர்வல் பிரான்ஸ் நாட்டை விட்டு, தனது மனைவியுடன் சுதந்திர நாடாகிய அமெரிக்கா செல்ல எத்தனித்தான். ஆனால் தப்பியோட அவன் எடுத்த முயற்சிகளெல்லாம் வீணாய்ப் போய்விட்டன. இன்னுமொரு முறை அவன் எத்தனித்தான். இஸ்பானிய நாட்டிற்கும், பிரான்ஸ் நாட்டிற்குமிடையிலுள்ள எல்லையை வந்தடைந்ததும், அதைத் தாண்ட முடியாத பட்சத்தில், அவனும் அவனுடைய மனைவியும் ஏமாற்றத்துடன் மனமுடைந்து திரும்பவும் பிரான்ஸ் நாட்டிற்கே தங்களுடைய மறைமுகமான இடத்திற்குத் திரும்பினார்கள்.

வரும் வழியில், அவர்கள் நூற்றுக்கணக்கான பக்தர்களைக் கண்டார்கள். அப்பக்தர்கள் குதூகலத்துடனும், மிகுந்த சந்தோஷத்துடனும் ஒருவர் ஒருவருடன் அளவளாவி சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி, "நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?" என்று இவன் வினவினான். "நாங்கள் லூர்து கெபி செல்லுகிறோம்" என்று அவர்கள் கூறினார்கள். "லூர்து கெபியா?" "அது என்ன?" "அதில் என்ன விசேஷம்?" என்று அவன் ஆவலுடன் விசாரித்தான். அதற்கு அவர்கள், "லூர்து கெபி, பிரான்சின் தென் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. அக்கெபியில், தேவ அன்னையாகிய பரிசுத்த மரியாள் 1858 ம் ஆண்டு, ஒரு சிறுமியாகிய பர்ணதேத் அம்மாளுக்குக் காட்சிகள் பல கொடுத்தாள். அங்கு பல புதுமைகள் நடக்கின்றன. நாங்கள் எல்லோரும் அங்குதான் செல்கின்றோம்" என்றார்கள்.

யூதனாகிய பிராங் வேர்வலுடைய மனதில் பெரிய குழப்பம் ஏற்பட்டது. அவன் யூதனென்றபடியால், இயேசுநாதரிலேயோ, தேவமாதாவிலோ விசுவாசம் வைத்திருந்ததில்லை. யூத மக்கள் விஷேடமாக பழைய ஏற்பாட்டிலுள்ள யெஹோவாவைத்தான் நம்புவார்கள். அவரைத்தான் வழிபடுவார்கள்.

இரட்சகரின் வருகைக்காக காத்திருப்பவர்கள். ஆயினும் பிராங் வேர்வல், தனது மனைவியின் வற்புறுத்தலுக்கிணங்க, விரும்பியும் விரும்பாமலும் லூர்து கெபிக்கு தன் மனைவியுடன் சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

லூர்து கெபியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆழ்ந்த விசுவாசத்துடனும், பூரண நம்பிக்கையுடனும் மிகுந்த பயபக்தியுடனும் தேவ அன்னையின் திருச்சுரூபத்திற்கு முன்னால் முழந்தாற்படியிட்டு மன்றாடிக்கொண்டிருந்தார்கள். பிராங் வேர்வலின் மனதிலும் படிப்படியாக பயபக்தி ஆரம்பமாகியது. உணர்ச்சிவசப்பட்டு, தன்னையறியாமலே, அவனுடைய இதயத்தில் மிகவும் தாழ்மையான செபம் உண்டாகியது.

*"பரிசுத்த அன்னையே! நான் யூதமதத்தைத் தழுவியவன். எனக்கு உம்மிலோ, உமது மகனாகிய இயேசுவிலோ நம்பிக்கையில்லை. நான் உங்களை விசுவசிப்பதேயில்லை. இந்த பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளைக் கண்டு, நான் ஆச்சரியப்படுகிறேன். அவர்களுடைய ஆழ்ந்த விசுவாசத்தில் ஒரு அணுவேனும் எனக்கு இதயத்தில் இல்லை. அவர்களுடைய விசுவாசத்தை எனக்குத் தாரும். நான் ஒரு பாவி. பெரிய பிரச்சனையில் அகப்பட்டுள்ளேன். நானும் எனது மனைவியும் இந்நாட்டிலிருந்து தப்பியோடி, அமெரிக்கா செல்ல வேண்டும். அங்கு சென்றதும் உம்மைப் பாடிப் புகழ்வேன். உமது புனித நாமத்தை உலகெங்கும் பரப்புவேன். உமது அருட்கொடைகளைப்பற்றி ஒரு புத்தகம் எழுதுவேன். இது உண்மை! இது சத்தியம்! தயவுசெய்து எனக்கு உதவி செய்யும்"*

இது அந்த யூதனுடைய தாழ்மையான செபம்.

சில நாட்களுள் பிராங்க் வேர்வலும் அவனது மனைவியும் பிரான்ஸ் நாட்டிலிருந்து தப்பியோடி, ஸ்பானிய நாடு சென்று பின் இங்கிலாந்து போய், அங்கிருந்து சுதந்திர நாடாகிய அமெரிக்கா வந்தடைந்தார்கள். அங்கு சென்றதும் பிராங்க் வேர்வல் தனது வாக்குறுதியைக் காப்பாற்றினான். தேவ அன்னையைப் பற்றியும் அவரது மகிமையைப் பற்றியும், லூர்து கெபியின் விசேடங்களைப் பற்றியும் பர்ணதேத்தின் கீதம் ( The Song of Bernadette) என்ற அற்புதமான நூலை எழுதினான். அது கிறிஸ்தவ நாடுகளிலே மிகவும் பிரபல்யம் ஆகிவிட்டது.

சில ஆண்டுகளின்பின் The Song of Bernadette என்ற நூல் அதே தலைப்பில் ஒரு ஹொலிவூட் சினிமாப் படமாகவும் வந்து பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசப்படுத்தியது.

*"உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இம்மலையை நோக்கி 'இவ்விடம் விட்டு அவ்விடம் செல்'" என்றால் அது பெயர்ந்து செல்லும்"*

(மத்தேயு 17:20)

### நாவண்ணன் எழுதும்

# வித்தான காவியம்

மன்னார் வேதசாட்சிகளின் வரலாற்றைக் கூறும்

## காவியத் தொடர் – 5

### புதுமதம்

சாதிகள் இல்லை சமத்துவம் ஒன்றே
ஆதி இறைவன் பிள்ளைகள் யாவரும்
வேதியன் விளம்பிய வேதம் அதனால்
நீதியின் புதல்வர் நிறைந்தனர் அங்கு.

தலைவன் ஒருவன் தொண்டனே ஆவான்
அலையான் அகத்தால் அறத்தால் உயர்வான்
நிலையாய் நின்று நெறியைக் காப்பான்
விலையில்லாத வீட்டினுக்குரியான்.

எல்லாம் நிறைவாய் இருந்திடக்கண்டு
வல்லார் வேத வழியினைத் தொடர
எல்லா் மனமும் ஏற்றது மறையை
நல்லார் மனங்களில் இட்டது விதையை

அருஞ்செயல் ஆண்டவன் செய்த புதுமை
பெருந்தவம் செய்த பெருந்தகை மனதும்
வருந்துவோர் தேற வழங்கிய மொழியும்
திருந்திட வைத்தது திசையது மாற்றி

பாரம் சுமந்து பர்வதம் ஏறி
கோரமாகவே கொலையதுபட்ட
வீரச்சாவை உயிர்ப்பைக் கேட்டார்
சீரகம் பெற்று சிறுமையை மறந்தார்

பட்டிதோட்டம் பக்கத்தூரவர்
கட்டுக்கடங்கா காதலுற்று
எட்டி வந்து இணைந்தார் மறையில்
கிட்டி வந்தது சுவர்க்கம் என்று

ஆலயம் அமைத்தார் ஆகமம் படித்தார்
காலையும் மாலையும் கடவுளைத் தொழுதார்
ஓலையில் எழுதிய நற்செய்தி நான்கை
நாளும் கற்று நன்மைகள் பெற்றார்

நித்திய வாழ்வை நினைவில் கொண்டு
சத்திய வேதம் சேர்ந்தவர் ஆயிரம்
இத்தனை பேரும் இணைந்து மறையில்
உத்தமராய் உயர்ந்தார் உண்மையில்

ஆளுநன் அருங்குணன் இளஞ்சிங்கனும்
வாழும் வார்த்தைகள் வசமாய் போனோன்
மீளவும் மீளவும் மறையுரை கேட்டு
மீளாக்காதல் கொண்டனன் மறையில்.

### வேறு

நல்ல போதனை செய்யவே - பட்டிம்
நாடியே மறைபோதகர்
வல்ல தேவனைக் கூறவே - அவர்
வந்தனர் மொழி தந்தனர்

அன்பெனும் மறை கூறினார் - அவர்
அன்பிலே மதம் மாறினார்
இன்பமே நிலைத் தோங்கவே - அவர்
இன்மொழி பல கூறினார்

பட்டிம் வாழ்ந்திடும் பாமரர் - அந்த
கெட்டிக்காரனின் வார்த்தையால்
அட்டியின்றியே அனைவரும் - அவர்
அன்பு வார்த்தையைக் கேட்டனர்.

பக்தியோடவர் பந்தாயாய் - அங்கு
பரவசமாக நின்றனர்
முக்தி சேர்ந்திடும் போதனை - அவர்
மொழியவே இவர் கேட்டனர்.

ஆவியால் திடம் கூடவே - பெரும்
பாவியர் மனம் மாறவே
சீவியம் நித்ய மாகவே - அன்பை
தூவினார் அறைகூவினார்.

தீவினைக் கஞ்சாத் தீயரும் - மனம்
திருந்தினர் மறை திருப்பினார்
ஆவினைத் தேடும் கன்றுபோல் - மன
ஆனந்தம் கொண்டு சேர்ந்தனர்.

(காவியம் தொடரும்)

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி

ஓர் அரசனுக்கு நான்கு மனைவியர் இருந்தனர். இந்த நால்வரில் நான்காவது மனைவிமீது அரசன் முதல் தரமான அன்பைப் பொழிந்து வந்தான். காரணம் அவளே நான்கு மனைவியர்களிலும் அழகுள்ளவளாகக் கருதியதனாலாகும். மூன்றாவது மனைவியை வெளியிடங்களுக்குப் போகும் போதெல்லாம் தன்னுடன் கூட்டிச் செல்வான். ஏனெனில் அவளே பட்டத்துக்குரியவளாக இருந்தாள். இரண்டாவது மனைவியிடத்தில் தேவை ஏற்படும்போது அவ்வப்போது போய்வருவான். முதலாவது மனைவியிடம் செல்வதே இல்லை எனலாம். ஏனென்றால் அவள் அழகில்லாதவளாகக் கொள்ளப்பட்டதனாலாகும்.

திடீரென அரசன் நோயுற்றான். வைத்தியர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பரிசோதனைகளை மேற்கொண்டார்கள். இறுதியில் அரசன் தீராத நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், அவன் உயிர் வாழப்போகும் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்றும், ஓரிரு மாதங்களில் அவன் இறந்து விடுவான் என்றும் கூறினார்கள். அரசன் மனம் கலங்கினான். வேதனையுற்றான். இருப்பினும் இந்நிலையை படிப்படியாக ஏற்றுக்கொண்டவனாக தன்னுடைய சாவுக்குத் தயார் செய்தான். தன் நான்கு மனைவியரையும் உடனடியாக அழைத்தான். "வாழும் நாட்கள் எனக்கு எண்ணப்பட்டு விட்டன. சாவதற்கோ எனக்குப் பயமாக இருக்கிறது. ஆகவே என்னோடு சேர்ந்து இறப்பதற்கு உங்களில் யார் தயாராக இருக்கிறீர்கள்?" என நான்கு மனைவியரிடமும் கேட்டான். நான்கு மனைவியரில் யார் தன்மீது அதிகம் அன்பு செலுத்துகிறார்கள் என்பதையும் அரசன் கண்டறிய விரும்பினான்.

"என்னோடுகூட சாவதற்கு நீ ஆயத்தமா?" என்று தான் அதிகம் அன்பு செய்த நான்காவது மனைவியைப் பார்த்துக் கேட்டான். "உமக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது! இத்தனை அழகுடன் விளங்கும் என்னைப் பார்த்து இப்படிக் கேட்க எப்படி உமக்கு மனம் வந்தது? நான் மறுமணமாவது செய்து வாழவேண்டிய அழகு தேவதையாச்சே!" என்று கூறிச் சென்று விட்டாள். மூன்றாவது மனைவியோ, "நீர் என்னிடம் கேட்பது நியாயமானதா? நானே பட்டத்திற்குரிய ராணி. உமக்குப்பின் முடி சூட வேண்டியவள். நாட்டை ஆட்சி செய்ய வேண்டியவள்," என்றாள். இரண்டாவது மனைவியிடம் கேட்டபோது, "இப்பதானா வாறீர் உமக்குத் தேவை என்றால்தானே என்னை உமக்கு ஞாபகம் வரும்..." என்று கூறிச் சென்றுவிட்டாள்.

தன்னால் அன்பு செய்யப்படாத அழகில்லாத முதலாவது மனைவியிடம் எப்படி இவ்வேண்டுகோளைக் கேட்பது என சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அவள், "அரசே உம்மோடுகூட சாவதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்றபோது அரசன் உண்மையில் அதிர்ந்து போனான்.

மேலே கூறப்பட்ட அரசனைப்போல நம் ஒவ்வொருவருக்கும் நான்கு மனைவியர் இருக்கிறார்கள். என்ன ஆச்சரியமாக உள்ளதா? ஆனால், இது உண்மை. நம்முடைய நான்காவது மனைவி யார் தெரியுமா? நம்முடைய உடல். இந்த மனைவிக்குத்தானே நமது முதல் தரமான அன்பைக் கொடுத்து வளர்க்கிறோம்!... இந்த உண்மையை மேலும் உறுதிப்படுத்த நமது நான்காவது மனைவியாகிய உடலின் முக்கிய பகுதியாகிய தலைப் பாகத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். பவுடர் போடுகிறோம். 'கிறீம்' பூசுகிறோம். இமை முடி வழிக்கிறோம், இமை மை அடிக்கிறோம், உதடுகளுக்கு நிறம் தீட்டுகிறோம், தோடு மாற்றுகிறோம், மூக்குத்தி குத்துகிறோம், தலை முடிக்கு 'டை' தடவுகிறோம். பொட்டு வைக்கிறோம், பூ சூடுகிறோம் இன்னும் எத்தனை எத்தனையோ அலங்காரங்கள் செய்கிறோம். எவ்வளவு நேரத்தை, காலத்தை செலவழிக்கிறோம்? எவ்வளவு செலவைச் செய்கிறோம்? ஆனால், நமக்குக் காலமும் நேரமும் வருகிறபோது இந்த அழகான மனைவி நம்மோடு கூடவர விரும்புவதில்லை..

நம்முடைய மூன்றாவது மனைவி நமது பதவி – பட்டம் - அந்தஸ்து போன்றவைகளாகும். நாம் ஒரு பதவியில், பொறுப்பில் உள்ளவரை இருக்கிறோம், அவ்வளவுதான். எமது பதவிக்காலம் முடிந்ததும் வேறொருவர் அவ்விடத்திற்கு வருகிறார். உதாரணமாக ஒரு சங்கத்தினுடைய, நிறுவனத்தினுடைய தலைவராக இருக்கிறேன் என வைத்துக்கொள்வோம். என்னுடைய காலம் முடிந்து போக வேறொருவர் அதை எடுத்துக்கொள்கிறார். வேண்டுமானால் அவ்வப்போது முன்னாள் தலைவர் என்று கூறிக் கொள்கிறார்கள். இதனையும் எத்தனை நாளைக்குச் சொல்வார்கள்? எனவே மூன்றாவது மனைவியும் நம்மோடு கூட வருவதில்லை.

இரண்டாவது மனைவி யாரென்றால் நமது குடும்பத்தினர் உறவினர் நண்பர்கள் ஆவர். நம்முடைய சொந்த உறவுகள், நெருக்கமானவர்கள் பல சந்தர்ப்பங்களில் கூறியிருப்பதை நம் நினைவுக்குக் கொண்டுவரலாம். "இப்பதானா உங்களுக்கு கண் தெரிகிறது?" என்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? கவிஞன் கண்ணதாசன் இந்த யதார்த்தத்தை அழகாகப் பாடுவான், "வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ?" என்று. நம்முடைய இரண்டாவது மனைவியாகிய நம் உறவுகள்கூட நம்மோடு கூடவர விரும்புகிறார்கள் இல்லை.

நமது நான்காவது மனைவி நம் ஆன்மா. இவளைப் பற்றி நாம் இதுவரை அக்கறை கொண்டதோ கரிசனை காட்டியதோ கிடையாது. அதனால் அழகிழந்து, பொலிவிழந்து இருக்கிறாள். இருப்பினும் எம்மோடுகூட சாவிலும் சேர்ந்து பயணிக்க தயாராயிருக்கிறாள். இவளை இதுவரை காலமும் அலட்சியம் செய்தது போதும். இனிமேலாவது இவளை அன்பு செய்வோம். இவள்மீது அக்கறை கொள்வோம். முதல் தரமான அன்பைப் பொழிந்து இவளைக் காதலிப்போம். என்ன... காதலென்றால் போதுமே!... காதலிக்கவும் உங்களுக்குக் கற்றுத் தரவா வேண்டும்!... நம்மீது அன்புக்குரிய நம் ஆன்மாவை காதல் செய்வோம்.

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

மன்னார் — மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள் — Mannar


## நற்கருணை ஆண்டை முன்னிட்டு
### மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் மறைமாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட
## நற்கருணை வினாவிடைப் போட்டி முடிவுகள்

100 புள்ளிகளைப் பெற்று பாராட்டுப் பெறுபவர்களின் பெயர் விபரம்

### குழு - 1

| பெயர் | பங்கு |
|---|---|
| செ. அனித் செலஸ்ரீஸ் | கோமரசன் குளம் |
| சே. றொமில்டா | கோமரசன் குளம் |
| சி. அனோஜா றொக்சினி | கோமரசன் குளம் |
| ஜெ. ஜெரோமி | மன்னார் |
| ஏ. கிறேசியா சாதனா | மன்னார் |
| பி. பெற்சன் | மன்னார் |
| றே. மரிய வினோதினி | பேசாலை |
| ஜோ. சிகான் குரூஸ் | பேசாலை |
| கெ. ஆ. அஜந்தன் | பேசாலை |
| அன்ரனிற்றா ரியூனி | பள்ளிமுனை |
| யோ. ஜீன் பிகாட் | பள்ளிமுனை |
| அ. கௌசலியா | வவுனியா |
| ப. இ. வேஜினியா | வவுனியா |
| வி. ஆன் ஷமிலி குரூஸ் | தலைமன்னார் |
| ஜோ. லிப்த்தினா தற்குரூஸ் | தலைமன்னார் |
| பா. அ. டிவைன்ஷன் பெர். | தலைமன்னார் |
| சூ. ஞானறூபி | தட்சனா மருதமடு |
| வி. ஆன் விபூஜா | நானாட்டான் |
| றோ. மயூரன் | நானாட்டான் |
| ஜே.அ.ம.ஸ்ரீபனா | நானாட்டான் |
| அ. பிறின்சி கிறிஸ்ரா | யோசவ்வாஸ் நகர் |
| பா. பிறேமன் ராஜ் | யோசவ்வாஸ் நகர் |
| ச. மேரி கறோளின் | வஞ்சியன் குளம் |
| ம. சோபியா | வஞ்சியன் குளம் |
| பே. டிலக்ஷன் | செட்டிகுளம் |
| பி. ஆன் பெனிற்றா குரூஸ் | தாழ்வுபாடு |
| கமிலியா | தாழ்வுபாடு |
| செ. அனுசிக்கா | கற்கிடந்தகுளம் |
| சி. சியாமளா | கற்கிடந்தகுளம் |
| ச. மடுமலர் | அளவக்கை |
| செ. ஆன் துசாரா | உயிலங்குளம் |
| க. அக்வினா குரூஸ் | வங்காலை |
| அ. விமல் றோய் | முருங்கன் |

### குழு - 2

| பெயர் | பங்கு |
|---|---|
| ச. பிரகாசி | பள்ளிமுனை |
| ம. றொசானி | வவுனியா |
| ஜெ. சாள்ஸ் | வவுனியா |
| கீ. ஜொ.கிருபைராஜ் கூஞ்ஞ- | தலைமன்னார் |
| றெ. வினோதினி | தலைமன்னார் |
| நி. சாமினி | பேசாலை |
| லோ. மேரி ஜெனிற்றா | பேசாலை |
| றொ. ஜெனிபா ஜெரோஜினி | அளவக்கை |
| ஜெ. லின்ரா | அளவக்கை |
| செ. ஜெபநேசன் | அளவக்கை |
| இ. ஜென்சிலா லோகு | அரிப்பு |
| அ. நிறோஜினி | இலுப்பைக்குளம் |
| தெ. துர்சிக்கா | கற்கிடந்தகுளம் |
| யேசு மரியதாசன் ஜீவராஜன்- | முருங்கன் |
| எவ். ஏ. ஷிபோறின் | மன்னார் |
| அ. அன்ரனிக்கா | ஆட்காட்டிவெளி |
| இ. ஆன் கிருஷாந்தினி | நானாட்டான் |
| ம. சாலினி | நானாட்டான் |
| பெ. நிருஜா பர்ணாந்து | வங்காலை |
| றோ. மேரி டெல்சிக்கா | வஞ்சியன் குளம் |
| பே. போல் அன்ரனி | உயிலங்குளம் |

### குழு - 3

| பெயர் | பங்கு |
|---|---|
| எஸ். யூட் சொய்சன் | மன்னார் |
| ஏ. கறோன் | மன்னார் |
| பீ. திவ்வியா | ஆட்காட்டிவெளி |
| ஆ. மாலினி | ஆட்காட்டிவெளி |
| சி. மெர்லின் துரம் | தாழ்வுபாடு |
| ஜே. டிமோர் றெனி | தாழ்வுபாடு |
| சி. அருள் ராஜ் | பள்ளிமுனை |
| இ. இன்ப ராணி | பள்ளிமுனை |
| ஆர். பிரகாசி | பள்ளிமுனை |
| ஜீ. நொயலின் ஜீன் | பம்பைமடு |
| அ. அமல அஸ்வினி குரூஸ் | தலைமன்னார் |
| ஜோ. சிந்துஜா | தலைமன்னார் |
| கி. ஆன் | பேசாலை |
| ஜே. மயூரன் | செட்டிகுளம் |
| ஜேம்ஸ் றஞ்சன் நிரஞ்சலா | முருங்கன் |
| கி. ஜெனிபா ஜெஸ்லின் | இலுப்பைக்குளம் |

### குழு - 4

| பெயர் | பங்கு |
|---|---|
| அ. அர்ஜின் | பேசாலை |
| யூ. கிருபா | பேசாலை |
| சி. நிரோசினி | பேசாலை |
| வி. நிஷாந்தினி | மன்னார் |
| எஸ். ஜெ.நிக்சலா சஞ்சீவினி | மன்னார் |
| ச. ஜென்மராக்கினி லியோன் | தலைமன்னார் |
| செ. ருஷாந்தினி | தலைமன்னார் |
| யோ. தர்மசீலி | வவுனியா |
| ம. டிலுசாந்தி | வவுனியா |

**தயவுசெய்து கவனியுங்கள்!**

மேற்படி நற்கருணை வினாவிடைப் போட்டியில் ஆர்வத்தோடு பங்கெடுத்த மாணவர்களுக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் ஒவ்வொரு குழுவிலுமிருந்து மூவர் அதிஸ்ரத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவர். தேர்வு செய்யப் பட்டவர்கள் விபரம், பரிசளிப்புத் திகதி பற்றிய தகவல்கள் சம்மந்தப் பட்டவர்களுக்கு நேரடியாக அறிவிக்கப்படும்.

- இயக்குனர்

### மாணவர்களுக்கான மறைக்கல்வித் தேர்வு - 2005

பாடசாலை மாணவர்களுக்கான மறைக்கல்வித் தேர்வு நவம்பர் மாதம் 5ந் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது. இத்தேர்வில் தரம் 3 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் தோற்ற உள்ளனர். மன்னார், மடு, வவுனியா தெற்கு வவுனியா வடக்கு ஆகிய நான்கு கல்வி வலயங்களுக்கு உட்பட்ட 140 பாடசாலைகளில் இத்தேர்வு நடாத்தப்பட உள்ளது. இதில் ஏறக்குறைய 12000 மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். வழமைபோன்று மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் இத்தேர்வுப் புள்ளிகளே பாடசாலை மூன்றாம் தவணைக்குரிய கத்தோலிக்க சமயபாடப் புள்ளிகளாகக் கணிக்கப்படும். 75 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு மறைக்கல்வி நிலையத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பாடசாலை கத்தோலிக்க திருமறைப் பாடத்திட்டம், ஞாயிறு மறைக்கல்வி 'அவர் வளர்க' பாடநூல், நற்கருணை வினாவிடை போன்றவற்றில் இருந்து இவ்வாண்டுத் தேர்வுக்கான வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

### தேசிய மறையாசிரியர் டிப்ளோமா தேர்வு - 2005

தேசிய மறையாசிரியர் தேர்வு டிசம்பர் மாதம் 3ந் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது. மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான இத்தேர்வு மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மறையாசிரியர் தேர்வு 1, 2, 3, ஆகிய மூன்று தேர்வுகளிலும் தோற்ற உள்ளவர்களுக்கான ஆயத்த வகுப்புக்கள் நவம்பர் மாதம் 11ந், 12ந், 13ந் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறும். இந்த ஆயத்த வகுப்புக்களில் கலந்து பயன்பெறுமாறு பரீட்சாத்திகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து முதலாம் தேர்வுக்கு 97பேரும், இரண்டாம் தேர்வுக்கு 139பேரும், மூன்றாம் தேர்வுக்கு 69பேரும் தோற்றுகின்றனர்.

## திருக்குடும்ப சபையின்
# யூபிலி நாயகிகள்!

"என்னைப் பின்செல்லுங்கள்" என்னும் இறைவனின் வார்த்தை இதயத்தில் ஒலிக்க, அது இறைகுரலென இனம் கண்டு, இற்றைக்கு 60, 50, 25 வருடங்களுக்கு முன்னர் தம்மை இறை – மனித சேவைக்கென அர்ப்பணித்தனர் திருக்குடும்ப சபை அருட்சகோதரிகள்.

இவர்கள் திருக்குடும்ப சபைச் சகோதரிகளின் கொட்டிலில் வளர்ந்து, அவர்களின் வழிகாட்டலில் நடைபயின்றவர்கள். உயர் விழுமியங்களையும், நற்செய்தி அறிவுரைகளையும் தம் வாழ்வாக்கிக்கொள்ளவும், "இறைவனை மாத்திரமே" தம் வாழ்வின் செல்வமாக்கிக் கொள்ளவும், தாம் வாழும் சமுதாயத்தில் மக்களின் இடர்போக்கி, இறையுணர்வூட்டி, அவர்களை நல்மக்களாக உருவாக்கவுமென பல்வேறு எண்ணங்களைத் தம்முள்ளத்தே கொண்டவர்களாய், திருக்குடும்ப சபையில் தம்மையே முழுமையாக அர்ப்பணித்தனர்.

யாழ், மன்னார் மண்ணில் துறவற சபைகள் பல இருப்பினும் இவர்கள் தமது அழைப்பையும், பணியையும் திருக்குடும்ப சபையில் கண்டனர். "இறைவனுக்கே மகிமை" எனும் சபையின் விருதுவாக்கைத் தமது மணிமகுடமாகக் கொண்டு பல்வேறுபட்ட பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

### வைரவிழா நாயகி



சகோ. சபீனா

இந்த வகையில் இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன்னர் துறவற வாழ்வில் தடம்பதித்த அருட்சகோதரி சபீனா இந்து சமயப் பரம்பரையில் உதித்தவர். இளவாலை திருக்குடும்ப கன்னியர் பாடசாலையில் கல்விபயிலும் நாட்களில் அருட்சகோதரிகளின் இறைபக்தி, இறை விசுவாசம், ஆன்மீக வழிகாட்டல், அன்புப் பணி, வாழ்வியல் நெறிக்கான வழிகாட்டல்கள் யாவும் இவரைக் கவர்ந்தன. தானும் அவர்களில் ஒருத்தியாக மாறினாலென்ன என்று சிந்தித்தார்.

திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் இணைந்தார்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கொப்ப தான் இனம் கண்டு கொண்ட இறைவனைத் தன் வாழ்வாலும், வார்த்தையாலும் அனைவருக்கும் அளிக்க, துறவற வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்டார். கடந்த 60 ஆண்டுகளில் ஆசிரியப் பணியிலும், பல்வேறுபட்ட பங்கு, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு, இறைவிசுவாசத்தை மக்கள் மனங்களில் விதைத்து, அறிவுக் கண்களைத் திறந்து எல்லாருக்கும் எல்லாமாகத் திகழ்ந்து, இன்று தனது முதிர் வயதில் இளவாலை முதியோர் இல்லத்தில் இளைப்பாறுகின்றார்.

### பொன்விழா நாயகிகள்

கடந்த 50 வருடங்களாக திருக்குடும்ப சபையின் வச்சிரத் தூண்களாகவும், சேவைச் செம்மல்களாகவும் திகழும் அருட்சகோதரிகளான அமலி, கெலன், கஸ்மீர், அனஸ்ரேஷியா, கெட்விச், தெக்ளா ஆகியோர் தமது முதன்மைப் பணியான கல்விப்பணி மூலம் குறிப்பாக வட மாகாணத்தின் பல்வேறுபட்ட இடங்களிலும் மாணவ சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

இன்று மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் நல்வாழ்க்கை வாழ்வதையும், உயர்நிலையில் திகழ்வதையும் கண்டு உளம் பூரித்து நிற்கின்றனர். இன்னும் இவர்கள் பணியாற்றிய இடங்களில் வேண்டப்படும் அனைத்து நிலைகளிலும் தம்மையே முழுமையாக அர்ப்பணித்து, மக்களின் உயர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகின்றனர்.

இதனால் எவ்வித தேவைகளிலும் எவரும் இவர்களை அண்டிச் செல்லக் கூடியதாகவுள்ளது. இவர்களது வாழ்வுக்கும், பணிக்கும் உரமூட்டிய இவர்களது இறைப்பற்று, சபைப்பற்று, தளரா விசுவாசம், இறைசித்தத்திற்குப் பணிந்த மனம், அனைவரையும் ஈர்க்கும் அன்பு, ஏழை – பணக்காரன் என்ற பாகுபாடு காட்டாத மனநிலை, தாம் பணியாற்றும் இடங்களிலுள்ள மக்களுடன் ஒன்றிணைந்த வாழ்வு, எவரையும் அவரவர் நிலையில் ஏற்று மதிப்பளிக்கும் திறன் போன்ற இன்னோரன்ன நல்விழுமியங்கள் மக்களை இவர்பால் ஈர்த்ததில் வியப்பில்லை.

மற்றும் அருட்சகோதரி கெலன் (எமரன்சியானா) தனது துறவற வாழ்வில் கால்நூற்றாண்டு காலம்வரை யாழ் மாகாணத்தில் பல்வேறுபட்ட பணிகளில் தன்னையே கரைத்துக்கொண்டார். சிறந்த நிர்வாகத்திறன் படைத்த இவர் இளைஞர் உருவாக்கம், இளம் கன்னியர் உருவாக்கம், மாகாண ஆலோசகர், குழுத்தலைவி போன்ற பணிகளில் ஈடுபட்ட பின்னர், இந்திய உபகண்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திருக்குடும்ப சபைக்கு உறுதியான அத்திவாரமிடவும், பணிகளை முன்னெடுத்துச் செல்லவும் அழைக்கப்பட்டார். அன்று இவரால் இந்திய மண்ணில் அடித்தளமிடப்பட்ட திருக்குடும்ப சபை தியான யோகக்கிளை தவிர்ந்த ஏனைய அனைத்துக் கிளைகளையும் உள்ளடக்கிய பரந்த விருட்சமாகத் தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து நின்று கனி கொடுக்கிறது.

### வெள்ளிவிழா நாயகிகள்

கடந்த 25 வருடங்களாக இறை – மனித சேவையில் தம்மை அர்ப்பணித்து, எதற்கும் தயாரான நிலையில், தேவையென்று காணுமிடங்களில் தயங்காது சேவைக்குத் தம்மை அர்ப்பணித்து, துறவற வாழ்வில் 25 படிக்கற்களைக் கடந்து இன்று வெள்ளிவிழா நாயகிகளாக ஜொலிக்கும் அருட்சகோதரிகளான றோஸ்மலர், யோசவ்வின், அழகேஸ் ஆகியோர் இளைஞருக்குரிய உத்வேகத்துடனும், துடிப்புடனும், ஆர்வத்துடனும் பல்வேறுபட்ட பணிகளிலும் தம்மைக் கையளித்து நிற்கின்றனர். பாடசாலை, பங்கு, சமுதாயம், மாகாணம், சபை போன்ற அனைத்து மட்டங்களிலும் தம்மிடம் வேண்டப்படும் அனைத்து தேவைகளுக்கும் தீவிரத்துடன் பதிலிறுத்து, தாம் சார்ந்த சமுதாயத்தில் உப்பாகவும், புளிக்காரமாகவும் இருந்து பணியாற்றுகிறார்கள்.

"முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் ஓட்டத்தைத் தடைசெய்யக் கூடியது ஒன்றுமில்லை" என்ற சபை நிறுவுனரின் பொன் மொழிக்கேற்ப இவர்கள் தம் வாழ்விலும், பணியிலும், இறை மனித உறவிலும் என்றும் முன்னேறிச் செல்ல அருள்வேண்டுகிறோம். மன்னா சார்பாக வாழ்த்துக்களை கூறி நிற்கிறோம்.

*அருட்சகோதரி கனிஷியஸ் தி.கு.க.*

### பொன்விழா நாயகிகள்



சகோ. அமலி



சகோ. கெலன்



சகோ. கஸ்மீர்



சகோ. அனஸ்ரேசியா



சகோ. கெட்விச்



சகோ. தெக்ளா

### வெள்ளி விழா நாயகிகள்



சகோ. றோஸ்மலர்



சகோ. அழகேஸ்வரி

VALVUTHAYAM
(Caritas - Mannar)

# வாழ்வுதயம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM
(Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை


இயக்குனர்
அருட்தந்தை பி. ஜேசுராஜா.

Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk


### 12 இலட்சம் ரூபா செலவில் 3 முன்பள்ளிக் கட்டடங்கள்

## செல்வங்களில் உயர்ந்த செல்வம் கல்விச் செல்வம்

### முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் மன்னார் ஆயர்



ஆண்டாங்குளம் சாளம்பன் கிராமத்தில் முன்பள்ளி திறந்து வைக்கப்படுகிறது.



இலுப்பைக்கடவை அந்தோனியார் புரத்தில் முன்பள்ளி திறந்து வைக்கப்படுகிறது.

மனிதன் தனது வாழ்நாளில் பணத்தை திரட்டிக்கொள்ளலாம். பொருள், பண்டங்களை ஆதாயமாக்கிக் கொள்ளலாம். காணி பூமிக்கு அதிகாரியாக மாறலாம். பட்டம், பதவிகளைத் தனதாக்கிக் கொள்ளலாம். அதிகாரத்தைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளலாம். ஆனால் கல்விச் செல்வத்திற்கு இவை அனைத்தும் நிகரானவை அல்ல. இவ்வாறு மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனத்தினால் மன்னார் மாவட்டத்தில் கட்டப்பட்ட முன்பள்ளிக் கட்டிடங்களின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மன்னார் ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் கூறினார்.

ஆயர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில்,கல்வியின் அத்திவாரம் முன்பள்ளியில் இடப்படுகிறது என்றார். அத்திவாரம் உறுதியானதாக இருந்தால்த்தான் எதிர்காலம் சிறக்கும். சிறார்களின் எதிர்காலத்தை நல்லதொரு பொற்காலமாக்குவது ஆசிரியர்களின் கைகளிலேதான் உள்ளது. ஆசிரியர்களது தியாகம் நிறைந்த பணி மிக அவசியம். இதற்கு சிறார்களின் பெற்றோர் பூரண ஆதரவு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்கடவை பகுதியின் அந்தோனியார்புரம் என்ற கிராமத்திலும் ஆண்டாங்குளப் பிரதேசத்தின் சாளம்பன் கிராமத்திலும், தலைமன்னார் பிரதேசத்தின் தலைமன்னார் பியரிலும் வாழ்வுதயத்தினால் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக்கட்டிடங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

வாழ்வுதய இயக்குனர் அருட்திரு.பி. ஜேசுராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இம் மூன்று நிகழ்வுகளிலும் அவ்வப்பிரதேசங்களின் பங்குத்தந்தையர்களான அருட்தந்தையர்கள் பாக்கிய றஞ்ஜித், சவிரி மரியதாசன் சீமான், அந்தோனிதாஸ் டலிமா ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களோடுகூட அந்தந்தக் கிராமத் தலைவர்கள், பெற்றோர், பெரியோர், பிள்ளைகள் என பெருந்திரளானோர் கலந்து நிகழ்வுகளைச் சிறப்பித்தனர். கொட்டில்களில் நடாத்தப்பட்ட பாடசாலைகள் தற்பொழுது அழகிய கட்டிடங்களில் நடக்கப் போவது பாலர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கும் என நிகழ்வில் கலந்துகொண்ட பெரியோர்கள் பேசிக்கொண்டனர். இக்கட்டிட நிர்மாணப்பணிகளில் அந்தந்த ஊர் மக்களின் சிரமதானப் பங்களிப்புக்களும் எதிர்பார்த்ததற்கு மேலாகக் கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இம்மூன்று கட்டிடங்களுக்கும் மக்கள் பங்களிப்பு உட்பட மொத்தத் தொகையாக ரூபா பன்னிரெண்டு இலட்சத்துக்கு மேல் செலவாகியது.

*முன்பள்ளிகளில் வாழ்வுதயம் அதிக அக்கறை காட்டி வருகின்றது. வாழ்வுதயத்தினால் தற்போது 84 முன்பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வருவதோடு 93 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றது. இந்த வகையில் ஆசிரியர்களுக்கான மொத்தக் கொடுப்பனவாக ஒரு வருடத்தில் ரூபா பதினைந்து இலட்சத்து இருபத்தேளாயிரம் (ரூபா 1,527,000/=) வழங்கப்படுகிறது. இதில் 85%மான தொகை மன்னார் ஆயரின் நிதியில் இருந்து பெறப்படுகின்றது. அத்தோடு ஏறத்தாழ 4500 பாலர்களுக்கு நாளாந்தம் சத்துணவும் வழங்கப்படுகிறது. இதன் பெறுமதி வருடமொன்றிற்கு ரூபா பதினெட்டு இலட்சத்து எண்பத்தாறாயிரம் (ரூபா 1,886,000/=) என்பதும் குறிப்பிடத்தக்கது.*

## இளைஞர்கள் சக்தி படைத்தவர்கள்

### இளைஞர்களின் தொழிற்பயிற்சி விழாவில்

### சீமான் மரியதாசன் அடிகளார்

இன்றைய இளைஞன் நாளையத் தலைவன். இளைஞர்கள் சக்தி படைத்தவர்கள். சமுதாயத்தைக் கட்டி எழுப்பக்கூடிய பலம் பொருந்தியவர்கள். மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய அமைப்பினால் இளைஞர்களின் தொழிற்பயிற்சிக்கென மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆண்டாங்குளத்தில் அமைக்கப்பட்ட கட்டிடத்திறப்பு விழாவில் பங்குபற்றிய பங்குத்தந்தை அருட்திரு. சீமான் மரியதாசன் அவர்கள் தமது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார். அடிகள் தொடர்ந்து பேசுகையில் யுத்தத்தின் கெடுபிடியில் பல வருடகாலமாகச் சிக்கித் தவித்த இப்பிரதேச இளைஞர்களுக்கு வீட்டு மின்னிணைப்பு பயிற்சியானது வேலை வாய்ப்பைக் கொடுப்பது மட்டுமல்லாது அவர்களை இளமைப் பருவத்தை வீணாக்குகின்றோமே என்ற உளவியல் ரீதியான தாக்கங்களில் இருந்தும் விடுதலையாக்குகின்றது என்றார்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதி மிக்க இக்கட்டிடத்திற்கு (வூஸ்க்) உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனம் ரூபா இரண்டு இலட்சத்தை தமது பங்களிப்பாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. வூஸ்க் நிறுவனத்தின் நிதியில் வாழ்வுதயத்தினால் நடாத்தப்படுகின்ற இப்பயிற்சி நெறியானது கட்டிடத்திறப்பு விழா தினத்தன்றே ஆரம்பமாகியது. வாழ்வுதய இயக்குனர் அருட்திரு பி. யேசுராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வூஸ்க் நிறுவனத்தின் மன்னார் - வவுனியா மாவட்ட இணைப்பாளர் திரு. துவான் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்வில் பயிலுனர்களோடு அவர்களது பெற்றோர், மற்றும் ஊர்ப்பெரியார்களும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.



தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடத் திருப்பு விழா ஆண்றாங்குளத்தில் நடைபெற்றபோது மன்னார் ஆயர் அவர்களும் பங்குத் தந்தை சீமான் மரியதாசன் அடிகளாரும் காணப்படுகின்றனர்.

*2004ம் ஆண்டு முற்பகுதி முதல் நடப்பாண்டு நடுப்பகுதி வரைக்கும் வூஸ்க், ஐ.எல்.ஓ போன்ற நிறுவனங்களின் நிதியுதவியில் வாழ்வுதயமானது 118 இளைஞர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய மாணவர்களுக்கு பாரிய அளவில் பெரிய பண்டிவிரிச்சானில் 9 மாத காலத் தச்சுப் பயிற்சியும், மாதா கிராமத்தில் 9 மாத கால மேசன் பயிற்சியும், நானாட்டானில் 6 மாத கால வீட்டு மின்னிணைப்புப் பயிற்சியும், ஜீவோதயத்தில் 6 மாத கால உழவு இயந்திரம் திருத்தல் பயிற்சியும், அரிப்பு மற்றும் விடத்தல்தீவு ஆகிய பிரதேசங்களில் 6 மாத கால வெளி இயந்திரப் படகு திருத்தல் பயிற்சியும் வாழ்வுதய அச்சகப் பிரிவில் அச்சகப் பயிற்சியும் கொடுத்தது, இவர்களில் 75% மானோர் பல பணித்தளங்களில் பணிபுரிந்து தினமும் ரூபா 400/= முதல் 600/= வரை பணம் சம்பாதித்து அவரவர் குடும்பத்தைப் பராமரிப்பதோடு பல முன்னேற்றச் செயல்களையும் செய்து வருகின்றனர்.*

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

### புதிய அணுகுமுறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன

அண்மையில் வாழ்வுதயத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை மன்னார், முருங்கன், ஆண்டாங்குளம், வவுனியா ஆகிய நான்கு இடங்களையும் மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது. லண்டனில் இருந்து வருகை தந்திருந்த வளத்துணையாளர் திருவாளர் ஜோண் அவர்கள் மிகவும் கவர்ச்சியாகவும் பயனுடையதாகவும் இப்பட்டறைகளை நடாத்தினார். இரண்டு நாட்கள் ஒரு பிரதேசத்தில் என இடம்பெற்ற பாசறையில் ஒவ்வொரு நிலையத்திலும் சராசரி 45 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் 180 ஆசிரியர்கள் மட்டில் பங்கெடுத்துப் பயன் அடைந்தனர். ஆங்கிலத்தில் வளத்துணையாளர் பேசியவைகள் அழகிய தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதால் பாசறை மிகுந்த பயனை அளித்ததென மீளாய்வு மூலம் அறியக் கூடியதாக இருந்தது. பலருடைய கூற்றுப்படி வழமைக்கு மாறாக புது விடயங்கள், புது விளையாட்டுக்கள், புது அணுகுமுறைகள், புது விளக்கங்களைக் கற்றுக்கொடுக்கப்பட்டன. வருகின்ற வருடமும் மேலும் புதியவைகளை அறிய ஆவன செய்யுமாறு பங்கேற்ற ஆசிரியர்கள் வாழ்வுதய இயக்குனரைக் கேட்டுக்கொண்டனர்.

## பரவலாக்கப்பட்டு வரும் வாழ்வுதயத்தின் வீட்டுத்திட்ட பணிகள்

யுத்தத்தின் அனர்த்தங்களினாலும் யுத்த சூழலினாலும் வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் முண்டியடித்துக்கொண்டு நிற்கின்றன. யுத்த காலத்திலும் யுத்த நிறுத்த காலத்திலும் தமது பணிகளைத் தொடங்கிய அமைப்புக்கள் ஏராளம்.

ஆனால் மன்னார் மறைமாவட்டத்தில் இயங்கும் வாழ்வுதய நிறுவனமானது யுத்தத்தையோ யுத்த நிறுத்தத்தையோ மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பல்ல. யுத்தம் இலங்கையில் உருவெடுப்பதற்கு முன்னதாகவே மக்களின் நலனில் அக்கறை கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு தொண்டர் ஸ்தாபனமாகும்.

1982ம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னும், யுத்த காலத்திலும் பல பணிகளைச் செய்து வந்துள்ளது. குறிப்பாக யுத்த காலத்தில் அவதியுற்ற மக்களின் கண்ணீரைத் துடைத்து வந்த நிறுவனங்களில் ஒன்று வாழ்வுதயமாகும். இவ்வமைப்பு குறிப்பாக மனித நேயப்பணிகளில் தன்னை முற்றும் முழுதாக ஈடுபடுத்தி வருவதை எவரும் மறுக்க முடியாது.

இன்று யுத்த நிறுத்தமானது ஓரளவு சுதந்திரக்காற்றை சுவாசிக்க வாய்ப்பளித்துள்ள நிலைமையில் மீள்குடியேறிய மக்களுக்கும், வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோருக்கும் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களில் சிலதும் இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்து வருகின்றன. இப்பணிகளைச் செய்யும் நிறுவனங்களில் ஒன்று வாழ்வுதயமாகும்.

2003ம் ஆண்டுத் திட்டத்திற்கமைய மாந்தை மேற்கு உதவி அரசாங்கப் பிரிவின் கத்தாளம்பிட்டியில் 14 வீடுகளையும், தேவன்பிட்டியில் 07 வீடுகளையும் கட்டிக்கொடுத்தது.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக உரிமையாளர்கள் அவ்வீடுகளில் வசித்து வருகின்றபொழுதிலும் வைபவ ரீதியாக அவ்வீடுகள் அண்மையில் கையளிக்கப்பட்டன. வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை பி. யேசுராஜா அவர்களின் தலைமையில் ஊர்மக்கள் சமூகமாக இருக்க மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்வீடுகளை வழங்கினார்.

வாழ்வுதயத்தினால் வருகின்ற வருடம் ஆரம்பத்தில் இருந்து மளுவராயர் கட்டையடம்பன் கிராமத்தில் மீள் குடியேறிய குடும்பங்கட்கு ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் (ரூபா 250,000/=) பெறுமதியான 125 வீடுகளும் முள்ளிக்குளத்தில் அதே பெறுமதியில் 120 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பமாகி விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.



தேவன்பிட்டியில் வாழ்வுதயத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மன்னார் ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்படுகிறது.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 22**

சொல்லின் செல்வர் அமுது

## திரும்பிச் செல்லுங்கள் தாயே!

அன்னை திரேசா ஏழைகளுக்குத் தொண்டு செய்ய நினைந்து, முதல் நாளே ஒரு பாடசாலை மரத்தடியில் அடியிட்டார். அப் பாடசாலை கொப்பும் கிளையும் பரப்பிக் கொடிவிட்டது. அங்கே தங்க வந்த நூற்றுக் கணக்கான குருவிகளுக்கு அது பழுத்த பாலை ஆயிற்று. இடாப்பாவைப் போன்ற கல்வியின் முதுகையும் காணாத இடங்களிலும் பாடசாலை ஆக்க வேண்டுமென்று அன்னை துடித்தாள்.

அமெரிக்கப் பெண்மணி எயிலின் அம்மையாருடன் சேர்ந்து தேடி ஓரிடத்தைப் பிடித்தார். வியாபாரத் தளமொன்றின் பக்கத்தில் வெறும் நிலம் கண்டனர். உரிமையாளரைக் கேட்டதும் உடனே உத்தரவு கிடைத்தது. அதனை எடுத்துக்கொண்டனர். வாங்குகள், கரும்பலகை, வெண்கட்டி, கற்பலகை என்பவற்றைப் பாதுகாப்பாய் வைக்க ஒரு காப்பகத்தைப் பெற்றார்கள்.

முதல் நாளே தொழுநோயாளர் குடும்பங்களிலிருந்து, 85 பிள்ளைகள் சேர்ந்து கற்றார்கள். பிள்ளைகள் கல்வி கற்பதைக் கண்டு பெற்றார்கள் அன்னையைத் தொழுதனர். கடந்த காலமெல்லாம் கல்வி என்ற கண்ணற்றிருந்ததை எண்ணி அழுதனர். அன்புப் பணியாளர் சபையின் சகோதரிமார் அங்கே இலவசக் கல்வியை ஊட்டினார்கள். பிறரன்பு என்ற தீக்குச்சை பெருமான் காலடிகளில் உரஞ்சி அன்பை மூட்டினார்கள். மற்றோர் புறக்கணித்துவிட்ட சலவை அறியாத துணியை அன்னையே தன்னந்தனியாளாக நின்று தோய்த்தார். புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற சொல்லை அகராதியால் வெளியே எடுத்துக் காலால் தேய்த்தார்.

1956இல் கல்கத்தாவின் நிலத்திலிருந்து நிலா ஒன்று முளைத்தது. அது அங்குள்ள நல்லிதயம் படைத்தவர்களைக் கட்டி வளைத்தது. சமுதாயத்தில் செல்வாக்குள்ள கிறிஸ்தவப் பெண்கள் தொழுநோயாளரை எண்ணி மனம் நொந்தனர். நோயாளருக்கு உதவி செய்ய நினைந்து, கல்கத்தாவின் முற்றத்தில் வந்தனர். இந்த நிகழ்ச்சி அன்னையின் சேவையை உயர்த்திக் காட்டியது. தொண்டர்களின் பிறரன்புப் பணியைக் கூட்டியது. அந்த மங்கையர் கூட்டத்துக்கு ஆன் பிளேய்க்கு என்ற பிரித்தானியப் பெண்மணி தலைமை தாங்கினார். அவர் கல்கத்தாவில் ஒரு பெருஞ் சிறப்பு வாய்ந்த வணிகரைத் திருமணம் செய்திருந்தமையால் புகழில் ஓங்கினார். இந்த அம்மையார் ஆதரவற்றவர்களுக்குக் கைகொடுத்து உதவுவதற்குத் தருணம் பார்த்திருந்தார்.

இளம் பிள்ளைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள் என்பனவற்றை பெண்களுடன் சேர்த்து விற்றுப் பணத்தைச் சேர்த்திருந்தார். கொடி தினம் ஒன்றைத் தொடங்கியதும் நூற்றுக்கணக்கான இலவச சேவையாளர் ஓடி வந்து பங்குபற்றினர். அவர்கள் வீதிகளின் சந்திகளில் தொழுநோயாளர் தேவைகளை எடுத்துக் கூறியதோடு, எங்கும் சுற்றினர். தொண்டர்கள், மக்களை அழைக்க கையில் வைத்திருக்கும் மணியை அடித்தனர்.

முன்னர் தொழுநோயாளர் வீட்டுக்கு வெளியே கால் வைத்தால் மணியைப் பிடித்தனர். கல்கத்தாவின் நெடுஞ்சாலைகளின் உயர்ந்த இடங்களில் துகிற்கொடிகள் அசைந்து ஆடின. கண்ணை அள்ளும் கொடிகளைக் காண மக்கள் கால்கள் விரைந்து ஓடின. “தொழுநோயாளரைக் கருணையோடு தொடுவீர்” என்ற வாசகங்கள் காற்றில் அசைந்து ஆடின.



கால மாற்றத்தைக் காற்றே எழுதியிருந்தது தன் நெற்றியில். மக்கள் கலந்து மகிழ்ந்தனர் மனித நேயத்தின் வெற்றியில். கொடி தினத்தில் பெருந்தொகை நிதி தேடி வந்தது. மக்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்து அன்பு நதி ஓடி வந்தது. தொழுநோயாளரை ஒதுக்கி வைக்கும் எண்ணத்தைச் சமுதாயம் அழித்தது. குட்டை நோயாளர் தொடக்கம் பிறநாட்டு அரச தூதுவர்கள் வரையில் பொது மாநாட்டில் கலந்துகொண்டு கடந்த கால களங்கத்தை அழித்து நாட்டுக்குப் பொட்டு வைத்தனர்.

“ஆயிரம் பவுண் தந்தாலும் ஒரு குட்டை நோயாளியைக் கையால் தொடமாட்டேன்” என்று ஒரு உயர்குலப் பெண் சொன்னது நினைவுகூரத்தக்கது. அதற்கு அன்னை திரேசா சொன்ன பதில் நெஞ்சில் ஒட்டி வைக்கத்தக்கது. “நானும் அப்படியான பெண்தான்! கடவுளின் சாயலைக் கண்டு, விருப்பத்தோடு தொட்டுக் கவனிக்கிறேன்” இது வெட்டி வைக்கத்தக்கது. நோயாளியில் இறைவன் மறைந்திருக்கிறான் என்று எண்ணும்போது, அருவருப்பும் துர்நாற்றமும் பாம்புச் செட்டை போலக் கழன்று போகின்றன. அந்த இடத்தில் அன்பும் தூய்மையும், இறைவன் அருளும் வந்து கலக்கின்றன.

“நாங்கள் ஆயிரக்கணக்கான தொழுநோயாளரைக் கவனித்து வருகின்றோம். நோயினால் உடல் விகாரமடைந்திருந்தாலும், உள்ளத்தில் அவர்கள் மல்லிகைப் பூக்கள். கடைசி நத்தார் பண்டிகையின்போது, நான் அவர்களோடிருந்தேன். அவ்வேளை ஆயிரக்கணக்கானவர்கள் வந்து ஒன்று சேர்ந்தார்கள். அப்போது நத்தார் விருந்தின் கூட்டத்தில், ‘நீங்கள் எங்களுக்குக் கடவுளின் அன்பளிப்பு. இறைவன் உங்களில் சிறந்த அன்பு கொண்டிருக்கிறார். கருணையோடு கவனிக்கிறார். உங்களுடைய நோய் உங்களின் குற்றங்களின் அறிகுறியன்று. நாங்களும் உங்களை அன்புடன் நேசிக்கிறோம்’ என்று கூறினேன்”

ஒரு முதிர்ந்த வயதுள்ள தொழுநோயாளி, முழுதும் விகாரமான உடலமைப்புள்ளவர் எழுந்து, என்னருகில் விரைவாய் வந்தார். “சொன்னதைத் திரும்பச் சொல்லுங்கள். அதைக் கேட்க ஆனந்தமாய் இருக்கிறது. எங்களை ஒருவரும் நேசிப்பதில்லை என எப்போதும் எங்கள் காதில் விழுந்திருக்கிறது. கடவுள் எங்களை நேசிக்கிறார் என்பதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. தயவுசெய்து சொன்னதைச் சொல்லுங்கள் தாயே!” என்றார். கொதிக்கும் இருதய உலையைக் குளிராக்கிய அன்னையை வாழ்த்தினர். (கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.30

இம்மாதம் இப்பகுதிக்கான வினாக்கள் யாவும் செப்ரெம்பர் மாத மன்னாவிலிருந்து பெறப்படுகின்றன. படித்த மன்னாவை மீண்டும் ஒரு முறை தட்டிப்பார்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் அல்லவா? வினாக்களுக்கு செல்வோமா?

1. திருத்தந்தை 16ம் பெனடிக்ற் உலக இளைஞருக்கான திருப்பலியை ஜேர்மனியில் நிறைவேற்றினார். அது எந்த நகரில்?
2. இலங்கை உத்தேசித்துள்ள மதமாற்றத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துமானால் இலங்கைக்கான சகல உதவிகளும் வணிகத் தொடர்புகளும் அமெரிக்காவிலிருந்து நிறுத்தப்படுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் சார்பில் இவ்வெச்சரிக்கையை விடுத்த இராஜாங்க உதவிச் செயலாளர் யார்?
3. தனிநாயகம் அடிகளார் தனது தமிழ்ப்பணியினால் தமிழ்த்தூது என்ற பெயரையும் தாங்கிக்கொண்டவர். இவர் துறவறத்தில் கால்பதிக்க டால்டாய் என்ற அறிஞரால் எழுதப்பட்ட நூல் தூண்டுகோலாயிருந்தது. அந்நூலின் பெயர் என்ன?
4. அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒன்று தேவையென உணர்ந்து அதைப் பரீசில் நடைபெற்ற மூன்றாவது தமிழாராய்ச்சி மகாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றியவர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாராகும். இம்மகாநாடு எப்போது நடைபெற்றது?
5. இது நற்கருணையாண்டு. நூற்றுக்கணக்கான நற்கருணைப் புதுமைகள் நமக்கு இந்நாட்களில் வழங்கப்படுகின்றன. புனித அந்தோனியார் வாழ்வில் நடந்த நற்கருணை அதிசயத்தில் ஒரு கழுதை நற்கருணைக்கு ஆராதனை செலுத்தியது. அது யாருக்குச் சொந்தமானது?
6. “எனது தசையைத் தின்று எனது இரத்தத்தைக் குடிப்பவன் நிலைவாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனை இறுதி நாளில் உயிர்தெழச் செய்வேன்.” இவ்வாக்கியம் நற்செய்தியில் எங்குள்ளது?
7. சமீபத்தில் வங்காலைப் பங்கு மக்கள் தமது பாதுகாவலியாம் புனித ஆனாள் ஆலய நிர்மாணிப்பின் 125வது வருட நிறைவைக் கொண்டாடினர். இவ்வாலயத்திற்கு அத்திவாரமிட்டவர் யார்?
8. புனித மாக்ஸி மில்லியன் கோல்பே என்பவை மறைந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். அப்புனிதர் பட்ட நிகழ்வு எப்போது நடைபெற்றது?
9. வத்திக்கானில் வழிபாடு மற்றும் அருட்சாதனங்கள் ஆணையத்தின் தலைவராக இருப்பவர் யார்?
10. புனித வளனார் துறவற சபைச் சகோதரர்கள் கல்விப் பணிக்காக மன்னாரில் காலடி வைத்த ஆண்டு 1894 ஆகும். மன்னாரில் அவர்களின் முதற் கல்விப் பணித்தளம் எது?

### கவனியுங்கள்..... கவனியுங்கள்......

உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டிக்குள் இன்னுமொரு போட்டி! இப்போட்டி 10.12.2005ல் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறும். தாமதியாது உங்கள் விண்ணப்பங்களை எமக்கு கிடைக்கச் செய்யுங்கள். இது தொடர்பான விபரங்களை சென்ற மன்னாவில் பாருங்கள்!

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 28 இற்கான கேள்விகளுக்கு 13 பேர் விடையளித்திருந்தனர்.

இவர்களுள் பரிசுக்குரியவராக
தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி,

**எஸ். ஜெகன்,**
**அ.ம.தி அகம், இல.26 குட்செட் வீதி, வவுனியா**

இவர்களுள் பாராட்டுக்குரியவர்களாக்
தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்.

1. பீ.கஸ்தூரி, இல.25/1 ராணி மில் வீதி, இறம்பைக்குளம், வவு.
2. சீ.மெடோனா, இல.9, 3ம் குறுக்குத்தெரு, கண்டிவீதி, வவுனியா.
3. எஸ்.காஷனா (8ம்ஆண்டு) புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.
4. யோ.மேரிறுபினா குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
5. ஆர்.டிலோஜினி, மன்.புனித சவேரியார் பெண்.தே.பாடசா,மன்னார்.
6. எம்.யூலிவலன்ரீனா, காத்தாங்குளம், வட்டக்கண்டல்.
7. எ.யூலியற் றொசானி, 2ம் குறுக்குத்தெரு,கூமாங்குளம்,வவுனியா.
8. மு.புவனமோகன், நெடுங்கண்டல், அடம்பன்.
9. வி.நிதக்ஷன் குரூஸ், தலைமன்னார்மேற்கு, தலைமன்னார்.
10. செ.நிசாந்தினி, கீரி, மன்னார்.

## ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்பு செய்யப்படலாகாது! 2ம் பக்கத் தொடர்.

எடுத்துக் காட்டாக, கிறிஸ்து தம்முடைய தலைமைச் சீடருக்குக் கூறிய, “உன் பெயர் பேதுரு.” (மத்.17:18) என்னும் விடயத்தை நோக்கும்போது, பேதுரு என்னும் கிரேக்கச் சொல்லுக்கு பாறை என்பது பொருள். இப்பின்னணியிலேயே தமிழ் இலக்கிய பண்பாட்டு மயமாக்கலால் உந்தப்பெற்று, தத்துவ போதகர் (1557-1656) பேதுருவின் பெயரை முதலில் மலையப்பன் என்றும், அதேவேளையில் பாவிலுவின் பெயரை சின்னப்பன் என்றும் மொழிபெயர்ப்புச் செய்து, தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இவ்வாறே, யோவான் (இதன் பொருள் அருள்பாலிக்கின்ற என்பதாகும்) என்னும் பெயர் அருளப்பன் என மொழிபெயர்புச் செய்யப்பட்டு தமிழ்ப் பெயராக மாற்றப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் வந்த மதுரை மாகாண யேசு சபைத் தலைவர் சிறப்புப் பெயர்களை - அதாவது, ஆட்களின் பெயர்களை மொழிபெயர்க்கக் கூடாது என கட்டளையிட்டதால் பிற்கால நூல்களில் பேதுரு, பாவிலு, யோவான் என்னும் பெயர்களே வருகின்றன. ஆனால் வீரமாமுனிவர் (1640-1747) மீண்டும் ஆட்களின் பெயர்களை மொழிபெயர்ப்பின் அடிப்படையில் தமிழ் பெயர்களாக மாற்றினார். இதனால் இராயப்பர், சின்னப்பர், அருளப்பர் என பேதுரு, பாவிலு, யோவான் என்னும் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு, தமிழ்ப் பெயர்களாக மாற்றப்பட்டன. வீரமாமுனிவர் மேலும் சில புனிதர்களின் பெயர்களையும், விவிலியத்தில் தோன்றும் ஆட்களின் பெயர்களையும் மொழிபெயர்ப்புச் செய்து, தமிழ்ப் பெயர்களாக மாற்றியமைத்தார். அதன்படி, ஆதாம் என்பதற்கு, ஆதியப்பன் எனவும், அந்திரேயா (இதன் பொருள் பலம் பொருந்தியவர்) என்பதற்கு பெலவேந்திரர் எனவும், மரிகரிதாள் என்பதற்கு முத்தம்மாள் எனவும், இலாசர் (இதன் பொருள் இறைவனுடைய சகாயம் பெற்றவர்) என்பதற்கு தேவசகாயம் எனவும், கான்ஸ்டான்சியஸ் என்பதற்கு தைரியம் எனவும், பிடேலிஸ் என்பதற்கு விசுவாசம் எனவும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட தமிழ் பெயர்களாக மாற்றினார். இவை சில எடுத்துக்காட்டுக்கள்.

அதேவேளையில், புரட்டஸ்தாந்து சபையினரால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் திருவிவிலிய மொழிபெயர்ப்புக்களை நோக்கும்போது, அவர்களால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட எல்லா மொழிபெயர்ப்பிலும் ஆட்களின் பெயர்கள் ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டனவேயொழிய மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை. எடுத்துக்காட்டாக, புரட்டஸ்தாந்தினரது மொழி பெயர்ப்புக்களிலெல்லாம் பேதுரு, பவுல், யோவான், ஆந்திரேயா என்றே இடம்பெற்றுள்ளன.

இதனால் தமிழ் கத்தோலிக்க திருவிவிலிய மொழிபெயர்ப்பின்போது மட்டுமே ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. இதுவும் பண்பாட்டுமயமாக்கலில் தீவிரமாகச் செயற்பட்ட தத்துவப் போதகர். வீரமாமுனிவர் என்பவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் இவ்வாறிருக்க, கத்தோலிக்கத் திருச்சபையின் தற்போதைய திருத்தந்தையை தமிழில் எவ்வாறு அழைக்க வேண்டுமென்னும் சிக்கலை நோக்குவது பொருத்தமானது. கருதினால் ஜோசப் ரட்சிங்கர் தற்போதைய திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டபோது, புனித பெனடிக்ற் என்பவரது பெயரையே, தெரிவு செய்தார். பெனடிக்ற் என்னும் பெயருக்கு, ‘இறையாசீர்’ எனப் பொருள்படும். இப்பின் புலத்திலேயே வீரமாமுனிவர் (1680 -1747) பெனடிக்ற் என்னும் பெயரை முதன்முதலில் ஆசீர்வாதப்பர் என்று மொழி மாற்றம் செய்து தமிழ் பெயராக மாற்றினார்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைச் சுருங்கக் கூறின்,

1) ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்பு செய்யப்படலாகாது என மொழிபெயர்ப்பு விதிகள் எடுத்துரைக்கின்றன.

2) பல அறிஞர்களால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டபோது, திருவிவிலிய மொழிபெயர்ப்பு மேற்கூறிய, விதிகளுக்குட்பட்டு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

3) உலகிலுள்ள மொழிகளில் தமிழ் மொழி தவிர்ந்த வேறு எந்த மொழியிலும், ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்படாமல் ஒலிபெயர்ப்பே செய்யப்பட்டுள்ளது.

4) பல தமிழ் திருவிவிலிய மொழிபெயர்ப்புக்களை மேற்கொண்ட புரட்டஸ்தாந்து சபையினர் எந்தவொரு ஆட்களின் பெயர்களையும் மொழிபெயர்ப்புச் செய்யாமல், ஒலிபெயர்ப்பே செய்துள்ளனர்.

5) பண்பாட்டு மயமாக்கல் காரணமாக தமிழ்க் கத்தோலிக்க மொழிபெயர்ப்புக்களில் மட்டும் ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழ்க் கத்தோலிக்க மரபில் மட்டும் இடம்பெற்ற தவறை அதாவது, ஆட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்தமையை மீண்டும், வரலாற்றில் செய்துகொண்டிருக்க வேண்டுமா? என்ற வினாவையும் முன்வைப்பது பொருத்தமானதே. எனவே மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது, தற்போதைய திருத்தந்தையை 16 ஆம் பெனடிக்ற் என அழைப்பதே பொருத்தமானது.

## துறவற வாழ்வில் வெள்ளிவிழா .........

1ம் பக்கத் தொடர்ச்சி

திரு. சம்சோன்பிள்ளை, அந்தோனியாப்பிள்ளை தம்பதியருக்கு நான்காவது மகனாக, 18.12.1954ல் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை இசைமாலைத்தாழ்வு றோ.க.த.க. பாடசாலையிலும், முருங்கன் மகாவித்தியாலயத்திலும் க.பொ.த உயர்தர படிப்பை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.

துறவற வாழ்வில் இவர் பல்வேறு பணித்தளங்களில் பணியாற்றியுள்ளார். இளவாலை மாணவர் இல்ல பொறுப்பாளராகவும், ஊர்காவற்றுறையில் பங்குப்பணித்தள வேலையிலும், திருகோணமலையில் புனித வளனார் தொழில்நுட்ப கல்லூரியிலும், பாண்டிருப்பில் புனித மரியாள் மாணவர் இல்ல பொறுப்பாளராகவும், கல்முனையில் சகோதரர் இல்ல மேற்பார்வையாளராகவும், மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சக முகாமையாளராகவும், தற்போது ஹற்றனில் பங்கு பணித்தளங்களிலும் பணியாற்றி வருகின்றார்.

இவர் 17 வருடங்கள் மாணவ இல்லங்களில் மாணவர்களை உருவாக்குவதில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழகுவதற்கு இனிய சுபாவம் கொண்டவர், நோயாளிகளை பராமரிப்பதும், வயது முதிர்ந்தவர்களை கவனிப்பதும் இவரது சிறப்புப் பண்பாகும். அவர் தம் தன்னலங் கருதாத சேவை மேலும் சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா இவரை வாழ்த்தி நிற்கின்றது.

# குடும்பக் குவலயம்

# கொஞ்சம் உங்களோடு.... 5

- சினேகமுடன் விமல் (அ.ம.தி) -



பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கின்றீர்கள்? அடிதடியல்ல– அன்பு, கண்டிப்பல்ல – கனிவு, பொருமலல்ல – பொறுமை, இவற்றோடு பிள்ளைகளோடு நடை நடப்பதெப்படி என்பதை எளிய தமிழில் சொல்ல விளைகின்றேன்.

- சினேகமுடன் விமல் (அ.ம.தி) -

### *மரதன் ஓட்டம் .... ஓடுங்க ஓடுங்க ஓடுங்க!*

விடுமுறைக்காக நான் வீடு சென்றிருந்தபோது பாலர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

அது மரதன் ஓட்ட நிகழ்வு! காலை ஏழு மணியளவில் மரதன் ஓட்ட நிகழ்வு ஆரம்பிக்கும் இடத்துக்கு பிள்ளைகள் பெற்றோருடன் வந்து விட்டனர். பிள்ளைகள் அனைவருக்கும் ஒலிம்பிக் ஓட்ட வீரர் சுசந்திகாவின் உடைபோல் அணிவிக்கப்பட்டு இலக்கங்களும் கொடுக்கப்பட்டு வயதடிப்படையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு குளுக்கோசு கொடுத்துக் கொண்டிருந்தனர். சில பெற்றோர் "நான் என்ர பிள்ளைக்கு முட்டை அடிச்சு குடுத்துத்தான் கூட்டி வந்தன்" என்று அளந்து கொண்டிருந்தனர். பள்ளிப் பருவத்திலே ஓட்ட வீரர்களாய் இருந்த சில பிள்ளைகளின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் காதுக்குள் ஓட வேண்டிய நுட்பங்களை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

பிள்ளைகளோ அந்தோ பரிதாபம்! சிலர் உண்மையிலே ஓடி ஜெயிக்க வேண்டும் என்று உறுதியோடு நின்றனர். சில பிள்ளைகள் வேள்விக்கு வெட்டக் கொணர்ந்த ஆடுகள்போல் பரிதாபகரமாய் நின்றனர். சிலர் தங்களது வழமையான ஒப்பாரிகளை தொடங்கி விட்டனர். சில பிள்ளைகளுக்கு இன்னும் நித்திரையே முறியவில்லை. சிலர் அம்மாக்களின் சேலையைப் பிடித்துக்கொண்டு "ஓட மாட்டேன்" என்று அடம் பிடித்தனர். 'மடார்' என்று ஒரு சத்தம் கேட்டது! ஓர் தாய் தன் பிள்ளைக்கு ஒரு சாத்து சாத்தியும் போட்டாள். சில பெற்றோர் "குஞ்சு, ராசா செல்லம் ஓடுமன" என்று தங்கள் பிள்ளைகளை கெஞ்சிக் கொண்டிருந்தனர்.

"என்ர புள்ள முதலாவதாக வந்தால்..." என்ற ஆதங்கம் எல்லாப் பிள்ளைகளின் பெற்றோரின் முகங்களில் குடிகொண்டிருந்ததை அவர்களின் பதட்டத்தில் இருந்து அறிய முடிந்தது.

ஓடுங்க.. ஓடுங்க.. என்ற ஒலி வானைப்பிளந்தது. மரதன் ஓட்டம் ஆரம்பமாகியது. கணிசமான தூரம் சில பெற்றோர் தங்களையும் மறந்து தங்கள் பிள்ளைகளோடு ஓடத்தொடங்கினர். (போட்டி பிள்ளைகளுக்கா அல்லது பெற்றோருக்கா?) ஓடிய பிள்ளைகள் சிலர் உற்சாகமாக தொடர்ந்து ஓடிக்கொண்டே வெற்றி இலக்கை அடைந்தனர். சிலர் மெல்ல மெல்ல ஓடி முடித்தனர். சிலர் விழுந்து அழுதுகொண்டிருந்தனர். சிலர் போட்டி ஆரம்பமானவுடன் வெற்றிகரமாக பின்னுக்கு ஓடி அம்மாவின் சேலைக்குள் ஒளிந்து கொண்டு அழத்தொடங்கினர். அனைவரது உற்சாகமான கை தட்டல்களுக்கு மத்தியில் மரதன் ஓட்டம் இனிதே நிறைவுற 1ம், 2ம், 3ம் இடங்களில் பெற்றோரின் பெயர்கள் எழுதப்பட்டன.

### மரதனின் பின் பெற்றோரின் மனநிலை

வென்றவர்களின் பெற்றோர் "அப்பனுக்கு புள்ள தப்பாமல் பொறந்திருக்கான்" என்று மார்பு தட்டி கை குலுக்கி வாழ்த்தினர். தோற்ற சில பிள்ளைகளின் பெற்றோர் போட்டி நடைபெற்ற விதம் சரியில்லையென்றனர். சில பெற்றோர் பிள்ளைகள் ஓடிய வீதி குன்றும் குழியுமாக இருந்ததால் தங்கள் பிள்ளைகள் ஓட முடியவில்லை என்று அதிருப்தி தெரிவித்தனர். (ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்....) சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை "உனக்கு சாப்பிடத்தான் தெரியும் வா வந்து சாப்பிடு" என்று திட்டி இழுத்துக்கொண்டு சென்றனர். சிலர் தங்கள் பிள்ளையை அழுமுஞ்சி உன்ர முகம் விடியாது என்று அவதூறாய் பேசினர். வெற்றிக் கிண்ணம் தூக்க வேண்டும் என்று வந்த சில பெற்றோர் (பிள்ளைகளல்ல) முக வாட்டத்தோடு சென்றனர்.

அம்மா அப்பாமாரே... வாழ்க்கை ஓர் மரதன் ஓட்டம். நாம் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கின்றோம். சிலர் சவாலை எதிர்த்து சிரித்து ஓடுகின்றோம். சிலர் அழுதுவந்த கண்களோடு ஓடுகின்றோம். சிலர் விழுந்து எழுந்து ஓடுகின்றோம். சிலருக்கு 'முட்டை' 'குளுக்கோசு' தேவைப்படுகின்றது. சிலருக்கு வாழ்க்கை எனும் மரதன் ஓட்டப் பாதையில் தெரிகின்ற பெரிய மலைகளும் சிறு கற்களாக தென்படுகின்றன. சிலருக்கு சிறிய கற்களே பெரிய மலைகளாகத் தென்படுகின்றன. சிலருக்கு வாழ்க்கை மரதன் ஓட்ட விதிகள் தெரிவதில்லை. சிலர் குறுக்காலே ஓடுகின்றோம். சிலர் ஓட்டப்பாதை சரியில்லை என்று சொல்கின்றோம். கணவன் மனைவியாக சிலவேளை சேர்ந்து ஓடுகின்றோம். சிலவேளைகளில் இழுபடுகின்றோம். சிலர் ஆமை வேகத்திலும், சிலர் முயல் வேகத்திலும் ஓடுகின்றோம்.

*"மம்மி நீ ஓர் அசையா அம்மியல்ல*
*டடி நீயொரு டெட் பொடியல்ல" (dead body)*

எல்லாரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். பெரியவர்கள் சிறியவர்கள், வளர்ந்தவர்கள் முதியவர்கள் எல்லாரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். வாழ்க்கையிலே சிலர் ஓய்வெடுத்து ஓடுகின்றோம். சிலர் ஓய்வில்லாமல் ஓடுகின்றோம்.

### *பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள்*

பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் இப்போதுதான் வாழ்க்கை என்னும் மரதன் ஓட்டத்தில் ஓடத்தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கை பற்றிக் கற்றுக்கொடுங்கள்.

தோல்வியை எப்படி ஏற்றுக்கொள்வது வெற்றிக்காக எப்படி உழைப்பது என்பது பற்றி அவர்களோடு உரையாடுங்கள். மரதன் ஓட்ட நிகழ்வில் வரக்கூடிய தடைகள்போல வாழ்க்கையில் வரக்கூடிய தடைகளை சொல்லிக்கொடுங்கள். உங்கள் பிள்ளைகளோடு அன்போடு உரையாடுங்கள். அவர்கள் தோல்வியடைந்து தளர்கின்றபோது உற்சாகம் கொடுங்கள் உங்களுடைய ஆசை அபிலாசைகளைத் திணிக்காதீர்கள். நீங்கள் ஓட்டக்காரராக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற உங்கள் மனநிலையினைக் களையுங்கள். உங்கள் பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளோடு இணைத்து ஒத்துப்பேசி (comparison) அவர்கள் மனங்களைப் புண்படுத்தாதீர்கள்.

உங்கள் கௌரவத்துக்காக உங்கள் பிள்ளைகளின் உணர்வுகளை சாகடிக்காதீர்கள். உங்களைப் போல்தான் உங்கள் பிள்ளை எதிர்காலத்தில் வரவேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் பிள்ளைகள் மேல் தெளிக்கிற நச்சு வார்த்தைகள் அவர்களது வாழ்வையே பாழாக்குகின்றன. நச்சு வார்த்தைகளை கொடூரமான வார்த்தைகளை, புண்படுத்தும் வார்த்தைகளை, தயவுசெய்து பிரயோகிக்க வேண்டாம். இத்தகைய வார்த்தைகளால் உளவியல் தாக்கத்துக்கு உட்பட்டு நாளும் வருந்திக்கொண்டிருக்கின்ற எத்தனையோ பேரை சந்தித்திருக்கிறேன். ஆகவே தயவுசெய்து வேண்டாம்.

(தொடர்ந்து பேசுவேன்)

# மருத்துவப் பொழிவு

## ஆரோக்கிய வாழ்வுக்கு

ஆரோக்கியத்துடன் நோய் நொடியில்லாமல் இருக்க வேண்டும் என்பது அனைவரின் விருப்பமாக உள்ளது. இது சாத்தியமானதுதான் என்றாலும், அதற்காகக் கடினமாக உழைக்க வேண்டும். கீழ்க் கண்ட விசயங்களில் நீங்கள் ஒழுங்காக அக்கறை காட்டும் பட்சத்தில் உங்கள் கனவு நனவாகும்.

### *ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியமான அம்சங்கள்*

1. முறையான வளர்ச்சிக்கு வேண்டிய அளவுக்கு ஊட்டச்சத்துக் கிடைக்க வேண்டும். 2. சுரப்பிகள் அனைத்தும் வழக்கமான பணியைச் செய்ய வேண்டும். 3. இரத்த நாளங்கள் மற்றும் மூச்சு மண்டலத்தை உடற்பயிற்சிகள் மூலம் தூண்ட வேண்டும். 4. நரம்பு மண்டல இயக்கத்தை யோகாசனம் மூலம் சமநிலையில் வைத்திருக்க வேண்டும்.

காய்கறிகள், பழங்கள், பால் மற்றும் பால் பொருட்கள் ஆற்றலை அதிகரிக்கும். அதேசமயம் அவற்றால் இருதயத்துக்கு ஆபத்தும் இல்லை என்பதால் உணவில் தாராளமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சில பொருட்களை நாம் கூடுதலாகச் சாப்பிடுகிறோம். இதை உடனடியாகத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இதனால் உடம்பிலிருந்து கழிவுகள் வெளியேறுவது தடுக்கப்பட வாய்ப்பு உள்ளது.

3 மணி நேரம் மொத்தமாகச் சாப்பிடுவதற்குப் பதில் 3 மணிநேரம் இடைவேளை வைத்துக்கொண்டு அடிக்கடி சாப்பிட வேண்டும். அதேசமயம் எக்காரணம் கொண்டும் உணவைத் தவிர்க்கக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவதனால் உடம்பில் கொழுப்புச் சேருவது தடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னொன்று பசியால் கூடுதலாகச் சாப்பிடுவதும் தவிர்க்கப்படுகிறது. மலக்குடல், சிறுநீர்ப் பை, தோல், நுரையீரல் ஆகியவற்றின் மூலம் பழைய செல்கள் அகற்றப்பட்டுப் புதிய செல்கள் தோன்றும். உடம்புக்குப் போதிய சக்தி கிடைக்கும் வரை உடம்பிலிருந்து கழிவுகள் வெளியேற்றப்படுவது முறையாக இருக்கும். போதியளவுக்கு உணவு கிடைக்காமல், போகும் பட்சத்தில் டாக்சிமியா என்ற நச்சுப் பொருட்கள் உடம்பில் உருவாகும். ஆரோக்கியமான உடம்புக்கு இந்த டாக்சிமியா பொருட்களை வெளியேற்ற வேண்டியது அவசியமாகும்.

அடுத்து டயட்டில் இருக்கிறேன் என்று, சொல்வது உடம்புக்கு அவ்வளவு நல்லதல்ல. ஆனால் உடற்பயிற்சி மிகவும் நல்லது. உடற்பயிற்சியானது, பசியில்லாமல் கலோரி தட்டுப்பாட்டை உண்டாக்குகிறது. உடற்பயிற்சி செய்வதால் தசைகள் வலுவாகும். கொழுப்பை எரிக்கும் என்சைம்கள் மற்றும் ஹோர்மோன்கள் உற்பத்தி அதிகரிக்க உடற்பயிற்சி தேவை. இன்னொரு விசயம், உடற்பயிற்சியினால் செல்களில் இன்சூலின் தன்மை அதிகரிப்பதால் உடம்பில் எரிக்கப்படும் கலோரியானது கொழுப்பாகச் சேர்க்கப்படாமல் கிளைகோஜன்களாக ·மாற்றப்படுகின்றன.

யோகாசனம் மருத்துவர்களால் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறையாகும். ஆஸ்மா, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மூட்டுவீக்கம், சீரணக் கோளாறுகள் ஆகிய பிரச்சினைகளுக்கு யோகாசனம் மிகச் சிறந்த மருந்தாகும். இது உடம்புக்குத் தெம்பு அளிப்பதுடன், மூளை செல்களைத் தூண்டி ஆற்றலையும் அதிகரிக்கிறது.

## உடல் எடை அதிகரித்தால் தலைவலியும் அதிகரிக்கும்




உடல் எடையானது நீரிழிவு, இருதய நோய் வரை பல்வேறு வகையான நோய்களுக்கும் காரணம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் உடல் எடைக்கும் தலைவலிக்கும் தொடர்பு இருப்பது தெரியுமா? சிலருக்கு தினந்தோறும் தலைவலி வரும். இன்னும் சிலருக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சொல்லி வைத்தாற்போல சாதாரண தலைவலியில் தொடங்கி ஒற்றைத் தலைவலி வரை வரலாம். இது மாதிரி நேரத்தில் அவர்கள் உடல் எடையைச் சோதித்துக்கொள்வது நல்லது. உடல் எடை அதிகரிக்கும்போது கூடவே கடுமையான தலைவலியும் அதிகரிப்பதாக மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

நாட்பட்ட கடுமையான தலைவலிக்கு உடல் பருமன் ஒரு ஆபத்தான காரணி என்று அவர்கள் சொல்கிறார்கள். உடல் பருமன் நாட்பட்ட தலைவலியை உண்டாக்குவதுடன் நின்றுவிடாமல் வாந்தி, தலைசுற்றல் போன்ற பக்க விளைவுகளையும் உண்டுபண்ணுகிறது. இந்தத் தலைவலியால் பள்ளி நாட்களையும் வேலை நாட்களையும் நிறையவே இழக்கவேண்டி வரும்.

ஆனால் ஒரேயொரு விசயம் உள்ளது அதாவது தலைவலி மாத்திரைகள் சாதாரண உடல் பருமன் உடையவர்களிடம் எப்படிச் செயற்படுகிறதோ, அதேபோல பருமனானவர்களிடமும் செயற்படும். அதாவது உடல் பருமன் ஆபத்தான காரணியாக இருந்தபோதிலும் தலைவலிக்குச் சிகிச்சை கொடுக்க முடியும் ஆதலால் உங்களுக்குத் தலைவலி ஏற்பட்டால் உடனே மருத்துவரை நாடி நல்ல ஆலோசனையைப் பெறுங்கள்.

## பழச்சாறு அருந்துவோம்



வெயில் காலத்தில் மனிதன் மட்டுமல்லாமல் விலங்குகள், செடி கொடிகள் கூட வாடி வதங்கிப்போவது வழக்கம். மனிதர்களுக்கு இக்கால கட்டத்தில் உடம்பில் இருந்து, அதிகப்படியான தண்ணீர் வியர்வை மூலம் வெளியேற்றப்படுவதனால், சோர்வு ஏற்படுகிறது. இதனால் தோல் வறண்டு, பல்வேறு சிக்கல்கள் உண்டாகும். வறுத்தெடுக்கும் கோடையை விரட்டப் பழச்சாறுகள் அருந்துவதும், நிறைய தண்ணீர் குடிப்பதும் சிறந்த வழியாகும். திராட்சை, அன்னாசிப்பழம், எலுமிச்சை, வாழைப்பழம், தார்ப்பூசணி என நிறையப் பழங்கள் உள்ளன. இத்தகைய பழச்சாறுகள் எளிதாக ஜீரணமாகிவிடுவதால் உடம்புக்கு மிகவும் நல்லது.

பார்லி, வடி கஞ்சி, வெண்ணெய், பால் ஆகியவற்றை சர்க்கரை சேர்த்து அருந்துவது நல்லது. உலர் திராட்சை, வெள்ளரிக்காய் ஆகியவற்றைச் சாப்பிடும்போது, கூடவே சுத்தமான குளிர்ந்த தண்ணீரும் அருந்த வேண்டும். உலர்ந்த உப்புச் சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிட வேண்டாம். பால் சாதம், கரும்புச்சாறு, வெண்ணெய், பால், லசி ஆகியவை உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் ஏற்றது. கோப்பி, தேநீர் ஆகியவை மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டும் என்பதால் அவை நல்லதல்ல. அதுபோல வெறும் வயிற்றில் இவற்றை சாப்பிடுவதால், அமிலத்துடன் கலந்து, உடம்பு முழுக்க எடுத்துச் செல்லப்படும் என்பதால், பலவிதமான நோய்கள் உண்டாகும். மது அருந்துவது உடம்பைச் சூடாக்கும் என்பதால் அதைத் தவிர்ப்பது நல்லது. அப்படியே அருந்துவது என்றாலும் நிறைய தண்ணீர் சேர்த்த பிறகுதான் அருந்த வேண்டும்.

செடி - கொடிகள், மலைகள் அல்லது தண்ணீர் சூழ்ந்த இடங்களில் நேரத்தைச் செலவழிக்க வேண்டும். பகல் நேரத்தில், ஓய்வு எடுக்கலாம், நீர்நிலைகளில் நீந்தலாம்.

மெலிதான பருத்தி உடைகளை அணிவது ஏற்றது. குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. அளவுக்கு மீறி உடற்பயிற்சி செய்ய வேண்டாம். தேவையில்லாமல் வெயிலில் செல்ல வேண்டாம். குறிப்பாக உச்சி வெய்யில் நேரத்தில், வெளியில் நடமாடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். இரவு நேரத்தில், நிலாவொளியில் பொழுதைக் கழிப்பது நல்லது. பருவ காலங்கள் மாறுவதை நம்மால் தடுக்க முடியாது. அதேசமயம் அதற்கேற்ற வகையில் நமது வாழ்க்கை முறை, உணவு முறையை மாற்றிக் கொண்டால் பாதிப்பில் இருந்து தப்ப முடியும் என்பது உண்மை.

## சமைப்போம்! சுவைப்போம்!

*தொகுத்துத் தருவது*

- எம். தீபா. வளனகம். மன்னார் -

### கோக்கனற் குக்கீஸ்

#### தேவையான பொருட்கள்

தேங்காய்ப் பூ (உலர்த்தியது) - 10-12 மே. கரண்டி
சீனி - 3 மேசைக் கரண்டி
முட்டை வெண்கரு - 1
வனிலா - 1 மேசைக் கரண்டி
பிளம்ஸ் - விரும்பியளவு
கலரிங் (விரும்பியது) - 1 தேற்கரண்டி
சிறிதாக வெட்டிய கஜு - 2 மேசைக் கரண்டி (நிரப்பி)
மாஜரின் - 1தேற்கரண்டி (தட்டுக்குப் பூசுவதற்கு)

#### செய்முறை:



முட்டையின் வெண்கருவைத் தனியாக எடுத்துப் பாத்திரத்திலிட்டு சீனியும் சேர்த்து, நுரை பொங்கும் வண்ணம் நன்றாக அடித்துக் கொண்ட பின்பு கலரிங், வனிலா என்பவற்றை சேர்த்துக் கொள்க.

பின்பு அடித்த கலவையில் தேங்காய்ப் பூவைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்து கஜுவுமிட்டு பிசைந்து வைத்துக்கொள்க. பின்பு கேக் தட்டுக்கு ஒயில் பேப்பர் பரவி, மாஜரின் பூசிக்கொண்ட பின்பு, தயாரித்து வைத்துள்ள கலவையைத் தேசிப்பழம் அளவு உருண்டைகளாகப் பிடித்து இரண்டு உள்ளங் கைகளுக்கும் நடுவே, வைத்து மெதுவாக அமர்த்தி, நடுவில் பிளம்ஸ் பதித்துக் கேக் தட்டில் இடைவெளி விட்டு அடுக்கி பேக் செய்து ஆறிய பின்பு பரிமாறலாம்.

# பெரியப்பா பதில்கள்




கே: பெரியப்பா, கருணை இப்போது எங்கே இருக்கிறது?

*- தீபன், பம்பைமடு.*

ப: 'கருணை' கிழங்கு வியாபாரத்தில் அதிகமாகக் கிடைக்கிறதாம்.

கே: ஒரு காலத்தில் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு என்று சொன்னார்கள். இன்று படித்தவருக்கு மதிப்பா அல்லது பணக்காரனுக்கு மதிப்பா? பெரியப்பா எங்கே உங்கள் பதில்?

*- சின்னவன், விடத்தல் தீவு.*

ப: பாடப் புத்தகத்தைவிட பணப் புத்தகத்தின் (செக் புக்) பெறுமதி அதிகம் என்று நம்புகின்ற இருண்ட காலத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றோம் போலதான் தெரிகிறது.

கே: கோபத்திற்கு நாம் அடிமைப்படலாமா?

*- மரிய சீலி, மன்னார்*

ப: இல்லை கோபம் நமக்கு அடிமைப்பட வேண்டும்.

கே: பத்திரிகைக்கான சந்தா விபரத்திலே 'ஆயுள் சந்தா' என்று இருக்கிறதே இது எத்தனை வருடத்திற்கான கட்டணம்?

*- சதுரூடான், தலைமன்னார்*

ப: நியாயமான சந்தேகம். இதே சந்தேகம் எனக்கும் வந்தது. ஆயுள் சந்தா கேட்ட பத்திரிகையாசிரியரிடம் இதே கேள்வியை சற்று மாற்றிக் கேட்டேன். "ஆயுள் சந்தா என்றால், பத்திரிகையின் ஆயுளா? எனது ஆயுளா" என்றேன். அந்த மனிதர் புத்திசாலி. அவர் சொன்னார், "எது முதலில் முடிகிறதோ அது"

கே: கணவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடலாமா?

*- றேசிக்கா. கட்டையடம்பன்.*

ப: 'இந்தாங்க, இஞ்சேருங்க, உங்களத்தான்' என்று கூப்பிடுவது பறவாயில்லை. சிலர் "இது இப்பதான் வந்தது", "அது இன்னும் வர இல்லை" என்று அ·.திணையில் சொல்வார்கள். இதைவிட பெயர் சொல்லிக் கூப்பிடுவது பறவாயில்லையே.

கே: இன்றைய தொலைக்காட்சித் தொடர்களில் நீங்கள் ரசிப்பது எதனை?


*- நிருஜன், செட்டிகுளம்.*

ப: இரசிப்பதைவிட ஆச்சரியப்படுவதுதான் அதிகம்! என்ன என்கிறீர்களா? நாற்பது ஐம்பது நாட்களுக்குள் முடிக்க வேண்டிய கதையை 600,700 நாட்களுக்கு எப்படி இழுத்தடிக்கிறார்கள் என்பது முதலாவது ஆச்சரியம். அப்படி வருடக்கணக்காக இழுபட்டுப்போகும் தொடர்களை நம்மவர்கள் வேலையை விட்டு குந்தியிருந்து (அழுதுகொண்டு) பார்ப்பது இரண்டாவது ஆச்சரியம்.

கே: நான் விரைவில் திருமணம் செய்துகொள்ள இருக்கிறேன். படித்த பெண்ணை திருமணம் செய்வது நல்லதா? படிக்காத பெண்ணை திருமணம் செய்வது நல்லதா?

*- குணாளன், முருங்கன்.*

ப: இரண்டிலும் பிரச்சினை உண்டு. படித்த பெண்ணுக்கு விளக்கம் சொல்லவே நேரம் போதாது. படிக்காத பெண்ணுக்கு விளங்க வைப்பதே பெரிய பாடாக இருக்கும்.



கே: பெரியப்பா உங்களுக்கு கடையில் சாப்பிடப் பிடிக்குமா?

*- விஜய குமார், பேசாலை.*

ப: பிடிக்கும். ஆனால் சில சாப்பாட்டுக் கடைகளில் நேற்றைய உணவுகள்! விலைகள் மட்டும் நாளைய விலைகள்! பல சாப்பாட்டுக் கடைகள் அமீபியா கிருமிகளை விநியோகிக்கும் ஏக விநியோகஸ்தர்கள்!

கே: "நான் மச்சம் மாமிசம் கையாலே தொட மாட்டேன்" என்று திருமணம் செய்துகொண்டு, இப்போது மச்ச மாமிசம் முழுப் போடு போடும் என் கணவரைப் பற்றி?

*- சுகப்பிரியா, தோட்டவெளி.*

ப: சிலவேளை அவர் கையால் தொடாமல் முள்ளுக் கரண்டியால் சாப்பிடும் அர்த்தத்தில் சொல்லியிருக்கலாம் அல்லவா..ஹீ..ஹீ..

கே: ஒரு நல்ல தம்பதி எப்படி இருக்க வேண்டும்?

*- கண்ணன், வவுனியா.*

ப: "ஆணாகப்பட்டவர் காது கேளாதவராகவும், பெண்ணாகப்பட்டவர் வாய் பேசாதவராகவும் இருக்க வேண்டும்" என்று நான் சொல்லவில்லை! திருமணம் ஆன என் நண்பன் சொன்னான்.

கே: 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்று திருவள்ளுவர் எதைப்பற்றிச் சொல்லியிருப்பார்?

*- சவிரியான், தேவன்நகர்.*

ப: வாய் 'இனிக்கப்' பேசக் கூடிய நல்ல வார்த்தைகள் இருக்க பிறர் மனம் 'கசக்க' சுடுசொல் பேசுகிறோமே அதை நினைத்துத்தான் சொல்லியிருப்பார்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு

மலர்வு
09 - 05 - 1958



உதிர்வு
01 - 09 - 2005

### யுவானி சீனித்தம்பி
### பிச்சகுளம் - முருங்கன்

எங்கள் அன்புக்குரிய அப்பா, நீங்கள் எங்களுடன் எப்போதும் உயிருடன் இருக்கிறீர்கள். உங்கள் எண்ணங்கள் ஆசைகள் எல்லாம் காற்றோடு கலந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது. பாதை தெரியா பாலகர் நாங்கள் பாதிவழியில் விட்டு பறந்து விட்டீர்களே! யாரிடம் செல்வோம் அப்பா, சிறகுடைந்த குஞ்சுகளாக உங்கள் அன்பைத்தேடி அலைகின்றோம்.

ஆண்டவரே, பரம பிதாவின் சமூகத்திலே இந்த ஏழைக்கு நல்லிடம் கொடுத்தருளும்.

இவருடைய பிரிவினால் துயருறும்,
*அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், சகோதரன் உறவினர், நண்பர்கள்.*

## 7ம் ஆண்டு நினைவு

மலர்வு
18 - 07 - 1942



உதிர்வு
01 - 01 - 1998

### நோபேட் அல்போன்ஸ்
### (தலைமன்னார்)

## 10ம் ஆண்டு நினைவு

மலர்வு
05 - 11 - 1974



உதிர்வு
06 - 11 - 1995

### இ. அ. ரவீந்திரக் குமார்
### (பாபு - தலைமன்னார்)

மண்ணிலே நீங்கள் இருவர் மறைந்தாலும்
அன்போடு எமை வளர்த்த நாட்கள் எம் மனத்திரையில் விழுதே!
வசந்தம் கமழும் பூக்களாய் அமைதி கொண்ட சுபாவம்!
கோபமது கொள்ளா நேயம்! இரக்கம் கொண்ட நல் இதயம்!
அன்பு கொண்ட உள்ளம் எதையும் தாங்கும் இதயமாய் வாழ்ந்தீர்கள்.
உங்கள் இருவரையும் எம்மால் மறக்க முடியவில்லையே.
காலத்தின் முடிவுரையில் இறைவனடி கலந்துவிட்டீர்கள்
பிரிந்துவிட்ட எம் உறவு மறவாது உங்களை.
உங்களது ஆன்ம சாந்திக்காகவும் விண்ணிலே இறைவனோடு வாழவும்
என்னாளும் வேண்டி நிற்கின்றோம்.

*பிரிவால் துயருறும், திரு.ச.சிங்க்ராயர் குருஸ், திருமதி சாராள் லியோன், அருட்சகோதரி தியோப்பின் (றெம்சி), கொன்சி, ஜென்சி, சௌமி, ஜென்ஸ்ரன். தலைமன்னார்.*

## 5ம் ஆண்டு நினைவு

மலர்வு
10 - 03 - 1966



உதிர்வு
04 - 11 - 2000

### திருமதி. யூஜினியா யேசுதாசன்
### (கன்னாட்டி - அடம்பன்)

"கிறிஸ்துமீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர்." (1தெச 4:16)

இரக்கம் மிகுந்த இயேசுவே, நன்மையின் உருவே, இவ்வுலகத்திலே பிறந்து இயேசுவின் இனிய நாமத்தில் நல்லதொரு உறவுப் பொக்கிஷமாய் வாழ்ந்து எம்மிடம் இருந்து உம் பதம் வந்துவிட்ட எம் அன்னையைக் கருணைக் கண்கொண்டு பாரும். இரக்கத்தின் உறைவிடமாகிய உமது இதயத்தினுள் ஏற்றருளும்.

இவ்வுலக வாழ்விலே இவர் செய்த பாவங்களை மன்னித்து நித்திய பேரின்ப இராச்சியத்தில் சமாதானமாய் இளைப்பாறச் செய்யும்.

*இவரின் பிரிவால் துயருறும்*
*கணவன், பிள்ளைகள், தாய்,*
*உற்றார் உறவினர்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு
21 - 05 - 1945



உதிர்வு
22 - 11 - 2004

### திருமதி.ஆறுமுகம் லோகம்பால்
### (அடம்பன் - மாளிகைத்திடல்)

வற்றாத அன்பினைப் பொழிந்து அதில் இறுதிவரை எம்மை நனைத்திட்ட எங்கள் அன்பு அம்மா! எம் குடும்பத்தை கோயிலாக்கி அதில் அணையா தீபம் என உயர்ந்து நிற்கும் நின் பாதங்களில் சரணாகதியாகி நின்று எம் கண்ணீர் பூக்களால் உம்மை அஞ்சலி செய்கிறோம். இறுதிவரை உம் நினைவுகளில் கரைந்து உம் பாதையில் நாமும் நடந்து இறைவனின் சன்னிதானத்தில் என்றும் சங்கமம் ஆக வேண்டி நிற்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்,*
*அன்புக் கணவர் ஆறுமுகம்,*
*பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,*
*மருமக்கள் உற்றார் உறவினர்.*
*தகவல்: ஆ. வடிவேல் (மகன்)*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு
15 - 03 - 1941



உதிர்வு
04 - 11 - 2004

### திரு.பெ.பாலசுந்தரம் (பாலசிங்கம்)
### (இத்திக்கண்டல் - அடம்பன்)

பாசத்திற்கு இருப்பிடமாய் நேசத்திற்கு இலக்கணமாய் துலங்கியவரே ஆண்டொன்றுதான் மறைந்தாலும் உம் அன்பு எம்மைவிட்டு நீங்காதையா! நீர் எம்மோடு மகிழ்ந்த நாட்களை இன்று நினைக்கும்போது எம் உள்ளம் மகிழுதையா. உம் நேசமடியினில் தவழ்ந்த நாட்களும் உன் அரவணைப்பினால் வாழ்ந்த நாட்களும் என்றுமே என் மனமெனும் வீணையை விட்டு நீங்காதையா! உன் ஆன்மா இறைவனடியில் உறங்க வேண்டுகின்றோம் எந்நாளுமே.

இவரது ஆன்ம சாந்திக்காய் 04. 11. 2005 அன்று இத்திக்கண்டல் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு
30 - 10 - 1934



உதிர்வு
29 - 10 - 2004

### திருமதி. ச.செபஸ்தியம்மா குலாஸ்
### (சின்னமலர் - வங்காலை)

"கர்த்தர் நல்லவர் அவருடைய நாமத்தை கீர்த்தனம் பண்ணுங்கள். அது இன்பமானது"

கர்த்தருக்குள் வாழ்ந்து மறைந்து ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததே, உங்கள் இனிய வதனம் என்றும் எங்கள் இதயங்களை வருடுதே.

அன்றில் பறவைபோல் ஐயாவுடன் இவ்வுலகில் உயிராய் வாழ்ந்ததுபோல் விண்ணுலகிலும் ஒன்றாய் இணைந்து அக்களிப்புடன் இறைவனை இறைஞ்சிட இதமாய் வேண்டுகின்றோம் அம்மா.

*என்றும் உங்கள் நிறைவில்,*
*அருமைப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.*

தகவல்: எஸ். சூசைநாயகம் றெவ்வல்,
அகில இலங்கை சமாதான நீதவான்.
வங்காலை - 9

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு
13 - 09 - 1981



உதிர்வு
29 - 10 - 2002

### செல்வன். யோர்ச் வெனிஸ்டன்
### (பெரியபண்டிவிரிச்சான்)

குடும்பத்தில் ஒருவனாய் இருபத்தொராண்டுகள் நீ குற்றங்குறையில்லா குலவிளக்காய் வாழ்ந்தாயே, தம்பியென்று எல்லோரும் பாசமுடன் அழைத்தோமே. விம்மி அழ வைத்து விட்டு எங்கு சென்றாய்? எந்தையாய் இருந்தெம்மைக் காத்திட்ட தெய்வமே, எம் அன்புச் சோதரனே நீங்கள் ஊரையும் உறவையும் விட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று என்ன முன்நூறு சென்றாலும் உம் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது.

உன் ஆன்மா சாந்திபெற ஆறாத் துயருற்று அஞ்சலித்தோம் அன்பனே.

*இவரின் பிரிவால் துயருறும் அன்பு பெற்றோர், சகோதரிகள், சித்திமார், மருமக்கள், சித்தப்பா. நண்பர்கள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 43
## இணைச்சட்டம் - 24 - 34

உங்கள் விடைகளை 10. 12. 2005க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | | | 03 | | | | |
| | | | 04 | | | | | | | |
| | | | | * | * | | | | | |
| | 05 | | | | | | 06 | | | |
| | * | 07 | | | | | | 08 | | |
| * | | | | | | 09 | * | | | * |
| 10 | | | | | | | | | 11 | * |
| | | | | | | | | 12 | | 13 |
| | | | * | | * | | | | 14 | |
| * | 15 | | | 16 | | | | | | |

### இடமிருந்து வலம்

1. உன் களஞ்சியங்களிலும், நீ மேற்கொள்ளும் ..................... அனைத்திலும் நீ ஆசி பெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார்.

3. அவனது கைகள் அவனுக்குப் போதுமானது. ......................... (2வது எழுத்து, இறுதியாக நிற்கிறது).

4. ஆண்டவர் கூறியபடியே, அவர் தம் ஊழியர் மோசே ......................... நாட்டில் இறந்தார்.

7. இவர்களுக்குக் கொடுப்பதாக அவர்களின் .........................ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் இந்த மக்களோடு நீ செல்ல வேண்டும்.

10. அக்கற்களின்மீது திருச்சட்டத்தின் அனைத்து ......................... களையும் எழுதி வையுங்கள். (3வது எழுத்து, 4 வதாய் நிற்கிறது.)

12. அவர் உனக்கு ......................... ட வானங்களின் வழியாகத் தமது மாட்சியுடன் மேகங்களின்மீது ஏறி வருவார்.

16. உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னை அடிமைத்தனத்தினின்று .............................

### மேலிருந்து கீழ்

1. இன்று நான் உனக்கு விதிக்கும் உன் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளுக்குச் ..................... அவற்றைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.

2. ஆண்டவர் கூடாரத்தில் ............................. தோன்றினார்.

3. ஆண்டவரே அவனது ......................... ஆசியால் நிரப்பும்.

4. ஆண்டவர் நேருக்கு நேர் சந்தித்த ........................ ப் போல் இறைவாக்கினர் வேறெவரும் இஸ்ரயேலில் இதுகாறும் எழுந்ததில்லை.

7. உனக்கு நன்மைகள் ஈந்து, உன் ......................... விட உன்னைப் பெருகச் செய்வார்.

10. உன் தலைக்கு மேலுள்ள ................ வெண்கலமாகவும், உனக்குக் கீழேயுள்ள நிலம் இரும்பாகவும் இருக்கும்.

13. வலமோ, இடமோ .............................. நடக்காதே.

### வலமிருந்து இடம்

2. அப்போது நீங்கள் .............. அனைத்துச் செயல்களிலும் நீங்கள் நிறைவுபெறுவீர்கள்.

3. ..................... பங்கு அவர் தம் மக்களே! அவரது உரிமைச் சொத்து யாக்கோபே.

6. அவர் தம் மக்களினங்களை ............... அழைத்துச் செல்வார்.

9 உனக்குக் ................ உன் மூதாதையருக்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் உன் கருவின் கனி, உன் கால்நடைகளின் ஈற்றுக்கள், உன் நிலத்தின் பயன்கள் ஆகியவற்றின் நலன்களால் நீ நிறைவு பெறும்படி, ஆண்டவர் அருள்வார்.

11. ஆண்டவர்..................... உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளையிட்டு அக்களியுங்கள்.

12. யோர்தானைக் கடந்து நீங்கள் ................க் கொள்ளப் போகும் மண்ணில் இந்த வார்த்தைகளால் நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.

14. நான் இன்று உங்களுக்குக் ................. யிட்ட அனைத்துக் கட்டளைகளின்படி நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்.

16. அவர் உன்னை விட்டு, .............. மாட்டார்.

### கீழிருந்து மேல்

5. நாற்பது ஆண்டுகள் நான் உங்களைப் பாலைநிலத்தில் கூட்டி ..................

6. வாக்குறுதியுடன் கூடிய இந்த உடன்படிக்கையை உங்களோடு ......................... அவர் செய்து கொள்ளவில்லை. (2வது எழுத்து, இறுதியாக நிற்கிறது.)

7. உன் ......................... மகிழ்வுகொண்டதுபோல், உன் நன்மையின் பொருட்டு உன்மீது மீண்டும் மகிழ்வார்.

8. எனவே உங்கள் ............................ ளின் தலைவர்கள் அனைவரையும், உங்கள் அலுவலர்களையும் ஒன்றுகூட்டுங்கள்.

11. உன் கடவுளாகிய ஆண்டவர் உன் ............................ உன் வழிமரபினர் உள்ளத்தையும் பண்படுத்துவார்.

12. ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவரே ................................. முன் செல்பவர்.

15. அதனால் உன் கடவுளாகிய ஆண்டவர்மீது உன் முழு இதயத்தோடும், அன்பு ......................... (2வது எழுத்து 4வதாய் நிற்கின்றது)

16. ஆனால் உங்களை எவரும் .............. வாங்க மாட்டார்.

---

விவிலியக்
குறுக்கெழுத்துப்போட்டி
இல. 42ற்கான முடிவுகளை,
2005ம் ஆண்டு டிசம்பர் மாத
மன்னாவில் எதிர்பாருங்கள்.

---

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 41ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்.

*இரண்டாம் பரிசு*
ஶ்ரீ. ரேகா,
8ம் வட்டாரம்,
பேசாலை.

*மூன்றாம் பரிசு*
இசைக்கியேல்,
ஜோசவ்வாஸ் நகர்,
பேசாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 116 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 107 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.41ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அ. அருள் மேரி, இல. 327, வீரபுரம், நேரியகுளம்.
2. பூவதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
3. செ. வளன் நியூமன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
4. அ. டிலாணி, சாந்தி புரம், மன்னார்.
5. அ. யோகவதனி, பிள்ளையார்வீதி, வெளிக்குளம்,வவுனியா.
6. வே. நிறோஜன், புனித இராயப்பர் கோவில், உயிலங்குளம்.
7. ஏ.ஏ. லெம்பேட், இல. 125, பெரியபண்டிவிரிச்சான், மடு.
8. எம். மரியமலர், தி. கு. கன்னியர் மடம், ஊர்காவற்துறை.
9. எஸ். கீதா, தரம்10 ஏ. புனித ஆனாள் ம.ம. வி, வங்காலை.
10. ஸ். டன்ஸ்சன், அச்சங்குளம், நானாட்டான்.
11. எ. றெகாந்தன், தரம் 6 ஏ, நறுவிலிக்குளம், வங்காலை.
12. வை. டனிஸ்ரா, சாந்திபுரம், மன்னார்.
13. நோ. டியோனி றோச், புனித லூசியா ம .வி, பள்ளிமுனை.
14. கி. அகிலன், சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
15. வே.சியாமளா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
16. ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
17. எஸ். அல்போன்ஸ், நவம், சுவிஸ்லாந்து.
18. யோ. டொறின் யாழினி, ஆவணம், நானாட்டான்.
19. திருமதி. எட்வின் மிரியம், சுவிஸ்.
20. திருமதி. பி. ப. நிருசியா குரூஸ், சென்யூட்வீதி, பேசாலை.
21. செ. றெஜினோல்ட், சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
22. யே. செபமாலை, சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
23. சே. றோசி றெவ்வல், சென் யூட்வீதி, பேசாலை.
24. ம. யஸ்ரின் பிரபாகர், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
25. வசந்தி சத்திய சீலன், எழுத்தூர், மன்னார்.
26. பா. பிலோமினா, கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
27. லீ. டெய்சி, புனித செபஸ் கோவில்வீதி, பெற்றா, மன்னார்.
28. செ.ரட்ணராஜ், மன்.புனித சவேரியார் ஆண். கல். மன்னார்.
29. ஜெ.கி.மரிய இனோசன், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
30. செ. அசம்ரா சாளினி, தி.கு.க. மடம், மன்னார்.
31. செ. மதிவதனி, இரணைமாதா நகர், முழங்காவில்.
32. என். கார்த்திகா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
33. எ. அன்ரசன், வங்காலை - 03, மன்னார்.
34. ந. அமலநாத், புதுக்கமம், உயிலங்குளம்.
35. நீ. மடுச்செல்வி, பரிகாரிகண்டல், முருங்கன்.
36. ஜீ.தமிழ்ச்செல்வி, 12/6 கெனடி வீதி, நாவாந்துறை, யாழ்.
37. ஏ. செல்வக்குமார், வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
38. எல். ஒலிவியா பீரிஸ், தி.கு.க.மடம், மன்னார்.
39. செ. ஜெனிஸ்ரா, தி.கு.க.மடம், நானாட்டான்.
40. ச. சராக்லெனோ, பொன்தீவு கண்டல், முருங்கன்.
41. ஞா. கிறீஸ்து ராஜா, சாளம்பன், அடம்பன்.
42. ம. சரண் டயஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
43. பி. தனுசியா, 100/19, சாந்திபுரம், மன்னார்.
44. ஏ. செபயோன் செறான். பாலைக்குளி, உயிலங்குளம்.
45. ஏ. தீபிகா, தி.கு.க.மடம், மன்னார்.
46. அ.றெஜினோகூஞ்ஞு, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
47. பீ. ஆன் டிலைக்ஷன், நறுவிலிக்குளம், வங்காலை.
48. கி. தயாலினி டலிமா, தி. கு. க. மடம், மன்னார்.
49. சியாமளா கி. ராஜிவஸ்தான் மடுமாதா வீதி, சி.கடை, மன்.
50. ஜே. ஜென்சி, 8ம் வட்டாரம், பேசாலை.

---

### கத்தோலிக்கருக்கென தனியான ......

16ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையில் இன்றுவரை பல்வேறு வகை தன்மை கொண்ட கட்சிகள் உள்ளன. தமிழ், முஸ்லிம், சிங்களம் என இனங்களுக்கிடையிலான கட்சிகள் தோன்றியுள்ளன. இவற்றில் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்திற்குச் சென்று தமது இனங்களின் நன்மைக்காக பாடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் வாழ்கின்ற கத்தோலிக்க மக்களுக்காக ஒரு கட்சியை தொடங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறே தொடங்குவதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இலங்கையில் பருத்தித்துறை தொடக்கம் தேவேந்திரமுனை வரை கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் சமய ரீதியாக பாதிக்கப்படுவது உண்மையான விடயம். அவர்களது கலாசாரம், தொழில், கல்வி ஆகிய பல்வேறு விடயங்கள் கவனமாக வளர்க்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கு ஒரு கட்சி அவசியம் என்பதை புத்திஜீவிகள் புரிந்துகொள்வார்கள் என்று கூறினார்.

---

# நன்றி நவிலல்

20.04.2005 அன்று நடைபெற்ற எனது பொன்யூபிலி விழாவிற்கு சமுகம் தந்து எம்மை மகிழ்வித்த எமது மேன்மை தங்கிய மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கும் மற்றும் அனைத்து அருட்பணியாளருக்கும் அருட்சகோதரர் , அருட்சகோதரிகள் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த நன்றிகளைக் கூறுகின்றேன். இறை ஆசிகளை உங்கள் அனைவருக்கும் விரும்பி நிற்கிறேன்.

*அருட்சகோதரி அமலி டபரேரா,*
*தி.கு.க.மடம், வங்காலை.*

---

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 16 - 12 - 1931



உதிர்வு 09 - 11 - 2003

**திருமதி. குணராசா கத்தறீன்**
**(எமில்நகர், மன்னார்)**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"(அரு11:25)


ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறைவில்லை. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார். அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.

இவரின் பிரிவால் துயருறும்
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

---

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 15 - 11 - 1932



உதிர்வு 26 - 11 - 2001

**பாலதாஸ் (பொன்மனி)**

பாசமுடனே பாரில் உதித்த பாலதாஸ் ஐயா!
பண்புடனே எம்மை நீரும் நேசித்தீரே!
வாசம் செய்த அந்த நாட்கள் - எம் மனதில்
வந்து வந்து செல்லுதையா! இன்றும் என்றும்
ஆண்டுகள் நான்கு ஆனதையா - ஆனால்
அன்பு முகம் என்றும் தோன்றுதையா.
பார் புகழ பல பணிகள் செய்தீர் - இங்கு
பரமன் பணி ஏற்று சென்றீர் அங்கு.
மாதங்கள் மறைந்தாலும் மறையாது உம் நினைவு.
வேதங்கள் வாழும் வரை வேண்டிடுவோம் ஆண்டவனை.

*இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.*

---

### மன்னார் மறைமாவட்டம் .... 1ம் பக்கத் தொடர்.

இரவுணவைத் தொடர்ந்து யூபிலி விழாக் கலைநிகழ்வுகள் நடைபெறும். இவ்விழாவின்போது மன்னார் மறைமாவட்டத்தின் 25 வருடகால வளர்ச்சியை குறித்துக்காட்டும் பல்வேறு ஆக்கங்கள் அடங்கிய யூபிலி மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

இவ்விழாவிற்கு மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து குருக்கள் துறவிகளாக உருவாகி பல்வேறு துறவற சபைகளில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணியாற்றும் அனைவரும் அழைக்கப்படவுள்ளனர். இவ்விழா தொடர்பான - வழிபாடு, கலைநிகழ்வுகள், உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து போன்ற - பல்வேறு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மன்னார் மறைசாட்சிகளை..... 1ம் பக்கத் தொடர்.

மன்னார் ஆயர் அவர்கள் கடந்த மே மாதம் முதல் வாரத்தில் உரோமில் திருத்தந்தையை தனிப்பட்ட முறையில் சந்தித்தபோது இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார். உரோமாபுரியில் உள்ள புனிதர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் பேராயத்திற்கு பொறுப்பான கருதினாலைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டார்.

உரோமாபுரியில் இவ்விடயம் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ள அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் சன்ரூஜி (Santucci OMI) அவர்களையும் மன்னாரில் இவ்விடயங்களைக் கையாள அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா அவர்களையும் மன்னார் ஆயர் அவர்கள் நியமித்துள்ளார்.

## கத்தோலிக்க ஆயர்கள்

# குருக்கள் இறைமக்களோடு நெருங்கிய தொடர்பை வைத்திருக்க வேண்டும்!



### புதிய ஆயர்கள் மத்தியில் திருத்தந்தை

கத்தோலிக்க திருச்சபையில் கடந்த ஓராண்டு காலப் பகுதியில் புதிதாக நியமனம் பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட ஆயர்களை திருத்தந்தை 16ம் பெனடிக்ற் உரோமில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின்போது, கத்தோலிக்க ஆயர்கள் தங்கள் குருக்களோடும், இறைமக்களோடும் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ளல் அவசியம் என்பதை திருத்தந்தை வலியுறுத்தினார்.

ஆயர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆசான்களாகச் செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டதோடு, கிறிஸ்து கொண்டிருந்த நற்செய்தி போதிக்கும் அதே அதிகாரத்தைப் போலவே ஆயர்களும் அதிகாரம் கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார். விசுவாசிகள் ஞாயிறு திருப்பலியில் பங்குகொண்டு திருவிருந்து உட்கொள்ளுவதன் அவசியத்தையும் பக்தியின் மேன்மையையும் உணருமாறு ஆயர்களும் குருக்களும் எடுத்துக் கூறவேண்டும் எனத் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

ஆயர்கள் தங்கள் பணிகளில் எதிர்கொள்ளும் சவால்கள், நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் ஆண்டுதோறும் புதிய ஆயர்களுக்கான ஒன்றுகூடலை திருப்பீட ஆயர் பேராயம் நடத்தி வருகிறது. கடந்த 12 மாதங்களில் தமிழகத்தில் 2 ஆயர்கள் உட்பட 110 புதிய ஆயர்கள் நியமனம் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய் சஞ்சிகையின் 50வது சிறப்பிதழ்

கொழும்பு மறைமாவட்ட தமிழ் பேசும் மக்களின் மாதாந்த சஞ்சிகையான தாய் 50வது இதழை சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. கொழும்பு யோசவ்வாஸ் மன்றத்தினால் வெளியிடப்படும் இச்சஞ்சிகை கொழும்பில் கோலாகலமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. கொழும்பு மறைமாவட்ட தமிழ் மக்களின் ஆன்மீக மற்றும் அறிவுசார் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு 'வியாகுலத் தாய்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகை குறுகிய காலத்தில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இச்சிறப்பிதழில் ஈழத்து கத்தோலிக்க எழுதாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் விபரங்களை வெளியிட்டு அவர்களை அடையாளங்கண்டு அறிமுகப்படுத்தியமை பாராட்டப்படவேண்டிய ஓர் விடயமாகும்.

## கத்தோலிக்கருக்கு தனியான அரசியல் கட்சி தேவை!

### – அமைச்சர் மில்ரோய் –

பருத்தித்துறை தொடக்கம் தேவேந்திரமுனை வரை வாழும் கத்தோலிக்க மக்களின் கலை, கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கென தனியான ஒரு கட்சி அவசியமென கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்தார். வென்னப்புவ பிரதேசத்திலுள்ள நைனாமடம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நைனா மடம் அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## இணையத்தளத்தில்

திருமலை மட்டுநகர் மறைமாவட்டம் நவீன கணிப்பொறி யுகத்தின் பிரதான அங்கமாகிய இணையத்தளத்தில் (website) திருமலை மட்டுநகர் மறைமாவட்டம் காலடி பதித்துள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் 16ம் திகதி ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை கூடியிருந்த குருக்கள் துறவிகள் முன்னிலையில் பட்டனை அழுத்தி மறைமாவட்ட இணையத்தளத்தினை ஆரம்பித்து வைத்தார். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளம் WWW.trinco-battiDiocese.com எனும் பெயரில் இயங்குகின்றது.

## அயர்லாந்து பயணம்



மன்னார் மறைமாவட்டத்தின் பண்டிவிரிச்சான் பங்கைச் சேர்ந்தவரும் பிரான்சிஸ்குவின் மரியா மறைபரப்புக் கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி கெலன் (FMM) அவர்கள் மறைபரப்புப் பணியை ஆற்றுவதற்காக கடந்த செப்ரெம்பர் 29ம் திகதி அயர்லாந்துக்கு பயணமானார். அருட்சகோதரியின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## அமுதுவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்!



பிரபல தமிழாசிரியரும், கிறிஸ்தவ எழுத்தாளரும், அருட்பணியாளர் சந்திரகாந்தன் அடிகளாரின் தந்தையாருமான இளவாலையைச் சேர்ந்த அடைக்கலமுத்து மாஸ்ரருக்கு அவருடைய எழுத்துப் பணியைப் பாராட்டி யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியுள்ளது. மன்னா பத்திரிகையில் தொடராக வெளியிடப்பட்டுவரும் *"அன்பின் கங்கை அன்னைத் திரேசா"* என்ற தொடரை எழுதி வருபவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது லண்டனில் வசித்துவரும் இவர் இப்பட்டத்தைப் பெறுவதற்காக அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் இவருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

## செபமாலைத் தாசர்களின் மாகாண ஒன்றுகூடல்

செபமாலைத் தாசர் துறவற சபையின் மாகாண ஒன்றுகூடல் முதன் முதலாக வவுனியா மதவுவைத்த குளத்திலுள்ள றோசரி ஆச்சிரமத்தில் கடந்த 15.09.2005 - 20.09.2005 வரை நடைபெற்றது. இதற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையும் இந்தியாவில் இருந்து செபமாலை தாசர் சபையின் உயர் தலைவர் அருட்பணி. K.P. சேவியர் ஆகியோரும் வருகை தந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வை நெறிப்படுத்தி ஒருங்கமைக்க யேசு சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் அந்தோனிப்பிள்ளை அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிகழ்வில் இலங்கையிலுள்ள செபமாலைத் தாசர் சபையின் குருக்களும் அருட் சகோதரர்களும் கலந்துகொண்டு தமது பங்களிப்பை சிறப்பாக வழங்கினார்கள்.

## பிலேந்திரன் அடிகளார் கலாநிதிப் பட்டம் பெறுகிறார்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் அடிகளார் யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடந்த பட்டமளிப்பு விழாவின்போது கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொண்டார்.

"The Establishment of the Jaffna Vicariate - Its Progress and Regressions - from 1796 to 1857" ("யாழ்ப்பாணத்தில் அப்போஸ்லிக்க ஆளுனர் பிரிவு உருவாக்கம் - அதன் வளர்ச்சியும் தடைகளும் - 1796 தொடக்கம் 1857 வரை") என்ற தலைப்பில் இவர் மேற்கொண்ட ஆய்வுக்காகவே இக்கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ர விரிவுரையாளரான இவர் கிறிஸ்தவ நாகரீகத் துறையின் தலைவராக கடந்த ஒரு வருட காலமாக இவர் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார். முன்னாள் யாழ் புனித மாட்டீனார் சிறிய குருமட அதிபரும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி வகுதித் தலைவருமான இவர் தற்போது பாண்டியன் தாழ்வு ஆலய பங்குத் தந்தையாகவும் பணியாற்றி வருகின்றார்.

## ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் வெள்ளி விழா!

### வவுனியாவில் சிறப்பு நிகழ்வுகள்

இயேசுசபை அகதிகள் பணி (ஜே. ஆர். எஸ்.) நிறுவனம் உருவாக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவுபெறுவதை முன்னிட்டு இலங்கையில் உள்ள இயேசு சபை அகதிப் பணியினரின் அலுவலர்கள், பயனாளிகள் அனைவரும் இணைந்து வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய மைதானத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 16ம், 17ம் திகதிகளில் வெள்ளி விழா நிகழ்ச்சிகளை நடாத்தினர். இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவை செய்ய ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பல நாடுகளிலும் இனப் போரால், அரசியல் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்து வருகின்றது. தோழமை, குரல் கொடுத்தல், தொண்டு செய்தல் இதன் குறிக்கோள்ாகும் என நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குநர் அருட்பணியாளர் வின்னி யோசப் தெரிவித்தார்.


வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பிரதேசங்களையும் சேர்ந்த கல்விப் பணியினை முன்னெடுக்கும் சுமார் 1800 பேர் கலந்துகொண்ட இந்நிகழ்வின் நிறைவு நாள் வைபவத்தில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை, ஜே.ஆர்.எஸ். இன் தெற்காசிய இயக்குனர் அருட்பணி. பி. எஸ். அமல், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் தனுஸ்

13.11.2005



வங்காலை தோமஸ்புரியில் வசிக்கும் அன்ரன் பாய்வா சீத்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் (தனுஸ்) தனது முதலாவது பிறந்த தினத்தை தோமஸ்புரியிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார்கள், அம்மம்மா மஞ்சு அம்மையா கெனடி (வங்காலை) தொட்டப்பா ஜெயந்தன், தொட்டம்மா சிரோமி, அப்பையா சந்தியா பாய்வா, அப்பம்மா சித்தப்பா சந்தான், பெரியப்பா அந்தோனி பாய்வா குடும்பம், வவுனியா பூவரசன் குளத்தில் இருக்கும் பெரியப்பா ஆனந் அண்ணாமார்கள், அப்பப்பா சுப்பையா குடும்பம், குட்டி அம்மம்மா தாத்தா குடும்பம்,

மற்றும் அரிப்பில் இருக்கும் பெரியப்பா கீதம் பாய்வா குடும்பம் பஸ்ரிபுரியில் இருக்கும் மாமா சுரேஸ் குடும்பம், சரோ அப்பம்மா குடும்பம் பூட்டி மரிய 1ம் வட்டாரத்தில் இருக்கும் பூட்டி செபமாலை சில்வா மாக்ரெட் அப்பம்மா குடும்பம், தோம்ஸ்புரியிலும் சுகந்த புரியிலும் உள்ள தொட்டப்பா குடும்பங்கள் தொட்டம்மா குடும்பங்கள், வங்காலையில் இருக்கும் பத்தி தாத்தா குடும்பம் மாதிரி கிராமத்தில் இருக்கும் தொட்டம்மா சுஜினா குடும்பம் மற்றும் உற்றார் உறவினர்கள் எல்லோரும் புனித அந்தோனியார் அருள் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். *(தகவல்: கே. மஞ்சு (அம்மம்மா)*

## 3வது பிறந்த நாள் வாழ்த்து





13.11.2005

**செல்வன்** சரோன் லூசியன்

மன்னார் பள்ளிமுனையில் வசிக்கும் அன்ரனி சுரேந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சரோன் லூசியன் தனது 3வது பிறந்த நாளை 13.11.2005 அன்று பள்ளிமுனையில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவ்வளவு காலமும் அன்புடன் பாதுகாத்து பராமரித்து தன் சிறகின் அடியில் வைத்து காத்த இறைவனுக்கு நன்றி கூறி, இவர் கல்வியிலே உயர்ந்து, பல்கலையும் பெற்று பண்பிலே சிறந்து இறைவனுக்கு ஏற்ற வாழ்வை வாழ இறைவன் தானே வாழ்நாள் முழுவதும் தனது அன்பிலும், பராமரிப்பிலும், வளர்த்திடவும் ஒளிமயமான எதிர்காலம் அமைந்திடவும் வேண்டும் என்று, புனித லூசியா அன்னை மூலமாக இறையேசுவின் அருளை மன்றாடி வாழ்த்துவோர்.

*அன்பு அப்பா, அம்மா, ஞானப்பெற்றோர், அப்பம்மா, அம்மம்மா குடும்பம் மற்றும் மாமாமார், சித்தப்பா, சித்திமார் குடும்பம், பெரியப்பா பெரியம்மா குடும்பத்தினர்.*

## திருமண வெள்ளிவிழா



திரு திருமதி. ஜெறாட் குணசீலன் யூலியானா பிளன்டீனா தம்பதியினர்

(ஜேர்மனி)

29.08.2005

29.08.2005 அன்று ஜேர்மனியில் தமது திருமண வெள்ளிவிழாவைக் கொண்டாடும் திரு.திருமதி. ஜெறாட் குணசீலன் யூலியானா பிளன்டீனா தம்பதியினரை இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*அன்புப் பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.